**Mierra Gems & Jewellery**
லண்டனில் பொற்கைவண்ணர்களின் நிர்வாகத்தில் இயங்கும் ஒரே நகை மாடம்
மீரா
ஜுவல்லரி மார்ட்
34, London Road, Tooting,
London SW17 9HP
Tel: 020 8648 7750 / 07958 948 685



A Free Circulated Monthly

# புதினம்

PUTHINAM



**HOMOEO CARE**
லண்டனில் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்
டாக்டர். தியாகராஜன்
Tel: 020 8767 8004,
07833 341 693 /
020 8144 1553



மலர் 16 | JUNE 2013 | இதழ் 1



**SNM PAWN BROKERS**
அனைத்து
தங்க நகைகளும்
இங்கே
அடகு பிடிக்கப்படும்.

**MITHUS JEWELLERS**
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756


# அழிகிறதா ஈழத்தமிழினம்?

**பு**த்தர் சிலைகள் சிங்களத்தின் ஆக்கிரமிப்புச் சின்னங்களாக மாறுகிறது.

திருமலை நகரசபை எல்லைக்குள் நிறுவப்பட்ட, மட்டக்களப்பு மாநகர வாசலில் நிறுவப்படப்போகும், 'யாழ். உங்களை வரவேற்கிறது' வளைவில் இனி குந்தப்போகும் புத்தர் சிலைகள் சொல்ல வரும் செய்தி என்ன?

புத்தர் சிலை நிறுவப்படும் பகுதிகளெல்லாம் புனிதப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்படலாம்.

அங்குள்ள கோவில்களும், தேவாலயங்களும் பலவந்தமாக அகற்றப்படலாம். மக்களும் துரத்தப்படலாம்.

இது கட்டாயம் நடக்குமென்பதற்கு தம்புள்ளை பொருத்தமான சாட்சி.

பௌத்தர்களின் புனிதப் பிரதேசத்தில் பள்ளிவாசல் இருக்கக்கூடாது என்று சொல்லி, காவிகள் தடியைக் கையிலெடுத்தன. இப்போது அங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்களை விரட்ட பிரதேசசபை ஊடாக பொதுபல சேனாக்கள் போர்க்கொடி தூக்குகின்றன.

ஹலாலில் இருந்து புலால் வரை, முஸ்லிம்கள் மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ள பேரினவாத பிக்குகள் கூட்டம், மூதூரில் தேவாலயங்களையும் விட்டுவைக்கவில்லை.

'தமிழ் தேசியம் என்பது மண்ணாங்கட்டி' என்று 'மானுட தேசியம்' பாடுபவர்கள், பௌத்த சிங்கள பேரினவாத பாசிசத்தின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு என்ன தத்துவ விளக்கம் தரப்போகிறார்கள்?

உரிமை கோருபவர்கள் 'இனவாதிகள்', 13 வது திருத்தச் சட்டம் கறிக்கும் உதவாதென்பவர்கள் 'உணர்ச்சிவசப்படுபவர்கள்', இந்தியாவின் விரோதிகள், அமெரிக்க எதிர்ப்பாளர்கள், என்று தேசிய விடுதலைப்போராட்டத்தின் நாடிநரம்புகளை வெட்ட முயற்சிப்பவர்கள், இந்த சிங்களத்தின் 'சிலை' அரசியல் குறித்து என்னசொல்லப்போகிறார்கள்?.



இராவண பலய, சிங்கள ராவய, பொதுபல சேன, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்கிற பெருந்தேசியவாத பாசிச முகமூடிகள் அணிந்த காவிகள் கூட்டமொன்று இலங்கையில் எழுச்சி பெற்றுள்ளது.

ஒரு கையில் புத்தர் சிலையோடும், மறு கையில் தடிகளையும் ஏந்திக்கொண்டு வருகிறார்கள். சிலைகள் நிலங்களை விழுங்கும். நிலங்கள் சிலைகளை நிறுவும். மொழியையும் மண்ணையும் இழந்த இனம், மனிதகுல வரலாற்றின் பக்கங்களில் தொலைந்து போகும்.

வேடிக்கை பார்த்தால், வேகமாய் அழிந்துவிடுவோம்.


**IMPORTANT INFORMATION**
UK IMMIGRATION RULES HAVE CHANGED
UKBA & CAPITA
- Are Chasing to remove immigrants
- You may be one of them!
- Hurry before your are picked! No time to waste!

Call us now on:
020 85428222
020 8682 4494
07769 185 592

Kilc_work@yahoo.co.uk
Kulendran Immigration Law Chambers,
90 High Street, Colliers Wood, SW19 2BT

**UK IMMIGRATION**
கேளுங்கள் - தரப்படும்
உங்களுக்கு UK IMMIGRATION தொடர்பாக ஏதாவது சந்தேகம் இருந்தால் உங்கள் கேள்வியை எழுதி – உங்கள் பெயர் முகவரி – தொலைபேசி எண் – மின்னஞ்சல் முகவரியுடன் சுயவிலாசமிட்டு முதல் வகுப்பு தபால் தலை ஒட்டி அனுப்பி வையுங்கள்.
KILC, 90 High Street, Colliers Wood, London SW 19 2BT
e-mail:kilc_work@yahoo.co.uk

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
**LAKSHMIS JEWELLERS**
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# புதினம்
PUTHINAM

**லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்**

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 16 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.


### விடை பெற்றுச் சென்றுவிட்டார்
## சிம்மக்குரலோன் டி.எம்.எஸ்!



91 வயது. 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட திரையிசைப் பாடல்கள். 2,500க்கு மேற்பட்ட பக்திப் பாடல்கள். பக்தி, தத்துவம், காதல், சோகம், வீரம், கோபம், அன்பு எனப் பல ரசங்களால் நம்மை எல்லாம் வசப்ஹபடுத்தி, தமிழ் பாட்டைக் கேட்கின்ற ஆவலை ஏற்படுத்திய டி.எம்.சௌந்தரராஜனின் நினைவு தமிழ் வாழும் காலம் வரை வாழும். உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் மரணமடைந்தார்.

மதுரையில் பிறந்த டி.எம்.எஸ் இன் இயற்பெயர் துகுலுவ மீனாட்சி அய்யங்கார் சௌந்தரராஜன். '1950இல் 'கிருஷ்ண விஜயம்' படத்தில் 'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி' என்ற பாடலைப் பாடி திரை உலகுக்கு அறிமுகமானார்.

தமிழ் திரையுலக ஜாம்பவான்களான எம்.ஜி.ஆர், சிவாஜி மற்றும் ஜெமினி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், முத்துராமன், நாகேஷ், ரஜினிகாந்த், கமல்ஹாசன் எனப் பல பிரபலங்களுக்கு குரல் கொடுத்துள்ளார். 2012ஆம் ஆண்டு ஏ.ஆர். ரஹ்மான் இசையில், செம்மொழி மகாநாட்டுக்காக 'செம்மொழியான தமிழ் மொழியாம்' என்ற பாடல்தான் அவரது குரலில் பதி[illegible] கடைசிப் பாடல். சென்னை மந்தைவெளியில் அவர் வாழ்ந்து வந்தார்.


**தயாராகிறது!**
**எழுத்தாளர் விபரத்திரட்டு**

ஈழத்து எழுத்தாளர்களின் பெயர், புனைபெயர், பிறந்த இடம், பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், கல்விகற்ற பாடசாலைகள், படைப்புகள் வெளிவந்த சஞ்சிகைகள், வெளியிட்ட, பதிப்பித்த நூல்கள், பரிசுகள், விருதுகள், முகவரி, மின்னஞ்சல் ஆகியவற்றைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

MULLIAMUTHAN
34, REDRIFFE ROAD PLAISTOW E13 OJX
email: mulliamuthan@gmail.com

DTP
DESIGN
PRINTING
www.satyanlayout.com



துவாரகா வசந்தனுக்கு
முதலாவது பிறந்த நாள்

லண்டனில் வாழும்
வசந்தன் - சுபாஷினி
தம்பதியின்

அருமைக்கு அருமையாகப் பிறந்த செல்வப் புதல்வி துவாரகாவின் முதலாவது பிறந்த நாளை அப்பா - அம்மா சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். துவாரகா குஞ்சுக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

# குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்

## IMMIGRATION APPLICATIONS AND APPEALS

- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் FRESH APPLICATIONS
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பங்கள்
- இலங்கை - இந்தியாவில் விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடுகள்.
- குழந்தைகள் 7 வருடங்கள் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடுகடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- அய்ரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர் / திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

VISITOR & DEPENDENT VISA - HUMANRIGHTS CLAIM IMMIGRATION
DETENTION MATTERS - BAIL APPLICATIONS

- SOCIAL WELFARE BENEFITS - VISA EXTENSIONS
- ENTRY CLEARANCE APPLICATIONS (SPOUSE - FAMILY REUNION VISITOR - SETTLEMNT - STUDENT - PROSFECTIVE STUDENT)
- POINTS BASED APPLICATION: TIER 1 - TIER 5

(Student, worked Enterpreneur visas)

மொழிபெயர்ப்பு சேவை தமிழ் - சிங்களம்

kill - 90 high street collers wood, london sw19 2BT 0208 682 4494
0208 5428222 07769185592, e-mail: kilc_work@yahoo.co.uk

**தாயாரைப் பார்க்க உதவியாளர் தேவை**

லண்டன் Tooting பகுதியில், வயதான தாயார் ஒருவரைப் பார்ப்பதற்கு கருணையும், பாசமுள்ள ஒரு பெண்மணி தேவை. காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0208767 8004
077 353 46890

# தமிழ் இலைகள்
## Tamil pages



ஆசிரியர்கள்
தி. சிறிகந்தராஜா ஆ. ஞானேந்திரன்

20வது ஆண்டாக, சித்திரை புத்தாண்டில் லண்டனின் வர்த்தக களஞ்சியமாக வெளிவந்து விட்டது. லண்டனிலுள்ள அனைத்து தமிழ் கடைகள், கோயில்கள், சமூக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
020 85432126 020 8942 8745
07718003838 0771 800 3839

# தீபம் தொலைக்காட்சிக்கு என்ன நடந்தது

***ப**ன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக லண்டனில் இயங்கிக் கொண்டிருக்கும் 'தீபம்' தொலைக்காட்சி ஈடாட்டம் கண்டு கொண்டிருக்கிறது. உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி என்றும், ஐரோப்பிய மத்திய கிழக்கு நாடுகளில் 24 மணி நேரமும் ஒளிரும் தொலைக்காட்சி என்றும் பெருமைக்குரியதாகக் கட்டி எழுப்பப்பட்ட ஒரு நிறுவனத்தில் முதுகெலும்புகளாகப் பணியாற்றியவர்கள் பலர். அந் நிறுவனத்துக்குள் நுழைய முடியாமல், அவர்களது பணி கேள்விக் குறியாகப்பட்டுள்ளது.*

இரண்டாயிரம் ஆண்டு ஜூலை மாதம் Tele Europe LTD என்ற பெயரில் பாபு என்ற செல்வகுமாரும், கோடீஸ்வரரான துரைசாமி பத்மநாபனும் 'தீபம்' தொலைக் காட்சியை ஆரம்பித்தார்கள். அப்போது Hounslow வில் மாட்டின்டேல் ரோட்டிலுள்ள கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. Tele europe Ltd. என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், சில காலத்தின் பின் East West Broadcast, Ltd. என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு, துரைசாமி பத்மநாபன் முழு உரிமையாளராக்கப்பட்டு, செல்வகுமார் பொது முகாமையாளராக்கப்பட்டார். Hounslow வில், Staines ரோட்டிலுள்ள Eubury Centre இல் உள்ள கட்டடத்தில் இயங்கியது.

ஈழத் தமிழர்களுக்கு என்று ஒரு தமிழ்த் தொலைக்காட்சி என்ற சிறப்போடு, பணியாளர்களின் அர்ப்பணிப்போடு, நிகழ்ச்சிகளை அளித்து வந்த 'தீபம்' தொலைக்காட்சிக்குப் பேரிடி ஒன்று எதிர் நோக்கியது. 'தீபம்' உரிமையாளரும், தொழில் அதிபரும் கோடீஸ்வரர் என்று பெயர் பெற்றவருமான பத்மநாபன், கடந்த வருடம் நவம்பர் மாதமளவில், எதிர்பாராத விதமாக நிதி மோசடியில் சிக்கினார். பெரும் பண முதலையான இவர், தனது அளவற்ற வருவாயில், ஒரு சிறு பகுதியை கொடுத்தே கடந்த பல வருடங்களாக நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்த 'தீபம்' டி.வி.யை நடத்தி வந்தார்.

கஷ்டங்களும், நஷ்டங்களும், ஒன்றன்பின் ஒன்றாகத் தலையில் விழ, அதனை விட்டு அவர் விலகவேண்டிய கட்டாயத்துக்குள்ளானார். 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்று நினைத்தோ, என்னவோ, முழுக்குப் போட்டார். செல்வகுமார் தாங்கிக் கொண்டு, புதிய 'முதலாளி'களைத் தேடி அலைந்தார். தொலைபேசி அட்டை மூலம், பண மழையில் நனைந்து கொண்டிருக்கும் சில புள்ளிகள் வாங்குவதற்குத் தயாராக இருந்தபோதும், நாபன் மாதிரி ஏற்றுக் கொள்கிற பக்குவம் அவர்களுக்கு இருக்கவில்லை.

அந்தச் சமயத்தில்தான், நோர்வேயிலுள்ள ஒருவர், செல்வகுமாருடன் பேசி, 'தீபம்' தொலைக்காட்சியை வாங்குவதற்கு சம்மதம் தெரிவித்தார். அவருடைய பெயர் ஸ்ரீ எஸ். பாலசுந்தரம். இவர்தான் தமிழ்நாட்டில், 'உச்சிதனை முகர்ந்தால்' என்ற தமிழ்படத்தை எடுத்தவர். அந்தப் படத்துக்கான பாட்டு 'கசற்' வெளியீட்டை லண்டனில் சத்தியராஜ் போன்ற நடிகர்களை அழைத்து, வெளியீட்டு விழா, சில நூறு பேருடன் லட்சக்கணக்கான பணச் செலவுடன் நடந்தது. படம் பெரும் தோல்வி. ஆனாலும், ஈழ உணர்வுப் படம்.

'தீபம்' தொலைக்காட்சியை வாங்கிய நபர், நோர்வேகாரர் - அதுவும் 'அற' விலைக்கு வாங்கியதாகத்தான் கேள்வி. அவர் நோர்வேயைச் சேர்ந்தவராக இருப்பதால், அவரது பெயரில் வாங்க முடியாது. கிடைத்த செய்தியின் படி, COVENTRY இல் வாழும் தொழில் அதிபரான கமலநாதன் என்பவரின் பெயரிலேயே பதியப்பட்டுள்ளது. இப்போது 'தீபம்' தொலைக்காட்சி குளோபல் மீடியா அன்ட் என்ரரைன் மன்ட் என்ற பெயரிலேயே இயங்குகிறது. இந்த நிறுவனத்தில், பல மருத்துவர் சிவ கணேஷ், பஞ்சகுலசிங்கம், ஸ்ரீபன் புஸ்பராசா கருணாசாமி ஆகியோருடன் கணக்காளரான ஸ்ரீ. எஸ். பாலசுந்தரம் செயற்படுகிறார்.

இப்போது 'தீபம்' புதிய இயக்குனராக ஸ்ரீ எஸ்.பாலசுந்தரம் செயல்பட்டாலும், பிரித்தானிய பிரஜையான கமலநாதனே இயக்குனராகச் செயல்படத் தகுதி பெற்றவர்.

'தீபம்' தொலைக் காட்சியில், நிகழ்ச்சிகளின்போது, அடிக்கடி 'வானவில்' என்ற ஒரு பத்திரிகை விளம்பரம் ஒளிபரப்பப்பட்டது. இது ஒரு மாத இதழ். நோர்வேயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த இந்த இதழை நடாத்துபவரும் இந்தக் கோஷ்டிதான். ஸ்ரீ.எஸ். பாலசுந்தரத்தின் மகளைத் திருமணம் செய்த ரூபன் என்பவர்தான் இதன் ஆசிரியர். மீடியாத் துறையில் சிறிது ஆர்வமுள்ளவர்.

கைமாறிய பின்னர், நிகழ்ச்சிகளில் பல மாற்றங்கள் வரப்போவதாக அறிவிக்கப்பட்டது. இப்போது அறிகிற செய்திகளின்படி,

குழப்பம்தான் நடந்திருக்கிறது. உள்ளே குழப்பமாகப் பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதால், 13.04.2013 அன்று புதிய தலைமைக் கோஷ்டி சிவ கணேஷ், தில்லையம்பலம், ரமணன், பஞ்சகுலசிங்கம், ஸ்ரீ.எஸ். பாலசுந்தரம் ஆகியோர் முதல் தடவையாகப் பணியாளர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

கோமதி சுரேன் என்பவரும் அங்கு பணியாற்றுபவர். அவர் மீது ஏனோ பணியாளர்கள் வெறுப்புற்றிருந்தார்கள். அவர் தங்கள் வேலைகளில் தலையிடுவதை விரும்பவில்லை. இதனைத் தெரிவித்ததைத் தொடர்ந்து சிலர் பின்வருமாறு நியமிக்கப்பட்டார்கள்.

முகாமையாளர்கள்: செல்வகுமார், ரூபன், நிர்வாகப் பொறுப்பு: கோமதி சுரேன், செய்திப் பொறுப்பு: ராஜ்குமார், நிகழ்ச்சிப் பொறுப்பு: சாம் பிரதீபன், எடிட்டிங் பொறுப்பு: முத்துராமன், என்கோடிங்: கரிகாலன், கலையகம்: சுரேஷ்கரன். இதன்பின்னர் நோர்வே கோஷ்டி சென்று விட்டது.

இரண்டு வாரம் கழித்து சுமுகமான ஒரு சூழ்நிலை ஏற்படுமென்று பணியாளர்கள் நம்பியிருந்த நேரத்தில், 8.5.2013 அன்று 'வானவில்' ரூபனிடமிருந்து வந்த அதிரடியான அறிவிப்பு, பணியாளர்களை நிலைகுலையச் செய்துவிட்டது. ''மே 15ம் திகதியிலிருந்து ஊழியர்கள் அனைவரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். விரும்பினால் சம்பளம் இன்றி வேலை செய்யலாம்.''

அச் சமயத்தில் ஏப்ரல் மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை. கேட்டதற்கு, மே 8இலும் மே 15 இலும் வழங்கப்படும் என்று ரூபன் தெரிவித்தார். தற்காலிக வேலை நீக்கம் செய்யும் முடிவை எழுத்தில் தருமாறு பணியாளர்கள் கேட்டார்கள்.

அன்றாட வாழ்வைக் கொண்டு செலுத்துவதற்கே மாதச் சம்பளத்தை நம்பியிருந்த ஊழியர்கள் செய்வது அறியாது திகைத்தனர். பெரிய யூனியனான BROAD-CASTING ENTERTAINMENT CINEMATOGRAPH THEATRE UNION _ BECTU இன் தயவை நாடினர். அவர்கள் கை கொடுத்தனர். இந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த பெண் பிரதிநிதி ஒருவர், ''சம்பளம் வழங்கப்படாது என்ற பட்சத்தில் வேலைக்குச் செல்ல வேண்டியதில்லை. ஆனால், வேலைக்கு அழைக்கப்பட்டால், அவர்கள், மீண்டும் வேலையைப் பொறுப்பேற்க வேண்டும்'' என்று பணியாளர்களை சந்தித்தபோது கூறியிருக்கிறார்.

யூனியனின் ஆலோசனையை ஏற்று நிர்வாகம் சிலரை வேலைக்கு அழைத்துள்ளது. அவர்கள் திரும்பியுள்ளார்கள். கணக்காளர்: சேகர், விளம்பரம்: அன்ரன் மரியதாஸ், கரிகாலன் (என்கோடிங்), சுரேஸ்கரன் (கலையகம்)

கோமதி சுரேன் யூனியனில் பதிந்து இருந்தாலும், அவர் புதிய நிர்வாகத்துடன் 'ஒட்டி'க் கொண்டு இருப்பதாகப் பணியாளர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். செல்வகுமார் யூனியனில் இல்லை.

மே மாதச் சம்பளம் முழுவதும் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. 27 பணியாளர்களில் ஐவர் வேலையில் உள்ளார்கள். 22 பேர் வெளியே வாழ்வோடு, போராடிக்கொண்டிருக்கிறார்கள். வங்கிகளில் மாதந்த பணம் செலுத்த முடியாமலும், மோட்கேஷ் கட்ட முடியாமலும், இன்றும் அன்றாடம் எத்தனையோ, கஷ்டங்களை பணியாளர்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ள நிலையில், உலகச் செய்திகளைச் சொன்ன 'தீபம்' இப்போது பெரும் செய்தியாகி விட்டது.

● *தமிழன்*

## கோடீஸ்வரர் பத்மநாபன் குற்றமற்றவர்!

**மு**ன்னாள் 'தீபம்' தொலைக்காட்சி உரிமையாளரும், கோடீஸ்வரருமான துரைசாமி பத்மநாபன், மிகப் பாரதூரமான நிதி மோசடி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மே மாதம் 21ம் திகதி சதக் கிரவுண் கோர்ட்டில் நடந்த இவ் வழக்கு விசாரணையின்போது, அவர் மீது எவ்வித குற்றமுமில்லை என்று விசாரித்த பிரதம நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார். THROWN OUT OF COURT என்று ஆங்கிலச் செய்தியில் அவர் வழக்குப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராதரவு

Lycamobile
Call the world for less

இணை ஆதரவு

GTV

## இந்து தமிழ் கலாச்சார சங்கம் [என்பீல்ட்]

பெருமையுடன் வழங்கும்

### ஐரோப்பாவின் மாபெரும் நடனப் போட்டி

# சலங்கை விநோதம் 2013

தகுதிச்சுற்று 10, 11 - ஆவணி - 2013

பரிசுத்தொகை
£ 5000

31/07/2013
வரை விண்ணப்பங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்

## இறுதிப்போட்டி 25-08-2013

இணை ஆதரவு

INFORMATIONS WILL BE AVAILABLE ON
WWW.AMBAAL.ORG 07712708752

PARTY PARADISE

# நிலம் இழந்த மக்கள் எதிர்கொள்ளும் மாகாணசபைத் தேர்தல்

- இதயச்சந்திரன்

இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் உருவான 13 வது திருத்தச் சட்டத்திற்கும், ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும் என்ன சம்பந்தம் என்று புரியவில்லை.

இந்த சகலரோக நிவாரணியில் ஒன்றும் இல்லை என்பதனை மல்வத்த மகாநாயக்க தேரர், அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவிடம் தெளிவாக விளக்கியதாக அண்மையில் செய்தியும் வந்தது.

தமிழர்களுக்கு சிறிதளவு உரிமையையும் வழங்காத 13 வது திருத்தச் சட்டம் குறித்து, ஏன் அதிகமாக அலட்டிக் கொள்கிறீர்கள் என்பதுதான் தேரரின் ஆறுதல் செய்தி.

ஆனாலும் தேரர்களும், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர்களும், சத்தியேந்திராவும் , இந்த 13 இல் ஒன்றுமே இல்லையென்று சொன்னாலும், அதில் ஏதோ அருமையான மூலிகைகள் இருக்கிறது என்று அடம் பிடிப்பதில் சிலர் உறுதியாக இருக்கின்றார்கள்.

அந்தச் சட்டத்தில் உள்ளவை குறித்து விவாதிக்க இயலாதவர்கள், தேசியத் தலைவரை துணைக்கு அழைப்பதும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த தேர்தலில் தோல்வியைத் தழுவியதால் 13 சரியென்பதும், அடிப்படையில் நியாயபூர்வமான வாதங்கள் போல் தெரியவில்லை.

2008 ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில், 'இந்தியாவுடன் உறவுகளை புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்' என்று தேசியத்தலைவர் கூறியதை, '13 வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டார்' என்பதுபோல் பொழிப்புரை வழங்க முடியாது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் நேசக்கரம் நீட்டியும், சிங்களத்தோடு கைகோர்த்து, முள்ளிவாய்க்கால் பேரழிவிற்கு இந்திய மத்திய அரசு துணை போனது மறுக்க முடியாத உண்மை.

அதேவேளை, இந்துசமுத்திரப் பிராந்திய அரசியல் சூழலில் , இந்தியாவை மீறி, வேறொரு வல்லரசு ஈழத்தமிழ் மக்களுக்கு உதவிட முடியாது என்று வாதிடுபவர்கள், 'சிங்கள தேசம் தமது வரலாற்றுபூர்வமான நட்பு நாடு' என்கிற பல்லவியை எந்நேரமும் பாடும் ,இந்திய ஆளும் அரசியல் தலைவர்களின் கீதம் பொய் என்று கூறுவார்களா?.

சம்பூரில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களை, அங்கு குடியேறவிடாமல் தடுக்கும், அனல் மின்நிலைய ஒப்பந்தத்தை நிறைவேற்றத் துடிக்கும் இந்தியாவின் தவறான போக்கினை இவர்கள் ஏன் தட்டிக்கேட்பதில்லை?.

பலாலி விமான ஓடுபாதை புனரமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி போன்ற பல திட்டங்கள் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று அவசரப்படும் இந்திய அரசு, அங்கு தமிழ் மக்களின் பூர்வீக மண் சிங்களத்தால் பறிக்கப்படுவது குறித்து ஏன் வாய் திறக்க மறுக்கின்றது?.



வட மாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினாலும், பௌத்த சிங்களப்பேரினவாத அரசானது, தனது நில அபகரிப்பினை நிறுத்துமென்று உறுதிபடக் கூற முடியுமா?.

இந்தக் கேள்விகளுக்கான பதில் மக்களுக்குப் புரியும். இது குறித்தான தெளிவான பார்வையில், ஈழத்தமிழ் மக்கள் ஒத்த சிந்தனையோடு, ஒற்றுமையாகவே இருக்கின்றார்கள்.

மாகாணசபைத் தேர்தலில் ஈடுபட வேண்டும், 13 வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும், இந்தியா எது செய்தாலும் அதனை அனுசரித்துச் செல்ல



வேண்டும் என்பவர்களே மக்களைக் குழப்ப முயற்சிக்கின்றார்கள்.

மக்கள் மீது கருத்துத் திணிப்பு மேற்கொள்ள விரும்புவோரிடம், தாம் என்ன சொல்ல வருகிறோம் என்பது குறித்தான குறைந்த பட்ச புரிதலாவது இருக்க வேண்டும்.



இலங்கை இந்திய ஒப்பந்தமானது, இரு நாடுகளுக்கிடையே செய்து கொள்ளப் பட்ட உடன்பாடு. அமெரிக்காவின் உள் நுழைவினைத் தடுக்க, ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்தி இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தமே இது.

இலங்கைத் துறைமுகங்களை எந்தவொரு நாட்டிற்கும் தாரை வார்க்கக் கூடாது என்பதுதான் இந்த ஒப்பந்தத்தில் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்திற்கு இதனால் என்ன நன்மை என்று பார்த்தால், தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட கிழக்கு

**2008ம் ஆண்டு மாவீரர் தின உரையில், 'இந்தியாவுடனான உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறேன்' என்று தேசியத் தலைவர் கூறியதை '13வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டார்' என்பதுபோல பொழிப்புரை வழங்க முடியாது.**

என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

அது கூட 'வடகிழக்கு எமது தாயகம்' என்கிற பிறப்புரிமையை மறுக்கும் வகையில், மாகாண இணைப்புக் குறித்து கிழக்கில் வாக்கெடுப்பு நடாத்தப்படல் வேண்டும் என்கிறது.

இன அடிப்படையில் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்றுக்கொண்டு, 'வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டுமா' என்கிற வாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்படுவது நியாயமானதா?.

'மூவின மக்களும் சம எண்ணிக்கையில் வந்தது எவ்வாறு?' என்பதை கல்லோயா வரலாற்றிலிருந்து ஜே.ஆர் புரிந்து கொண்டாலும், ராஜீவ் காந்தியாலும் அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களாலும் தெரிந்துகொள்ள முடியவில்லையா?.

கிழக்கிலுள்ள அம்பாறை மாவட்டம் தவிர்த்த, ஏனைய வட கிழக்கு மாவட்டங்கள் இணைந்த மாகாணசபையா? அல்லது இரண்டு மாகாணங்களும் சேர்ந்த தற்காலிக இணைப்பா? என்கிற சதி நகர்வினை ஜே.ஆர். முன்வைத்த போது, அம்பாறையை நீக்குவதை விடுதலை இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற செய்தியும் உண்டு.

அம்பாறையைத் தவிர்த்து கிடைப்பதைப் பெற்றுக் கொள்வோமென்கிற அமிர்தலிங்கம் அவர்களின் நிலைப்பாட்டால், விடுதலைப்புலிகள் விசனமுற்றதாகவும் அரசியல் நோக்கர்கள் மத்தியில் அன்று பேசப்பட்டது.

ஒப்பந்த காலத்தில் கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதியொன்றில், இந்திய அதிகாரிகள் மத்தியஸ்தம் வகிக்க, தமிழர் தரப்பிற்கும், இலங்கை அரசதரப்பிற்குமிடையே நிகழ்ந்த உரையாடல்களில் கலந்துகொண்டோரே இதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது அம்பாறை மாவட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசோடு இணைந்து விட்டார். சிங்களக் குடியேற்றத்தால் கிழக்கு மாகாணசபையும் ஆட்சியாளர்வசம் சென்றுவிட்டது. உத்தியோகபூர்வமாக வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில், தாயகக் கோட்பாட்டினை ஏற்றுக்கொண்ட அனைத்து தமிழ் அரசியல் தரப்பினரும் இணைய வேண்டுமென்கிற கோரிக்கையை மன்னார் மாவட்ட மறை ஆயர் ராயப்பு ஜோசெப் அவர்கள் முன் வைப்பதைக் காண்கிறோம்.

மே 11 ஆம் திகதியன்று, ஆயர் தலைமையில் நடைபெற்ற ஒன்று கூடலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளின் உறுப்பினர்களோடு சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பொது வேலைத்திட்டமொன்றின் உருவாக்கத்திற்காக, சுமந்திரன், கஜேந்திரகுமார், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன், சட்டத்தரணி புவிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தமிழ் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படாமல் இறுதித்தீர்வு எட்டப்படுவது தொடர்பில் கூட்டமைப்பிற்கும், தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குமிடையே பலத்த வாக்குவாதம் அங்கு ஏற்பட்டதாக அறிகிறோம்.

அரசியல் தீர்வு குறித்தான இணக்கப்பாடு ஏற்படும் நிலை தோன்றினால் மட்டுமே தம்மால் பொது வேலைத்திட்டமொன்றில் இணைய முடியுமென்கிற கருத்தினை கஜேந்திரகுமார் முன் வைத்திருந்தார்.


அதுமட்டுமல்லாது, ஒடுக்குமுறைக்கெதிராக போராட்டம் நடாத்தும் மக்களுக்கு 13 வது திருத்தச்

***31ம் பக்கம் பார்க்க***

# அன்பின் உருவாய், ஆன்மிக குருவாய் அமைந்த சற்குரு

# ஸ்ரீ சரவணபாபா சுவாமிகள்!

இலங்கையர் கனகசபை அரியரத்தினம்



பக்திமார்க்கம் கொண்ட அமைதியான வாழ்க்கையில் பேரானந்தத்தையும் பரபரப்பான அவல வாழ்க்கையில் துன்பங்களையும் சந்திக்கும் இருவேறுபட்ட சமூகத்தில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட எம்மவர்கள், இன்று தொலைத்துவிட்ட ஏதோ ஒன்றைத் தேடித் தேடி, தம் வாழ்நாளில் பெரும் பகுதியைத் தொலைத்துக் கொண்டிருப்பதை நாம் தினமும் காண்கின்றோம்.

"இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம்தேடி" எங்கெல்லாமோ அலைந்து அலைந்து கடைசியாக முடிவற்ற வெட்டவெளியில் கானல் நீரை தேடி ஓடிக் களைத்து வீழும் மானினமாக நிற்கும் அவர்களின் இன்றைய கையறுநிலை மிகவும் வேதனைக்குரியதாகும். அவர்கள் தேடிய 'அது' உலகில் எங்கும் இல்லை. அவர்களுக்குள்ளேயே ஒளிந்து கிடக்கும் ஒப்பற்ற ஒன்று. அதனைக் கண்டவர்கள் விண்டதில்லை. விண்டவர்கள் கண்டதில்லை என்னும் கவிவரிகளும் அதற்குப் பொருந்தும் வகையில் உள்ளன. அந்த ஆனந்தப் பெருநிலைக்கான விடயத்தை தனித்துவமாக எந்த ஒரு தனி மனிதனாலும் சொல்லியோ, வார்த்தைகளால் விளங்கவைத்துவிடவோ முடியாது. அதனைச்சொல்லி, அதை விளங்கவைத்து, இதயத்தால் உள்வாங்கி, அதனை அனுபவித்து அதனால் கிடைக்கும் பேரானந்தப் பெருவெள்ளத்தில் திளைக்க ஒரு ஆன்மிக குருவை நாடவேண்டும் என்பது மிகவும் இன்றியமையாததாகும். எனவே அத்தகைய குருவின் உதவியை நாடவேண்டிய காலத்தினை நோக்கி நாம் நகர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

காலத்தின் கோலத்தினால் காற்றடித்துக் கலைந்து போன மேகக்கூட்டங்கள் போல் எம்மவர்களின் வாழ்க்கையானது பூமிப்பந்தின் பல பாகங்களிலும், அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தூக்கி வீசப்பட்டு, வீசப்பட்ட வேகத்தில் தன்னிலை மறந்து, தனித்துவங்களைத் தொலைத்து, அந்நியங்களை உள்வாங்கி, அதன் பலனாய் அவலங்களின் வயப்பட்டு இருக்கின்றன. இதயங்கள் இரத்தக்கண்ணீர் வடிக்க, வாழும் அவல வாழ்வில் மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிடத் துடித்துக்கொண்டிருக்கும் மனிதர்களைத்தான் இன்று ஏராளமாகப் புலம்பெயர் வாழ்வில் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய ஏக்கத்தினால் தாக்குண்டு சிதைவுறும் எண்ண அலைகளை எல்லாம் கட்டுக்குள் கொண்டுவந்து, உண்மை நிலையை விளங்கவைத்து, அல்லல் களைந்து, ஆனந்தவாழ்வைக் காட்டும் நிலைக்கு நம்மையெல்லாம் அழைத்துச் செல்லக் கூடிய தனித்துவ நிலையான தயாபரநிலைகொண்ட ஓர் ஆன்மிக குருவை நாம் புலம்பெயர் வாழ்வில் காணமுடியாத நிலையே இத்தகைய துன்பங்களுக்கெல்லாம் காரணமாக அமைந்து விடுகின்றது இந்த உண்மைநிலையை யாரும் அறிந்துகொள்ளாதது மட்டுமல்ல. அந்த அறியாமையைப் போக்க மறுக்கும் தங்கள் பலவீனத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்னும் நிலைப்பாடானது மனித இனத்தின் சாபக்கேடாக அமைந்திருப்பது வேதனைக்குரியதாகும்.

பண்டைக்காலம்தொட்டு கீழைத்தேய மக்களின் ஆன்மிக வாழ்க்கை நெறியையும், அதற்கான வழிகாட்டிகளாக அமைந்த ஞானிகளையும், சித்தர்களையும் தங்கள் ஆன்மார்த்த குருவாக ஏற்று அதன்படி கீழ்படிந்து ஒழுகிநின்று, தங்கள் வாழ்வில் பேரானந்தத்தை அனுபவித்த ஓர் இனம் நம்முடைய இனம். இன்று அல்லற்பட்டு, ஆற்றாது அழுது, கண்ணீரும், கம்பலையுமாக, மடி நிறையப் பணமிருந்தும் மனம் நிறைய அவலங்களைச் சுமந்துகொண்டு, வசதிகள் நிறைந்த வாழ்வமைந்தும், வனாந்தரத்திடை தனித்துவிடப்பட்டதொரு நிலையில் வாழ்வதான உணர்வினையும் கொண்டு வாழுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட தாழ்வான நிலையைக் காண்கின்றோம். அதனை நினைத்து, நினைத்து நாளும் பொழுதும் இறைவனை வேண்டித் தியானித்த சிலரது வேண்டுதல்கள் வீண்போகாத நிலையைக் காணக்கூடியதாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்" பரிவுகொண்ட இறைவன் தானாக வெளிப்பட்டுத், தனித்துவமாக முன்வந்து காட்சியளிக்கும் யுகம் இதுவல்ல என்பதை அனைவரும் முழுமைத்துவமாக உள்வாங்கிக் கொண்டால், எமக்கெல்லாம், எமக்குரிய வழிகாட்டி, வழிநடத்த உரிய குரு நம்முன் வரவேண்டிய நிலையை அவர் உணர்ந்து, அவரே நம் முன் காட்சி தரும் உண்மைநிலைய நாம் உணரமுடியும்.

அத்தகைய குருவடிவாகிக் குவலயம் தன்னில், அருள்நிலைகொண்ட ஆளுனனாக எமக்கு வந்து வாய்த்த சற்குரு சரவணபாபா அவர்கள். அன்பும், ஆற்றலும், தாளாண்மையும், தனித்துவமும் கொண்ட ஆன்மிக குருவாகக் காட்சியளிக்கின்றார். அண்ட வெளியில் பலகோடி ஜீவராசிகள் வளிமண்டலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கையில், அவற்றில்



ஒருசில மட்டுமே நம் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனால் கோடிக்கணக்கான ஜீவராசிகள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அவை அத்தகைய நுண்ணியவை. அவற்றை நாம் காணவேண்டுமாயின் உருப்பெருக்குக் காட்டி என்னும் "மைக்குறஸ்கோப்" தேவைப்படுகின்றது. அதேபோன்று நம் வேண்டுதலுக்கு இணங்கி, நம்தேவையறிந்து நம்முன் தோன்றிநிற்கும் அன்பின் உருவான அந்த ஆன்மிக குருவை நாம் அடையாளம் கண்டுகொள்ள ஆன்மிக ஞானம் என்பது மிகவும் இன்றியமையாததாகும். அப்படியான அன்பின் பெருக்கோடு ஆளுமைகொண்ட பார்வையுடன் சற்குருவினைப் பின்தொடர்ந்து, அவர்தம் வழிகாட்டலை இறுகப்பற்றிக் கொண்டு,

*"பற்றுக பற்றிலான் பற்றை, அப்பற்றைப்*

*பற்றுக பற்று விடற்கு"*

என்னும் பொன்மொழிக்கமைய, நாம் அந்தக் குருவின் திருவடிகளைப் பற்றித் தொடர்ந்து அவர் வழிகாட்டலில் ஆனந்தப் பெருவாழ்வைக் காணும் வழியில் இன்று பயணிக்க வேண்டியவர்கள் என்பதை உய்த்துணர்ந்து செயற்பட வேண்டும்.

பேரானந்தப் பெருவெள்ளத்திலே தோய்ந்து, அமைதியின் ஆனந்தத்தினை அனுபவிக்க யாருக்குத்தான் ஆவலில்லை. ஆனால் அதற்கென ஒரு வழியும், தனித்துவமும் நம்மிடம் வளராத வரை நாம் அதனை எட்ட முடியாது. ஞானிகளும், சித்தர்களும், முனிவர்களும் அதனை அடைவேண்டுமெனின் முதலில் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்று கூறினார்களே! அதன் அர்த்தத்தின் ஆழத்தை எத்தனைபேர்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

பசித்திரு என்றால் உணவை உட்கொள்ளாமல் பசியோடு இரு என்ற அர்த்தமல்ல. ஆன்மிக ஈடேற்றத்திற்கான அறிவைப்பெறும் பசியோடு இருக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

தனித்திரு என்றால், ஊர்சுற்றம் உறவுகளைத் துறந்து தனியாக வாழ்தல் என்னும் அர்த்தமல்ல. உயர்வான வாழ்வியலின் தத்துவார்த்தத்திற்குத் தேவையற்ற உலக ஆசாபாசங்களின் பிடியில் சிக்கித் தவிக்காமல், ஆன்ம ஈடேற்றம் நோக்கிய பாதையில் தனித்துவம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும்.

விழித்திரு என்றால் ஆன்மிக வாழ்வும், அதன்வழியில் கிடைக்கும் பேரானந்தப் பெருவெள்ளத்தை நுகரும் அறிவையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அது கிடைக்கும்பொழுது உள்வாங்கத் தவறாத நிலையில் விழித்திருக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாகும்.

அதனையே ஆன்மிகவாதிகள் சுருக்கமாக வெற்றுக்கோப்பையாய் இரு என்று சொல்லி வைத்தார்கள். ஒருமுறை தவத்திரு யோகர்சுவாமிகளிடம் சென்று ஒருவர், "சுவாமி! தியானம் என்றால் என்ன" என்று கேட்டபோது, சுவாமிகள் "சும்மா இரு" என்று கூறினாராம். அதன் உண்மைப்பொருளை உள்வாங்கி எத்தனைபேரால் அதனைத் தொடர முடிந்தது. இன்று எத்தனைபேர் தங்கள் வசதிகளைப் பெருக்கிக்கொண்டு வாழ்வில் இன்பநிலை என்றால் என்னவென்று தெரியாது, பொருளீட்டலே அதுவென எண்ணி அல்லும் பகலும் அலைந்து திரிந்து துன்பக் கடலில் துயருற்ற வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

வாழ்க்கை வேறு, வசதி வேறு. இரண்டும் ஒன்றையொன்று சந்திக்க முடியாத தொடருந்து வண்டிப் பாதையான தண்டவாளத்தின் இரு கம்பிகள் போன்றவை. மனித வாழ்வில் புறவாழ்வில் இன்பம் துய்ப்பதைவிடுத்து, ஆன்மாவிற்காக வாழும் இன்பகரமான வாழ்க்கையை எத்தனைபேரால் உய்த்துணர முடிகின்றது. அத்தகைய வாழ்வினை நோக்கி "பசுநல்வினை, சிவநல்வினை" என்று சொல்லப்படும் ஆன்ம ஈடேற்றம், ஆன்மிக ஈடேற்றம் என்னும் இரு வழிகளுக்கான நன்மைபயக்கும் செயற்பாடுகளைச் செய்ய எத்தனைபேரால் முடிகின்றது. வாழ்நாள் முழுவதும் ஏதாவது நல்லதைச் செய்துவிடுவோம் என்று யாராவது நினைத்ததுண்டா? நான் செய்யும் பாவங்களுக்கெல்லாம் கோயிலில் ஒரு திருவிழா செய்துவிட்டால் எல்லாம் தொலைந்துவிடும் என்றும், "108 குடம் பாலபிசேகம் செய்கிறேன் ஆண்டவா எனக்கு நல்ல வசதிமிக்க அமைதியான வாழ்வைத் தா" என்று பாலபிசேகம் செய்வதும் அவரவர் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் ஏமாற்று வித்தை. இறைவனையும், தங்களைப்போல் ஓர் பண்டமாற்று வியாபாரியாக நினைக்கும் தன்மை. இதனின்றும் விடுபட்டு உண்மை நிலையொன்றை ஆன்மா உய்த்துணர்ந்து அதன்வழி ஒழுகி நம்மை வீடுபேறெய்தும் நிலை காண வைக்க உண்மைத்துவமான நல்ல சற்குருவை நாடி அவர்சொல்லும் பேரின்பவழியில் பெருநடை கொள்ளவேண்டும். நம் உடம்பானது அறிவுப்பொருள் அன்று. நம் ஆன்மாவானதும் தானாக உணரும் தன்மையதும் அல்ல. அது அறிவிக்க அறிவது. அதனாலேதான் ஆன்மாவைச் "சதசத்" என்று ஞானிகள் சொல்லி வைத்தார்கள். எனவே அறிவிக்க அறியும் தன்மைகொண்ட ஆன்மாவிற்கு உண்மைப்பொருளை அறியத்தரவல்ல ஓர் சற்குரு நிச்சயமாகத் தேவை. அந்த சற்குருவின் அறிவுறுத்தலின்படி, அவரின் வழியைப் பின்பற்றி ஆன்ம ஈடேற்றம் காண வேண்டியவர் நாம். நம் கண்முன் காணும் நம்

**தனித்திரு என்றால், ஊர்சுற்றம்**
**உறவுகளைத் துறந்து தனியாக வாழ்தல்**
**என்னும் அர்த்தமல்ல. உயர்வான**
**வாழ்வியலின் தத்துவார்த்தத்திற்குத்**
**தேவையற்ற உலக ஆசாபாசங்களின் பிடியில்**
**சிக்கித் தவிக்காமல், ஆன்ம ஈடேற்றம் நோக்கிய**
**பாதையில் தனித்துவம் கொண்டவர்களாக**
**இருக்க வேண்டும் என்பதாகும்.**


பெருமைக்கும், பேராற்றல்கொண்ட பேரன்புக்கும் உரிய சற்குரு ஸ்ரீ சரவணபாபா அவர்கள் எமக்குக் கிடைத்த அரும்பெரும் கொடையாகும்.


பசுநல்வினை, சிவநல்வினை என இருநல்வினைகளின் தன்மையை நாம் நன்றாக உணர்ந்துகொள்ளவேண்டும். இதற்கான பல கதைகள் இருப்பினும், இங்கு ஓர் சிறிய கதையைக் குறிப்பிட வேண்டியதாய் உள்ளது. "ஒரு அடியவர் தம் இறைவனிடம் போய், இறைவா! எனது இல்லத்திற்கு வந்து அமுதருந்த வேண்டும்" என்று பலதடவை வேண்டிக் கொண்டாராம். இறைவனும் நேரமிருக்கும்போது வருவதாகக் கூறினாராம். அதன்படி ஒரு குறித்த நாளில் வருவதாக இறைவனும் வாக்குக் கொடுத்தாராம். அதனால் குறித்த தினத்தில் அந்த அடியவர் பலவகைப் பட்சணங்களுடன் இறைவனுக்கு விருந்திற்குத் தயாராக உணவு சமைத்துவிட்டு இறைவன் வருகைக்காகக் காத்திருந்தாராம். அப்போது ஒரு பிச்சைக்காரன் பசியால் வாடி அவரிடம் வந்து பசிக்கு எதாவது தரும்படி கேட்டானாம். அடியவர் அந்தப் பிச்சைக்காரனுக்கு, பழையகஞ்சி இருந்தது, அதனை ஊற்றிக்கொடுத்தாராம். குளிரில் தான் வாடுவதால் ஏதாவது ஆடைதரும்படி கேட்டபோது ஒரு கந்தலான ஒரு போர்வையைக் கொடுத்து, தன்வீட்டுக்கு இறைவன் விருந்திற்கு வரும் நேரம் நெருங்கிவிட்டதால், இறைவன் வரும்போது முன்னே நின்று அசிங்கப்படுத்திவிடுவானே என்று போக்குக்காட்டி, அந்தப் பிச்சைக்காரனை அனுப்பிவிட்டாராம். அன்று முழுவதும் இறைவன் அந்த அடியவரின் வீட்டுக்கு வரவேயில்லை. அதனால் மறுநாள் அதிகாலையிலேயே இறைவனிடம்போய் அந்த அடியவர் கேட்டாராம், "இறைவா நேற்று நீங்கள் வருவதாகச் சொல்லி என்னை ஏமாற்றிவிட்டீர்களே" என்று. அதற்கு இறைவன், "இல்லையே நேற்று நான் உன் இல்லத்திற்கு வந்தேன். பசியோடு வந்த எனக்கு நல்ல இனிய நீராகாரம் கொடுத்திருந்தாய். குளிரினால் நான் வாடியிருந்தபோது எனக்கு நல்ல போர்வையினைத் தந்து உதவினாய். அதை மறந்துவிட்டாயா?" என்றாராம். அப்போது அந்த அடியவர் தன் அறியாமையை நினைத்து மிகவும் வேதனைப்பட்டாராம்.

இந்தக் கதையையே ஓர் ஞானி இருவார்த்தைகளில் "தான் உண்டது பேய் உண்டது, பிறர் உண்டது சிவன் உண்டது" என்று கூறிவைத்தார். சைவசித்தாந்த தத்துவங்கள் உள்ளடங்கிய ஆன்ம ஈடேற்றத்தினைக் காட்டும் வாழ்வியல் மார்க்கத்திற்குச் சொந்தக்காரர்கள் நாம் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே வாழ்வின் உண்மையை அறிய நாம் பெரும் பாதையில் பயணித்துக் களைப்படைந்து போய்விடுவதை விட ஒரு சற்குருவைச் சரணடைந்து அவரது வழிகாட்டலில், அவரது போதனையில் நாம் ஆன்ம ஈடேற்றம் காண முயல்வது சாலச் சிறந்தது. அதனால் வாழ்க்கையில் ஆன்ம ஈடேற்றம் காணும் பயணத்தின் பாதையின் தூரமும் குறையும் என்பதனை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்படியான வகையில் மானிடவர்க்கம் பூவுலகில் அமைதியில்லாத அமைதி, மகிழ்ச்சியற்ற மகிழ்ச்சி, இன்பம் இல்லாத இன்பம், ஒற்றுமை இல்லாத ஒற்றுமை, முன்னேற்றமில்லாத முன்னேற்றம், திருப்தியற்ற திருப்தி என உண்மைத்துவமற்ற வாழ்வினை அனுபவித்துக்கொண்டு தங்கள் வாழ்வின் சந்தோசத்தின் சங்கீதத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது தவித்துத் தடுமாறிக் கொண்டிருக்கும் வேளையில், உலக வல்லாதிக்க நாடுகளோ, பூமித்தாயின் வயிற்றைக் கிழித்து அதனுள், இந்தப் பூமிப்பந்தை கோடிக்கணக்கான துண்டங்களாக பல ஆயிரந்தடவை துண்டுதுண்டுகளாகத் தகர்க்கச் சக்தி வாய்ந்த பல்லாயிரக்கணக்கான அணுவாயுதங்களையும், உயிராபத்தான போர்க்கருவிகளையும் பதுக்கி வைத்துக் கொண்டு, அடுத்தவினாடி இந்த உலகில் என்ன நடக்கும் என மனித குலம் வேர்த்து வியர்வை கொட்டிக்கொண்டிருக்கும் நிலையில் தங்கள் பிராந்திய - பொருளாதார - அரசியல் நலன்களையே முக்கிய கவனமாகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், ஞானிகளும், ஆன்மிக பீடங்களும் உலக அமைதி வேண்டி யாகங்களும், வேண்டுதல் நிகழ்வுகளும் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதன் பெரும் செயற்பாடாக இப்பொழுது சற்குரு சரவணபாபா அவர்கள் தனது ஆன்மிகப் பயணத்தின் முக்கிய பணியாக அதனைக் கருத்திற்கொண்டு 'கோடி நாமார்ச்சனை' என்னும் உலகசமாதானம் நோக்கிய ஒரு செயல்வடிவை நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகின்றார்.

தான் செல்லுமிடமெல்லாம், ஆங்காங்கே ஆன்மிகப் பணிகளையும், தார்மீக உதவிகளையும், அதற்கான திட்டங்களையும் செயற்படுத்தி, அதனைத் தனது அடியார்கள் மூலம் தொடரும் வழியைக் காட்டிவைப்பதுடன், அழிவைநோக்கி விஞ் ஞானத்தால் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கும் இந்த உலகை, அதனின்றும் மீட்கும் வழிகளில் ஒன்றாக உலக சமாதானத்தை நோக்கிய ஆன்மிகப் பயணமும், அதற்கான கேள்விகளும், வேண்டுதல்களும் தற்போது இன்றியமையாதது என்பதை எல்லோருக்கும் அறிவியல் வாயிலாகப் புரிய வைப்பதுடன் அதற்கான நிகழ்வுகளையும் வேண்டுதல்களையும் நடத்துமாறு அன்புக்கட்டளையிட்டுச் செயற்படுத்தி வருகின்றார். அதன் வெளிப்பாடே இந்த வருடத்திற்கான கோடி





அர்ச்சனை என்னும் பாரிய ஆன்மிக நிகழ்வு. அதற்காக சற்குரு அவர்கள் எடுத்துவரும் அளப்பரிய செயற்பாடுகளும், அவரின் அடியார்கள் ஆற்றி வரும் பணிகளும் உலகத்தார் அனைவரையும் பிரமிக்க வைக்கத் தக்கவையாகும்.

இத்தகைய செயற்பாடுகளைச் செய்யும் வகையில் காலத்திற்குக் காலம் பெரும் ஞானிகளும், சித்தர்களும் தோன்றி அதனை வளர்த்தெடுக்கும் பணியில் செயற்பட்டு, வெற்றி கண்டுள்ளதைக் காலம் கணக்கில் எழுதியுள்ளதை நாம் அறிவோம். அந்த வகையில் பாரிய முன்னெடுப்புக்களைச் செயற்படுத்திவரும் சற்குரு சரவணபாபா அவர்கள், உலகின் முக்கிய ஓர் அவதார புருஷராவார். இவர் முரளிகிருஷ்ணா என்னும் நாமத்துடன், 1979ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஸ்ரீகிருஷ்ணபுரம் என்னும் கிராமத்தில், ஒட்டப்பாலம் தாலுகாவில், பாலக்காடு மாவட்டத்தில் பிறந்தார். சாதாரண குடும்பத்தில் எட்டாவது குழந்தையாக அவதரித்தார். தாய் பெயர் லட்சுமி அம்மாள். தந்தை பெயர் ஸ்ரீகிருஷ்ணன்குட்டிகுப்தன். கருவிலே திருவுடையவரான இவரது ஆன்மிக உள்ளீட்டினை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் அதன் வளர்ச்சிக்கான காரணத்தினாலேயோ என்னவோ, சுவாமி அவர்கள் இளவயதில் கடுமையாக உழைத்துத் தான் பிறந்த குடும்பத்தைக் காப்பாற்றும் கருணையுள்ளம் கொண்டவராகத் திகழ்ந்தார். சிறு பிராயத்திலிருந்தே இவருடைய தெய்வாம்சநிலையானது சிறிது சிறிதாகக் களைகட்டத் தொடங்கியது.

திரு முருகப்பெருமானே திருஅவதாரம் எடுத்து வந்துள்ளார் என்ற நம்பிக்கை கொண்டு, ஸ்ரீ முரளிகிருஷ்ண சுவாமிகளை மக்கள் "ஸ்ரீ சரவண பாபா" என்று அழைக்கத் தொடங்கினார்கள். சற்குரு ஸ்ரீ சரவண பாபா உலக ரட்சகராகப் போற்றப்பட ஆரம்பிக்கும் வகையில் சுவாமிகள், மக்களிடையே அன்பு, புரிந்துணர்வு, ஆன்மிக வழிகாட்டல் என்பவற்றைப் பரப்புவது போன்றவற்றைத் தனது குறிக்கோளாகக் கொண்டார். இவர் காட்டும் அன்பானது இனம், சாதி, பால், தேசியம், சமயம், சமூகம் போன்ற எல்லைகளைக் கடந்து பரிணமித்தது. அது உள்ளூரில் பொருந்துவது போன்றே உலகத்திற்கும் பொருந்தும் தன்மைத்தானது. பாபாஜி ஒருமுறை கூறினார்: "சமயம் ஒன்றே! அன்பே சமயம். பாசையும் ஒன்றே! அது நம் இதயத்திலிருந்து வரும் அன்பு என்னும் மொழியாகும்" என்று கூறிநிற்கும் ஸ்ரீ சரவண பாபா அவர்களை ஒரு முற்றுமுணர்ந்த சற்குரு என்றோ அல்லது ஓர் உலக ரட்சகர் என்றோ கூறிக்கொள்ளலாம். நித்திய சமயமாகத் திகழும் "சனாதன தர்மம்" பேணிவரும் புனித பாரம்பரியங்களின் பிரகாரம் சற்குரு எனப்படுபவர் மனித உருவில் நடமாடும் பரமாத்மாவே ஆகும். என்றென்றும் பரமாத்மாவில் திளைத்திருக்கும் நிலையில் அவ்வாறான ஆசான்கள், மனிதவர்க்கம் தனக்குத்தானே உண்டாக்கிக்கொண்ட அதன் குண இயல்பை வெற்றிகொண்டு வழிகாட்டுவதற்காக, மனித உருவெடுக்கிறார்கள். மனித வர்க்கத்தின்மீது கொண்ட எல்லையற்ற அன்பு, கருணை காரணமாக மனித வர்க்கத்தை அதன் அடிமைத் தளையிலிருந்து மீட்டுக்கொள்ள மானிட உருவெடுக்கிறார்கள். அவர்களின் வார்த்தைகள், செயல்கள் யாவும் முற்றிலும் தன்னலமற்றவை. தமக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாமல் பிறர்க்கென்று எல்லாவற்றையும் விட்டுக்கொடுப்பவர்கள். சர்வ வியாபகராக நின்றியங்கும் பரமாத்மா இத்தகைய ஆசான்களின் நிரந்தர வாசஸ்தலம் என்பதால் இவர்களை நோக்கி எமது இதயக் கதவுகளைத் திறந்துகொண்டால் ஈஸ்வர கடாட்ஷம் நிச்சயம் கிட்டும்!

1997ம் ஆண்டிலிருந்து சற்குரு அவர்கள் "தர்ஷன்" எனப்படும் ஆன்மிகப் பேட்டிகளை வெவ்வேறு பாவங்களில் அதாவது தெய்வாம்ச - மனோநிலை அல்லது பிரக்ஞை - நிலைகளில் நின்று பக்தர்களுக்கு வழங்கி வருகின்றார். தம்மை நாடி வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வாழ்க்கையில் நிரந்தர முன்னேற்றம் ஏற்படுத்தி வளம்படுத்தி வருகிறார். தினமும் பக்தர்கள் படையெடுத்த வண்ணமுள்ளனர். எவரும் ஏமாற்றத்துடன் திரும்பியதில்லை. சுவாமிஜி அவர்கள் சத்சங்கம் ஒன்றில் இப்படிக் கூறினார்: "சற்குருவின் கிருபையானது எல்லைகள் கடந்து எங்கும் வியாபித்து நிற்கும் தன்மையது. குருவாயிலாக சிஷ்யனுக்குக் கிடைக்கும் அனுபவங்கள் எதிர்பார்த்தபடி அமையலாம். அல்லது ஏமாற்றமாக அமையலாம். ஆனால் இந்த வார்த்தைகளில் ஆழமான அர்த்தம் புதைந்துள்ளது. அதாவது எது நடக்கிறதோ அது நமது நன்மை கருதியே நடக்கிறது என்று உணர்ந்துகொள்ளும் மனோபக்குவம் வேண்டும். கசப்பான அனுபவங்கள் நம்பிக்கையைத் தளர்த்துவிடாத மனவுறுதி அவசியம்".

நாம் செய்யும் கர்மவினையின் செயற்பாடுகள் விசாலமானவை. சற்குருவின் பாதங்களில் நாம் சரணாகதி அடையும்போது எமது தீவினைகளை அப்படியே அவர் ஏற்றுக்கொள்கிறார். அவ்வாறு பிறிதொருவரால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் நமது பாபங்களைச் செயலிழக்கச் செய்யமுடியாது. குருவின் கிருபையினால் விரைவில் நமது தீவினைகள் களையப்படுகின்றன. ஆராய்ந்து பார்த்தால் சுவாமிஜி அவர்கள் மேற்படி வார்த்தைகளில் மேலும் ஆழமான கருத்துக்கள் இருப்பதைக் காணலாம். மனமானது சில அனுபவங்களை சாதகமாகவும், சில அனுபவங்களை பாதகமாகவும் எடுத்துக் கொள்ளப் பழக்கப்பட்டுள்ளது. இந்த இரு வகை அனுபவங்களையும் இறை கருணையின் வெளிப்பாடே என்று சற்குரு சரவணபாபா அறிவுரை கூறுகிறார். ஏனெனில் இவ்விருவகை அனுபவங்களும் சிஷ்யனை உயர்நிலைப்படுத்துவதோடு அவரவர் ஆன்மிகப் பயணத்தையும் மேம்படுத்தும் நோக்கம் கொண்டது. ஸ்ரீ ரமண மகரிஷியின் கூற்றுப்படி தீயவை எல்லாம், தம்மை விட்டு விலகி நடக்கும்படி நம்மை எச்சரிக்கின்றன. நல்லவை எல்லாம் தம்மைப் பார்த்துப் பின்பற்றும்படி வலியுறுத்துகின்றன. மொத்தத்தில் இவ்விரு அனுபவங்களும் மனிதனை ஈடேற்றும் நோக்கங்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன.

சுவாமிஜி கூறுகிறார்: "ஓம்" என்ற மந்திரம் வில்லைப் போன்றது. எமது வார்த்தைகள் அம்பைப் போன்றன. வார்த்தைகளை அன்போடு "எய்யும்" போது நன்மை விளைகிறது. "கனியிருப்பக் காய் கவரும்" வார்த்தைகள் தீமை பயக்கும். வார்த்தைகள் மூலம் நல்லதையும் செய்யலாம், தீயதையும் செய்யலாம். இறைவனிடம் சரணடைதல் மூலமே நாம் நமது உடல் - உளத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறமுடியும். சற்குரு ஒருவரிடமிருந்து நமக்கு ஆசீர்வாதம் கிடைப்பதென்பது நாம் அவரைத்தேடிச் செல்வதால் ஏற்படுகிறது என எண்ணுகிறோம். இது நமது அறியாமை ஆகும். உண்மை எதுவெனில், சற்குருவே தன் சிஷ்யனை தானே இனம்கண்டு தன்னை நோக்கி ஈர்த்துக்கொள்கிறார். சற்குருவின் அருட்பார்வை கிட்டாமல், அவரின் உள்ளம் நம்மை ஏற்காமல் எவரும் "சிஷ்யப் பதவி"யை அடைய முடியாது. சுவாமி விவேகானந்தா "குருவுக்கு கீழ்ப்படிதல், குரு வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வெற்றியின் இரகசியாகும்" என்று கூறுகிறார்.

சற்குரு சரவண பாபா அவர்கள் நம்பிக்கை, பக்தி, சரணடைதல் என்பவனவற்றின் ஒப்பற்ற மகிமை, மதிப்பு பற்றி விரிவான விளக்கம் தந்துள்ளார். நாம்





நமது மனம்போன போக்கில் வாழப் பழகிக்கொள்வோமாகில் மிகுந்த இன்னல்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் ஆளாவோம். மாறாக, சற்குரு கூறும் அறிவுரைகளைக்கேட்டு அவர்தம் மனதுக்கு அமைவாக நடப்போமாகில் வாழ்வில் அமைதி, வெற்றி காண்போம். பிறர்க்கு உதவும் மனப்பான்மையோடு, சிறிதளவும் சுயநலம் கருதாது, எமது சக்திக்கு அப்பாற்படாமல் உழைப்போமாகில், பாலில் வெண்ணெய் திரள்வது போல் படிப்படியாக செல்வம் பெருகி, சந்தோஷம் உண்டாகி, நமது வாழ்நாள் வசிகரமாகக் கழியும். சுவாமிகளின் தன்நலமற்ற தர்மக் கைங்கரியங்களான அன்னதானம், வஸ்திரதானம், ஆரோக்கிய சேவை, வித்தியாதானம், கோதானம் என பரந்து - விரிந்து செல்லும் ஒப்பற்ற தானங்கள் செய்யும் பாதைகள் யாவற்றிலும் அன்பு ஒன்றே மையப்பொருளாக இழையோடி நிற்கிறது.

ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளை பாபாஜியின் ஆசிரமங்கள் பற்பல இடங்களில் அமைந்துள்ளன. முதலாவது ஆசிரமம் கோழிக்கோடு என்னும் இடத்திலும் பின் கேரளாவில் பாலக்காடு மாவட்டத்தில் ஸ்ரீ கிருஷ்ணபுரம் என்னும் கிராமத்திலும் அமைந்தன. இவற்றைத் தொடர்ந்து பங்களூரு, சென்னை, பழனி, கோநூர், பொள்ளாச்சி, மும்பை, டில்லி, துபாய், சார்ஜா, லண்டன் ஆகிய இடங்களிலும் ஆசிரமங்களும், ஆன்மிக மையங்களும் அமைந்துள்ளன. ஓம் சரவண பாபா சேவா அறக்கட்டளையின் சகல ஆசிரமங்களும் ஆன்மிக மையங்களும் பாபாஜியின் குறிக்கோள் தழுவியதான நான்கு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவையாவன: பசித்தவர்க்கு உணவு, வறியவர்க்கு வைத்தியம், ஏழைகளுக்கு ஆடைவகைகள், தாழ்த்தப்பட்டவர்க்கு கல்வி வசதிகள் என்பவை. இந்தக் கோட்பாடுகளை நோக்கி விரிவடைந்து ஆசிரமங்கள் செயற்படுகின்றன. சமூகத்தில் வசதிகள் குன்றி வாழும் பகுதியினரின் மேம்பாடு கருதி அவர்கள் வாழ்வில் வளம் கொழிக்கவும், சமாதானம் ஏற்படவும் ஸ்ரீ சரவண பாபா சுவாமி அவர்கள் "ஓம் சரவண பாபா சேவா அறக்கட்டளை"யை நிறுவினார். இவ்வறக்கட்டளை மூலம் பல குடும்பங்களினதும், தனிநபர்களினதும் வாழ்வு விடிவு கண்டு வருகிறது. பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வ ழ ங் க ல் , ஊனமுற்றோர்க்கு நடக்க உதவும் கைக்கவண் தடிகள், சக்கர நாற்காலிகள், செயற்கை அவயவங்கள் வழங்கல், கண்பார்வையற்ற பள்ளிப் பிள்ளைகளுக்கு சீருடை வழங்கல், முதியோர் இல்லங்களில் உள்ளோர்க்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல், ஆதரவற்றோர் இல்லச் சிறுவர்களுக்கு கற்கை உபகரணங்கள் வழங்கல் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தானங்களிலெல்லாம் அதி உயர்ந்ததாக அன்னதானம் விளங்குகிறது என்பது பாபாஜி அவர்களின் கருத்தாகும். ஆதலால் இத்தானமானது மிகுந்த கருணையுள்ளத்துடனும் அர்ப்பணிப்புடனும் செய்யப்படுகின்றது. குறிப்பாக பாலக்காடு, கோழிக்கோடு ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 2000 குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு முதலிய உலர் உணவுப்பொருள்கள் ஒரு வருடத்தில் 5 தடவைகள் என வழங்கப்பட்டு வருகின்றன. சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் அற்ற நிலைமையும் சமாதானமும் நிலவ வேண்டும் என்ற பெருநோக்குடன், பாபாஜி அவர்கள் தமது பக்தர்களையும் இவ்வாறான நற்காரியங்களில் ஈடுபடும்படி ஊக்குவிக்கின்றார். கோமாதா சேவை காமதேனு எனும் தெய்வீகப் பசு மனிதர்க்கு வாழ்வாதாரமாகத் திகழ்கிறது. மனித குலத்திற்கு ஆரோக்கியமும் ஆதாரமும் தருவதற்காகப் படைக்கப்பட்டது. பசுக்களை உரிய முறையில் பாதுகாத்துப் பராமரித்து தேவையுள்ளவர்க்கு தானம் செய்தல் கோமாதா சேவைத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால், மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைப்பதோடு பசுக்களும் பாதுகாக்கப்படுகின்றன. பாபாஜியின் "சரவண கோகுலம் கௌஷல்" எனும் ஸ்தாபனம் பசுக்களுக்கு புகலிடம் கொடுப்பதோடு, நல்ல இனப் பசுக்களையும் விருத்தி செய்து வருகிறது.

கோமாதா சேவையை சுவாமிஜியின் எல்லா ஆசிரமங்களிலும், ஆன்மிக மையங்களிலும் முன்னெடுப்பதற்கான செயற்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஆரோக்கிய சேவை "ஆரோக்கிய மனமும், ஆரோக்கிய உடலும் ஆரோக்கியமான அமைதியான சமுதாயம் மலர்வதற்கு வழிவகுக்கிறது" - இது பாபாஜியின் ஞான வார்த்தைகளும், ஆரோக்கிய சேவையின் தாரக மந்திரமும் ஆகும். நலிவுற்றோரை, நோய்வாய்ப்பட்டோரை நாடிச்சென்று சேவை செய்தல், வைத்தியச் செலவைத் தாங்கிக்கொள்ள முடியாத, வருமானமற்ற நிலையிலுள்ளோர்க்கு பண உதவி செய்தல் இச்சேவையின் பணியாகும். ஒரு வருடத்தில் ஐந்து சுற்றுக்கள் என் செய்யப்படும் இச் சேவையின் மூலம் வருடாவருடம் சுமார் 200 குடும்பங்கள்வரை பயனடைகிறார்கள். கிராமங்களில் இச்சேவைக்கு மிகுந்த தேவையும், வரவேற்பும் உண்டு. சுமார் 10,000 பேர் வரை பயன் பெற்றுச் செல்கிறார்கள். இதன்போது கிடைக்கும் வரவேற்பானது இதுபோன்ற பல்வேறு சேவைகளைக் கிராமப்புறங்களில் மேற்கொள்வதற்கு உற்சாகம் அளிப்பதாக உள்ளது. வித்தியாதானம் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைவதற்கும், நாளைய சமுதாயம் கற்றறிந்த சமுதாயமாக மலர்வதற்கும் கல்வி அவசியமென்பதால் "ஓம் சரவண பாபா சேவா அறக்கட்டளை" என்றும் கல்விச் சேவைக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுகிறது. கிராமங்கள், பட்டினங்கள் தோறும் உள்ள பாடசாலைகளில் தகுதியான மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான உதவிகளை செய்கிறது. ஒவ்வொரு தடவைகளிலும் 10,000க்கும் அதிகமான குறிப்புப் புத்தகங்கள், பேனா - பென்சில்கள் முதலியன வழங்கப்படுகின்றன. வேறு பாடசாலைகளிலும் இவ்வாறான தர்ம காரியங்கள் நடைபெறும்போது அவற்றிற்கு ஊக்கமளித்தும் ஆதரவு நல்கியும் சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்து வருகிறது.

அடுத்து, மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உடை ஆகும். சமுதாயத்தில் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எதிர்நோக்கும் குறைபாடு போதிய ஆடையின்மை ஆகும். அங்கு ஆடைத்தேவை பெரிதும் உணரப்படுகிறது. இத்தகையோர் தமக்கு வேண்டிய துணிமணிகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பல வைபவங்களை அறக்கட்டளை ஏற்பாடு செய்து ஆடைகளை வழங்கி வருகிறது. புனித பண்டிகை காலங்களில் வறியவர்க்கு உடைகள் வழங்குவது மட்டுமல்லாமல் அவர்கள் மீது அன்பும் அக்கறையும் செலுத்தும் சந்தர்ப்பமாகவும் அமைகிறது. இவ்வாறு, கொள்வோர்க்கும் . கொடுப்போர்க்கும் இப் புனிதத் தினங்கள் இனிமை நிறைந்தவையாக அமைந்து விடுகின்றன. இத்தகைய செயற்பாடுகளின் அடிப்படையில் சுவாமிஜி அவர்கள் அண்மையில் இலங்கைக்கும், மொறிசியஸ் நாட்டிற்கும் தனது ஆன்மிகப் பயணத்தை மேற்கொண்டதுடன், அங்குள்ள மக்களுக்கும் முடிந்தவரை பணியாற்றியதுடன் தொடரும் பணிகளைச் சுவாமிஜி அவர்களின் பெயரால் நடாத்தப்படும் அறக்கட்டளை மேற்கொண்டு வருகின்றது.

*"நிதி நிறைந்தவர் பொற்குவை தாரீர்,*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்,*







# அமைதி வேண்டி பிரார்த்தனை

ஓம் சரவணபவ!

மேற்கு நாட்டு மதங்களும் கிழக்கு நாட்டு மதங்களும் சில மதக்கோட்பாடுகளில் ஒரே தன்மைத்தாயின எனினும் பல விடயங்களில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவை. மேற்கு மதங்கள் மானுட சேவையின் மூலம் மட்டும் இறையருள் பெறலாம் என்கின்றன. கிழக்கு மதங்கள் மனித சேவையுடன் கண்ணுக்குப் புலப்படாத ஆன்மிக உள்ளுணர்வு மாற்றமும் ஏற்படுவதால் இறையை அண்மிக்கலாம் என்கின்றன.

எதிர்வரும் ஜுலை மாதம் 22ஆம் திகதி வரும் புனித பூர்ணிமா தினத்தையொட்டி மூன்று நாள்கள் லண்டனில் ஹோமம் செய்ய நாம் திட்டமிட்டுள்ளோம். 2013 ஜுலை 20ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை மூன்று தினங்கள் நடைபெறும் இவ் விழாவில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பங்குபற்றி ஒரு கோடி நாம உச்சாடனம் செய்வார்கள். இந்தத் தனித்துவமான நிகழ்வை ஐக்கிய இராய்ச்சியத்தில் முதன் முதலாக நடத்த சற்குரு ஸ்ரீ சரவண பாபா முன்வந்துள்ளார்.

பரிவுக்கும் இரக்கத்துக்கும் அடையாளமானவர் எனக் கருதப்படும் சற்குரு சரவண பாபாவின் தொண்டு கடந்த பத்து ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. ஏழைகளுக்கு உணவு, உடை வழங்கல், நோயாளருக்கு மருந்து வசதிகள், வசதி குறைந்த மாணவருக்கு கல்வி என இவரின் சேவைகள் மக்களால் அறியப்பட்டன. கோழிக்கோடு, பாலக்காடு, பெங்களுரு, துபாய், லண்டன் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆசிரமங்கள் வாயிலாக தொண்டு நோக்கங்கள் வளர்ந்து வருகின்றன. சுவாமியின் அளவற்ற அன்பு செலுத்தல், மன்னித்தல் என்ற கோட்பாடுகளால் உலகின் பல பாகங்களிலிருந்தும் கவரப்பட்ட மக்கள் அவரின் போதனையால் ஆறுதலும் அமைதியும் அடைகிறார்கள்.

ஹோமம் நடைபெறும் மூன்று தினங்களிலும் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு திருநாமங்களை உச்சாடனம் செய்ய சந்தர்ப்பம் அமைக்கப்படும். இதனால் கோடி தடவைக்கு மேல் இறைநாமம் உச்சரிக்கப்படும். இந்த நிகழ்வு சுவாமி அவர்களின் முன்னிலையில் நடைபெறும்.

மந்திர உச்சாடனத்தால் சூழலில் புனித அதிர்வு ஏற்படும். இதனால் உலகம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும். அத்துடன் சர்வலோக அமைதியும் சகோதரத்துவமும் ஒற்றுமையும், பரிவும், அன்பும், ஒத்திசைவும் ஏற்படும். இந்த உச்சாடனம் சுற்றாடலில் கலக்கும்போது ஆவாகனம் செய்யப்பட்ட தெய்வங்களை அவை ஈர்க்கும். அத் தெய்வங்கள், நோக்கங்கள் நிறைவுறவும் மனம் அமைதிபெறவும் அருள்பாலிக்கும்.

இந்த நிகழ்வுக்கு அடியார்கள் அனைவரும் வந்து பங்குபற்றி சேவை புரியுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ்விழாவையொட்டி ஒரு மலரும் வெளியிடவுள்ளோம்.

**ஓம் சரவணபவ!**

மேலதிக விவரங்களுக்கு: 0796 095 8494, 0792 199 5583, 0780 539 7298.

**OM SHARAVANABHAVA SEVA TRUST**

Registered Charity England and Wales - 1142610

269A Preston Road Harrow Middlesex HA3 0PS.

Web: www.omsharavanabhavamatham.org



# Malik & Malik

## SOLICITORS

## Commissioners for Oaths

**24 Hour Emergency Crime & Immigration**
**Adikalamuthu Ilanchelian**
**solicitor & commissioners for oaths**

# 07939 474 342

- Immigrations Related
- Applications and Appeals
- Immigration
- EEA Law
- Entry Clearance
- Human Right claims
- Asylum Claim
- British Citizenship and Nationality
- Detention and Deportation
- Judicial review

## Family Maters & Property

| | |
|---|---|
| **Divorce Maters** | **Residential** |
| **Ancillary Relief** | **Commercial** |
| **Other family maters** | **Landlord** |

## No Win No Fee


**Personal Injury**
**Road Traffic Accident**
**Slip and Trip work Related**
**Accident Clinical Negligence**

Crime ( Public Funding Available) & Immigration
24 hour Police station representation, Representation at Magistrate /Crown courts




**MALIK & MALIK Solicitors**
**234-236 High Road, London NW10 2NX**
**Adaikalamuthu Ilanchelian**
**SOLICITOR**
**Tel : 0208 830 3050 / 07939 474 342**

# அரசியலாக்கப்படும் மூன்று பேரின் தூக்குக்கயிறு



# மூவரின் உயிர் இன்று தமிழக முதல்வர் கையில்!

• தமிழகத்திலிருந்து கே. வி. மகாதேவா

**1991–ம் ஆண்டு ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது படலம் நடந்து, வழக்கு விசாரணை பத்து ஆண்டுகள் பூர்த்தி பெற்று, மேலும் பத்து ஆண்டுகள் கழித்து பேரறிவாளன், சாந்தன், முருகன், முருகன் மனைவி நளினி ஆகிய நால்வருக்கும் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து ஜனாதிபதிக்கு கருணைமனுக்கள் அனுப்பப்பட்டதில், நளினியின் தண்டனை மட்டும் ஆயுளாகக் குறைக்கப்பட்டு ஏனைய மூவரின் மரண தண்டனைகள் உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட நிலையில் தண்டனையைக் குறைக்குமாறு கோரி, உச்சநீதிமன்றத்தில் மூவரும் மனுதாக்கல் செய்துள்ளனர்.**

வழக்கின் தன்மை ஒன்று ஆனால் இருவேறு தீர்ப்புகள்! ராஜீவ் கொலைவழக்கு தீர்ப்புக்கதையை தொடருமுன்னர், அண்மையில் இருவேறு கொலை வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தில் எதிரொலித்த கருணை மனுக்களின் தீர்ப்புகள், ஒரு 'கண்ணில்' வெண்ணையையும், மறுகண்ணில் சுண்ணாம்பையும் எவ்வாறு கொண்டது என்பதை சற்றுப்பார்ப்போம்.

டில்லி குண்டுவெடிப்பு வழக்கொன்றில் தூக்குத் தண்டனை பெற்ற காலிஸ்தான் அமைப்பு தீவிரவாதி தேவிந்தர் பால்சிங் புல்லர் தனது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கருணை மனு அளித்திருந்தார். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இம்மனு ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டதும், புல்லர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். "எனது கருணை மனுமீது முடிவு எடுக்க ஜனாதிபதி எட்டு ஆண்டுகள் காலதாமதம் எடுத்துவிட்டார். ஆகவே எனது தூக்குத்தண்டனையை ஆயுளாக குறைக்கவேண்டும்" என்பது அவரது வாதம். புல்லரின் மனுவை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம்; "கருணைமனுமீது நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி நடவடிக்கைக்கு கால நிர்ணயம் விதிக்க முடியாது" என்று அறிவித்த உச்ச நீதிமன்றம், புல்லரின் தண்டனையைக் குறைக்கவும் அனுமதிக்கவில்லை. 'தீர்ப்புமுக'த்தின் ஒரு கண் இது என்றால் மறு 'கண்'ணைப் பாருங்கள். புல்லருக்கு கடந்த ஏப்ரல் மாதம் இப்படியாக தீர்ப்பு எழுதப்பட்ட நிலையில்; அஸாம் மாநிலத்தைச் சேர்ந்த மகேந்திரதாஸ் என்பவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு, மரணதண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. என்ன நடந்தது? இரட்டைக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட மகேந்திரதாஸுக்கு 1999-ல் உச்சநீதிமன்றம் மரண தண்டனை வழங்கியது. ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார். 2011-ல் இம்மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம், உச்சநீதிமன்றத்தில் மகேந்திரதாஸ் தாக்கல் செய்த மனுவில்; தனது கருணைமனுவைப் பரிசீலனை செய்ய 12 ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டதால் இதனைக் கருத்தில் கொண்டு தனது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இந்த மனுவை ஏற்றுக் கொண்ட உச்சநீதிமன்றம், மரணதண்டனையை ஆயுளாகக் குறைத்து தீர்ப்பு வழங்கியுள்ளது. அது மட்டுமல்ல; "மேன்முறையீடான கருணை மனுமீது குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவு எடுக்கப்பட வேண்டும். தனக்கு என்ன நிகழும், தன் வாழ்க்கை எப்படி முடியும் என்று தெரியாமல் தூக்கு கைதிகள் நீண்ட காலம் காத்திருக்க முடியாது" என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர். ஒரு கண்ணில் சுண்ணாம்பு, மறுகண்ணில் வெண்ணெய்!

**மரணபயத்தில் 22 ஆண்டுகள்! மூவர் உயிர் முதல்வர் கையில்!**

வெறும் எட்டு ஆண்டுகளுக்கும், பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் நீதித்தராசு மேலும் கீழுமாக நகரும் போது; நாளைய பொழுது எப்படி இருக்கும் என்று இருபத்து இரண்டு ஆண்டுகள் மரணபயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தூக்கு கைதிகளான பேரறிவாளன், முருகன், சாந்தன், விடிவில் உச்சநீதிமன்றம் தாமதிக்க என்ன காரணம்? இம் மூவரின் கருணை மனுக்கள், சென்னை உயர் நீதிமன்றத்திலும், டில்லி உச்சநீதி மன்றத்திலும் விசாரணையில் இருக்கிறது. புல்லருக்கும் தேவேந்திர தாஸுக்கும் வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பை அவதானிக்கும்போது; ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் நிலைமை, உண்மை வெளிச்சம் போட்டுக் காட்டினாலும், பயம் தனது கோரப் பற்களையும் மறைக்கவில்லை. இவர்கள் மூவரும் கடந்துவந்த 22 வருடகால சிறைவாழ்க்கையில் அரசியல் விதியும் நன்றாகவே விளையாடியிருக்கிறது.

**கலைஞரின் அன்றைய இன்றைய அரசியல் நிலைப்பாடுகள்:** தூக்குத் தண்டனையை எதிர்த்து கருணை மனு அளித்து ஜனாதிபதிக்கு ஐந்து தடவைகள் நினைவூட்டி மூவரும் கடிதங்கள் அனுப்பிவிட்ட நிலையில், அன்றைய முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதியும், இன்றைய முதல்வர் ஜெயலலிதாவும் சுலபமாக 'முடிச்சு'களை அவிழ்க்கும் பல அரிய சந்தர்ப்பங்களை தெரிந்தே தவறவிட்டு அரசியல் பார்க்கின்றனர் போலும்! கலைஞர் அடிக்கும் பல்டிகள், அரசியல் எதிர்விளைவுகளைத்தான் விதைத்திருக்கிறது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோது, நளினி உட்பட நான்கு தூக்குத்தண்டனை கைதிகளும் கலைஞரிடம் கருணை மனுக்களை அளித்ததும், மாநில அரசுக்கு உரிய சிறப்பு உரிமைகளை வழங்கும், அரசியல் அமைப்புச் சட்டம் 71 மற்றும் 161 ஆகிய இரண்டு சட்டப் பிரிவுகளின் கீழ் இம்மூவரையும் காப்பாற்றாமல், மனுக்களை கவர்னருக்கு அனுப்பி வைத்து 'கதை'யை முடிக்கப்பார்த்தார். இந்த சட்டப் பிரிவுகளின்படி, மாநில அரசு எடுக்கும் முடிவை மத்திய அரசோ அல்லது உச்சநீதிமன்றமோ கேள்வி கேட்க முடியாது. கலைஞர் இவ்விதமாக சட்டப்படி அமைச்சரவையைக் கூட்டி முடிவு எடுத்து, அந்த தீர்மானத்தை கவர்னருக்கு



23ம் பக்கம் பார்க்க



# பத்தாவது ஆண்டில்....

## A-Lanka Travel Ltd

We make it easy to take it easy

**171 Tooting High Srteet, Tooting, London SW17 OSZ TOOTING BROADWAY**

**020 8672 5551, 020 8672 2012**

**Special Rates for**
**(Subject to availability)**
Colombo
(with Sri Lankan Airlines)
Canada
(With British Airways)

SriLankan Airlines · IATA · ATOL PROTECTED · QATAR · ETIHAD AIRWAYS · Emirates

**For Special Family**
Discount and
Emergency Ticket
Only.
Please Contact
Wimal on 07956 206 709

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை **We Serve all 7 Days in a week**

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச் சீட்டுக்களை உடன் பெற்றிட

நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

உங்கள் சகல
பிரயாணத் தேவைகளுக்கும்
அழையுங்கள்...
**020 8672 5551**
**020 8672 2010**

**Indian / Sri lankan**
**Visa**
**Services availble**

இந்தியா / இலங்கை சென்று வர விசா
எடுத்துத்தரப்படும்
அவசர உடன் டிக்கட்களுக்கு
அழையுங்கள்:
**07956 206 709**
விமல்/ விஜி **07957 121 696**

Email:wimal@a-lankatravel.co.uk i web: www.a-lankatravel.co.uk

# பிரித்தானியா குடிவரவு விதிகள் மாற்றம் குடிவரவாளர்கள் ஏமாற்றம்

**பிரித்தானியாவில் கடந்த ஆடி 2012க்கு பின்னால் ஏற்பட்டுள்ள குடிவரவு விதிகளிலான மாற்றங்கள் குடிவரவாளர்களுக்கு ஏமாற்றமாக அமைந்துள்ளதுடன், இங்கே நீண்ட காலமாக வதிவிட அனுமதி இல்லாமல் வசித்து வந்தவர்களுடைய நிலைகளையும் 'தலைகீழாக' மாற்றி அமைத்துள்ளது.**

இது ஒருபுறமிருக்க, அண்மையில் இங்கிலாந்தில் ஒரு பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள், சிறிய கட்சியாகக் கருதப்பட்ட UKIP கட்சி அடைந்துள்ள வெற்றி, பெரும்பான்மை கட்சிகளைச் சிந்திக்க வைத்துள்ளன. இதனாலும் குடிவரவு தொடர்பான நெருக்கடிகள் இன்னமும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

உள்நாட்டுச் செயலர் குடிவரவு விதிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக இருப்பதும், தீவிரவாதிகளை நாடுகடத்துவதற்கு மனித உரிமைச் சட்டங்களை மாற்றி அமைப்பதற்குகூட முனைப்புக் காட்டுவதும், குடிவரவு பற்றிய ஒரு ஸ்திரமற்ற தன்மையை பிரித்தானியாவில் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இது ஒருபுறமிருக்க - ஐக்கிய இராச்சிய எல்லைகள் முகவர் அலுவலகம் (united kingdom border agency) தனது பொறுப்புகளை CAPITA என்ற முகவர் நிலையத்திடம் கையளித்ததன் மூலம் வதிவிட அனுமதி இல்லாதவர்களை நாட்டை விட்டு வெளியேறும் வண்ணம் நேரடியாகவே செல்லிட செய்திகள் - கடிதங்கள் மூலம் விரட்டத் தொடங்கியுள்ளமையும் இங்கே கவனிக்கக் கூடியது. முன்னர் இருந்த குடிவரவு விதிகளின் கீழ் பிரித்தானியாவில் நிரந்தரவதிவிட அனுமதி பெற்றவர்கள் - பிரித்தானிய பிரஜைகள் தமது பெற்றோரை தங்களுடன் தங்க வைப்பதற்கான நுழைவு அனுமதி பெறுவதில் பெரிய தடங்கல்கள் காணப்படவில்லை.

அவர்கள் அறுபத்தைந்து வயதிற்கு மேற்பட்டவராகவும், பிள்ளைகளின் தயவில் வாழ்பவராகவும் - பிள்ளைகள் தொடர்ந்தும் அவர்களுக்கு பணரீதியான உதவிகளைச் செய்து வருபவர்களாகவும்– தங்குவதற்குப் போதுமான வதிகள் இருப்பதாக நிருபித்தும், அவர்களைப் பராமரிக்கப் போதுமான வருமானம் இருப்பதாகவும் பிரித்தானிய தூதராலயத்துக்கு உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தால் போதுமானதாக இருந்தது.

ஆனால் அந்நிலை 9ம் தகதி யூலை 2012இல் மாற்றத்திற்கான குடிவரவு விதிகளினால் கடுமையாக்கப்பட்டுள்ளது.

இவ்விதிகளில் முன்னர் கூறப்பட்டிருந்ததாவது:

-விண்ணப்பதாரி முழுமையாக அல்லது பிரதானமாக அழைக்கும் உறவினரில் நிதி தொடர்பாகத் தங்கியிருத்தல்.

-தனது சொந்த நாட்டில் விண்ணப்பதாரி வேறு எந்த உறவினரிடமும் நிதி தொடர்பில் உதவி கேட்க முடியாத நிலையில் இருத்தல்.



-எந்தவித அரச உதவிப் பணமும் பெறாத நிலையில் அழைக்கும் உறவினர் அவரையும் - அவரில் தங்கி இருப்போரையும் பராமரிக்கக்கூடியவராகவும் - வதிவிடவசதி வழங்கக் கூடியவராகவும் இருத்தல்.

அறுபத்தைந்து வயதிற்குக் குறைந்தவராக இருந்தால் தனியே வாழ்பவராகவும், இனி இல்லை என்ற அளவிற்கு மிக மிக அசாதாரணமான சூழ்நிலையில் வாழ்பவராகவும் இருத்தல் வேண்டும்.

9ம் திகதி யூலை 2012இல் கொண்டு வரப்பட்ட




புதிய மாற்றங்களில் அகக் கடுமையாக்கப்பட்டுள்ள விதி E -ECDR.2.4 கூறுவதாவது:

விண்ணப்பதாரி - அவரது வாழ்க்கைத் துணையானவர், பொறுப்பேற்பவரின் (SPONSOR) பெற்றோராக அல்லது பெற்றோரின் பெற்றோர் (Grand Parents) அவர்களது வயது காரணமாக, சுகயீனம் - குறைபாடு (Disability) காரணமாக நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீண்ட கால தனிப்பட்ட (Personel care) பராமரிப்பு தேவை என்பதனை நிருபிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் E -ECDR.2.5 விதிக்கு இணங்க விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத் துணை பொறுப்பேற்பவரின் பண உதவிகளுடன் தனது சொந்த நாட்டில் அவ்வகையான உதவிகள் இல்லை என்பதையும், அத்துடன் அந்நாட்டில் ஒருவரேனும் அவ்வகையான உதவிகளை வழங்க முடியாது என்பதனையும், அத்துடன் அதற்கான சூழ்நிலை போதாது என்பதனையும் நிரூபித்தல் வேண்டும்.

இவற்றை நிரூபிப்பது மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வருவோர்க்கு மிகச்சிரமமாக இருக்கும்.

ஐரோப்பிய நாடுகளில் என்றாலாவது சமூக சேவைகள் நிறுவனம் போன்ற அமைப்புகள் இதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும். இந்நிலையில் வயது முதிர்ந்த பெற்றோர்களை அழைப்பதிலும் குடிவரவு விதிகள் அணைபோட்டுள்ளதனை அறியலாம்.

## ஏழு ஆண்டுகள் வசித்திருந்த குழந்தைகள் அல்லது பெற்றோர்கள் நிலை

முன்னதாக இங்கே பிறந்த அல்லது இந்த நாட்டிற்கு வந்து தொடர்ச்சியாக அந்தப் பிள்ளை (18வயதிற்குள்) இங்கே வசித்திருந்தால் அந்தப் பிள்ளை தனது பெற்றோரின் நாட்டிற்குச் சென்று தன்னை அந்தச் சூழ்நிலைக்கு ஆட்படுத்த முடியாது என்ற காரணத்தால் வதிவிட அனுமதி பிள்ளை சார்பாக பெற்றோருக்கும் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் அந்தச் சலுகை பின்னர் நீக்கப்பட்டு 09 யூலை 2012 இல் மாற்றப்பட்ட விதிகளின் கீழ் அது மீளவும் புத்துயிர் பெற்றுள்ளது. இருப்பினும் சில நேரங்களில் இவ்வகையான விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுகின்ற நிலமை காணப்படுகின்றது. இதற்கான பரிகாரம் சட்ட மீளாய்வு (JUDICIAL REVIEW) - மட்டுமே.

இது தவிர நுழைவு அனுமதிக்கான (Entry Clearance) விசாவிற்கு விண்ணப்பிக்கும்போது அல்லது அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது மிக மிக கவனமாக இருத்தல் அவசியமாகின்றது.

விண்ணப்பப் படிவத்தில் ஏதாவது ஒரு பகுதியில் 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பெட்டியில் தவறாக குறிப்பிட்டால்கூட விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுவதுடன் பத்து ஆண்டுகளுக்கு பிரித்தானியாவுக்கு வருவதும் தடைசெய்யப்பட்டு விடும். குறிப்பாக கையொப்பம் இடும் பகுதியில் இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதில் யாராவது உதவி புரிந்தார்களா என்ற பகுதியில் 'இல்லை' என்று குறிப்பிட்டாலும் - ஏதாவது தவறு நடந்து விட்டால் பூரணப்படுத்தியவர் மேல் தவறு சொல்ல முடியாது.


முன்னர் செய்த விண்ணப்பங்கள், முன்னைய விசா நிராகரிப்புகள் - போன்றவையும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன் கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கும்போது அவை சரியானவை அல்லது உண்மையானவை என்று நீங்கள் உணரும்போது மட்டும் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சில முகவர்கள் தாங்களே அவற்றைச் செய்வதாகக் கூறி செயற்படும்போது மிக அவதானமாக இருத்தல் வேண்டும். முகவர்கள் ஏதாவது தவறான முறையில் பெறப்பட்ட ஆவணங்கள் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தாலும் கூட விண்ணப்பதாரி பிரித்தானியா வருவதற்கு பத்து ஆண்டுகள் தடை விதிக்கப்படுவார்.

எனவே, விண்ணப்பம் செய்பவர்கள மிகமிக ஜாக்கிரதையான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.



**தமிழினி குலேந்திரன்**
**(சட்ட ஆலோசகர்)**






# லண்டன் பிள்ளை மாஸ்டர்!

**தமிழில் கம்ப்யூட்டர் என்றால், லண்டனில் என்னைப் போலப் பலர் நினைப்பது அவரைத்தான். 'பிள்ளை மாஸ்டர்' என்று அன்பாக அழைக்கப்படும் சிவகுருநாதபிள்ளை அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுவேன்.**

லண்டன் கோல்ட்சிமித் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி இப்போது ஓய்வு பெற்றாலும், சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பவர். லூய்ஷியாம் பகுதியில் தமிழ் பாடசாலை ஒன்றை வார இறுதியில் பல ஆண்டு காலமாக நடாத்திக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் அப் பாடசாலை ஆண்டு விழாவை வித்தியாசமாக நடாத்தினார். தமது பாடசாலை மாணவர்களை மட்டுமல்லாது, லண்டனில் பரந்து வாழும் மாணவ மணிகளின் திறமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டினார். அவர்களுக்குப் பரதநாட்டியப் போட்டிகளை வைத்து, அரங்கத்தில் வெற்றி பெற்றவர்களை ஆட வைத்து, பரிசில்கள் வழங்கினார். "எல்லாம் கூட்டு முயற்சி" என்று அடக்கமாக அவர் சொன்னாலும், அவரது கடும் உழைப்பை பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தமிழ்நாட்டிலும் அவர் பெயரைச் சொல்லுகின்ற பல அறிஞர்கள், அவருக்கு மிக நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனாலும் அதை நேரில் பார்க்கின்ற சந்தர்ப்பம் எனக்கு சமீபத்தில் கிடைத்தது. ஆண்டு தவறாமல் விடுமுறைக்கு இல்லாளுடன் செல்வதால், அவர் தங்கியிருந்த தி.நகர் வீட்டில் பல தடவை பார்க்கவும் பேசவும், பொழுதைக் கழிக்கவும் முடிந்தது. 'லிவ்கோ' அகராதி வெங்கட் தனது வீட்டை தங்குவதற்காக அவருக்குக் கொடுத்திருந்தார். தமிழகம் நன்கு அறிந்த தமிழ் அறிஞர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களது வாகனம் ஒன்று அவருக்காக வெளியே காத்திருக்கும். மகாலிங்கம் ஐயாவுடன், எத்தனையோ ஆண்டு கால குடும்ப நட்பு. பிள்ளை மாஸ்டரின் வெற்றிக்குப் பின்னால் நிமிர்ந்து நிற்பவர் ஒரு பெண்மணி. அவரோடு சகல இன்ப துன்பங்களிலும் எந்நாளும் பங்கு போட்டு வாழும் இதய ராணி. 'ஞானா' என்ற அவரது மனைவியின் உபசரிப்பை இம்முறை நிறையவே பெற்றுக் கொண்டாம்.

நாலு முழ வேட்டி, அரைக் கை வெள்ளை ஷேர்ட்டுடன்தான் அவரை அங்கே எந்நேரமும் பார்க்கலாம். திருச்செந்தூரில் கந்தசஷ்டி விரதத்தை முடித்துக் கொண்டு, சென்னையில் முகாமிட்ட பிள்ளை, சிதம்பரத்தில் நடந்த இணைய மாநாடு, தமிழ் ஆசிரியர் மாநாடு, கோயம்புத்தூர் - பொள்ளாச்சி, திருப்பூர் என்று அடிக்கடி பறந்து திரிவார்.



புதிய வழியில் தமிழைக் கற்பிப்பதைக் கவிஞருக்குப் புரிய வைக்கிறார் பிள்ளை.



கவிஞர் வைரமுத்துவின் முதல் சந்திப்பு மனதில் அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. விஜயகாந்தின் 'காப்டன் டிவி' தொலைக்காட்சியில் பிள்ளை அவர்களின் ஒரு மணி நேர பேட்டி நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாகியது. 'புதிய வழியில் தமிழை எப்படிக் கற்பிப்பது?' என்பதை அழகாக புரிய வைத்தார். இந்த நிகழ்ச்சி கவிஞரின் காதுகளுக்கும் எட்டியுள்ளது. பிள்ளையின் உள்ளத்தில், கவிப்பேரரசுவாக உயர்ந்து நின்றவரைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு, கவிஞரும் சம்மதம் தெரிவித்தார்.



பொன்னாடை போர்த்திய பிள்ளையை தனது இல்லத்தில் வரவேற்கிறார் கவிஞர்.



'லிவ்கோ' அகராதி உரிமையாளர் வரதன் தம்பதிகளின் எண்பதாவது வயது திருமண வைபவத்தில் 'லிவ்கோ' வெங்கட், பிள்ளை தம்பதிகள்.

பெசன்ற் நகரிலுள்ள கவிஞரின் அழகான இல்லத்தின், பச்சை பசேலென்ற முற்றத்தில், நடந்த இந்தச் சந்திப்பில், இருவருக்குமிடையில் கருத்துக்களில், கருத்தொற்றுமை இருந்ததால், இரு மணி நேரம் மனம் விட்டு பேசினார்கள். தமிழ் கவிதைகளினால் பல லட்சம் மனங்களை வென்றவர், தமிழ் கம்பியூட்டர் விற்பன்னரின் புதிய எண்ணங்களினால் ஈர்க்கப்பட்டார். புதிய வழிகளில் எப்படி கவிதை வரிகளை எடுத்துச் செல்லலாம் என்ற பிள்ளையின் தெளிவான சிந்தனை, கவிஞரைக் கவர்ந்துவிட்டது. பொழுது போனதே தெரியாமல் பேசிக் கொண்டார்கள். அன்றைய சந்திப்பு ஆரம்பம் என்று சொல்லியிருக்கிறார் கவிஞர். இருவரும் இணைந்து தமிழுக்குப் பங்களிப்பது இனிய செய்தி. கவிஞர் கருத்துக்களை மேலும் அழியாப் பதிவுகளாக்கத் தன்னலமற்ற ஒரு தொண்டன் அவருக்குக் கிடைத்திருக்கிறார்.

எதையும் அலட்டிக் கொள்வதில்லை. ஆனாலும் செயல் வீரர். செம்மொழி மாநாட்டில் இணையங்களைப் பற்றி அவருடைய ஆற்றலை இந்தியாவின் முதல்தர 'ஹிந்து' ஆங்கில நாளிதழ் தனது முதல் பக்கத்தில் படத்துடன் செய்தி வெளியிட்டதை விட - வேறு என்ன சான்றிதழ் வேண்டும்?

- ● சகேஆர்



Tharani Jewellary
தாரணி ஜுவலறி
தங்கத்தின் உணர்வுகளில் மங்காத பெயர்
எது இருக்கும் என்ற சிந்தனைக்கே
இடமில்லை...
54 Ealing Road, Wembley
Middlesex HAO 4TQ
020 8902 6777, 020 8902 7111
அதி குறைந்த வட்டி
வீதத்தில் அடைவு பிடிக்கும்
தலை சிறந்த நிறுவனம்
Our Rates of Interest
intrest 2.95 per month
£ 20 to £ 999
£1000 to £ 4999
£5000 Above
Loan Term : Up to 6 Months
Documents Required
Photo ID - Passport Or Uk Driving License
Proof of Address
Any Utillity Bill or Bank Statement not Older than 3 Months
Tharani Jewellary
54 Ealing Road, Wembley, Middlesex HAO 4TQ

# Sambal
Express

## where Value Meets Quality & Taste








## Sri Lankan & South Indian Take away at its best

**Sambal** Express
245, Northolt Road,
South Harrow, Middx.
HA2 8HR.
Tel: 020 8423 5210

**Sambal** Express & Bakery
191, Edgware Road,
Colindale, London.
NW9 6LP.
Tel: 020 8201 3098

**Sambal** Express & Extra
88, South Road,
Southall, Middx,
UBI 1RD.
Tel: 020 8571 3637

mail@sambalespress.co.uk
www.sambalexpress.co.uk

# இளந்தலைமுறைக்கும் தொடரும் நாடகக்கலைப்பயணம்



# சிறப்பாக நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு இயல் இசை நாடக விழா

**வடக்கு, கிழக்கு சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக பிரித்தானிய "ஏடு" அமைப்பு வழங்கும் "சித்திரை புத்தாண்டு இயல் இசை நாடகவிழா 2013" கடந்த 13 ஏபரல் 2013 அன்று இலண்டன் பாரதிய வித்திய பவனில் அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் வெகுசிறப்பாக நடைபெற்றது.**



சிவசக்தி சிவநேசனின் பார்திய வித்திய பவன் மாணவர்கள் வழங்கும் "இயல் இசை சங்கமத்துடன்" நிகழ்வுகள் ஆரம்பமானது. மாணவிகள் வழங்கிய வாய்ப்பாட்டு, வீணை இசையும் பார்வை யாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியது.

தொடர்ந்து ஆசிரியர் சிவசக்தி சிவநேசனை சாம்பவி சத்தியமூர்த்தி கௌரவித்தார்.



அடுத்து க.பாலேந்திராவின் நெறியாள்கையில் "லண்டன் தமிழ் நாடகப்பள்ளி மாணவர்கள் வழங்கிய "தப்பிவந்த தாடி ஆடு" என்ற சிறுவர் நாடகம் இடம்பெற்றது. இதன் பிரதியாக்கம் சி.மௌனகுரு. 1973ஆம் ஆண்டு மொறட்டுவ பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது "ஏணிப்படிகள், பிச்சைவேண்டாம், மழை, கண்ணாடி வார்ப்புக்கள்" என ஆரம்பித்த க.பாலேந்திராவின் கலையுலக நாடகப் பயணம் 1976ஆம் ஆண்டு நடிகர் ஒன்றியம், ரசிகர் அவை 1978 தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் ஆகியவற்றின் உருவாக்கத்துடன் விரிவாகி இலங்கையின் பல பாகங்களிலும் இவரது நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.



தொடர்ந்து 1983ஆம் ஆண்டு இலண்டனுக்குப் புலம்பெயர்ந்த இவர் "தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின்" ஊடாக பல நாடகங்களை மேடையேற்றினார். கடந்த 09 வருடங் களாக "லண்டன் தமிழ் நாடகப்பள்ளியை" அமைத்து பல மாணவர்களுக்கு நாடகப்பயிற்சி அளித்து வருவதுடன், இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் பல்வேறு நாடகமேடை- யேற்றங்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றார். புலம்பெயர் நாடுகளில் நவீன தமிழ் நாடக வளர்ச்சியின் விடிவெள்ளியாகத் திகழும் இவரின் நெறி யாள்கையில் ஐந்தாவது முறையாக கடந்த, சித்திரை புத்தாண்டு இயல் இசை நாடகவிழாவில் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் பிள்ளைகள் அதாவது, அடுத்த தலைமுறையினரால் தமிழில் நாடகத்தை நடிக்கவும், நவீன நாடக வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யவும், புலம்பெயர் நாடுகளில் நாடகக்கலையை அழியாது இனி தொடர்ந்து வரும் தலைமுறையால் பாதுகாக்க முடியும் என்பதை "தப்பி வந்த தாடி ஆடு" சிறுவர் நாடகத்தின் மூலம் நிரூபித்துள்ளார் க.பாலேந்திரா. அறிவிப்பாளர், உதவிநெறியாளர், நடிகை என பல்வேறு பரிமாணங்களில் தனது பங்களிப்பை இந்நிகழ்விற்கு வழங்கியிருந்தார் ஆனந்தராணி பாலேந்திரா.





அடுத்து ஏடு அமைப்பினரின் ஒரு சிறிய வீடியோ காண்பிக்கப்பட்டது. இதில் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டு தாய், தந்தையரை இழந்த மாணவர்களின் இன்றைய நிலை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் கல்வித் தேவைகள், இது தொடர்பாக புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு உள்ள கடமைப்பாடுகள் பற்றி விவரிக்கபபட்டது. தொடர்ந்து இடைவேளை.

இடைவேளையை அடுத்து வைர முத்து சொர்ணலிங்கத்தின் (கனடா) பிரதியாக்கத்தில் க.பாலேந்திராவின் நெறியாள்கையில் "துளிரும் சருகுகள்" என்ற மேடை நாடகம் இடம்பெற்றது. இதில் ராசராக சோ.குமரகுருவும், அரசராக ச.வாகதேவனும் பங்குபற்றியிருந்தார்கள். இலங்கையில் நல்ல தொழிலில் வசதியாக வாழ்ந்தவர்கள், தமது ஓய்வுக்காலத்தில் வெளிநாடுகளிற்குத் தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ வந்து இங்கு அனுபவிக்கும் மனஉளைச்சலையும், உள்ளக்குமுறலையும் யதார்த்தமாகப் பேசியது இந் நாடகம்.



தொடர்ந்து க.பாலேந்திரா, பென்னேஸ்வரன் ஆகியோரது பிரதியாக்கத்தில் "பாடம்" நாடகம் மேடையேற் றப்பட்டது. இதில் பேராசிரியராக க.பாலேந்திரா, மாணவியாக செல்வி. சற்குணானந்தன், பணிப்பெண்ணாக ஆனந்த ராணி பாலேந்திரா ஆகியோர் நடித்துள்ளனர். ஒரு மனிதன் இன்னொரு மனிதன் மீது ஆதிக்கம் செலுத்தும் போது அதாவது அதிகார வலயத்துக்குள் வந்து அகப்படும் பலவீனமானவர்களை அதிகாரத்தைப் பாவித்து எவ்வாறு அழிக்கிறார்கள் என் பதையும், ஆணாதிக்கத்தையும் இந்நாடகம் பாடமாக சமூகத்திற்குச் சொல்லிச் சென்றது. க.பாலேந்திரா, ஆனந்தராணி. பாலேந்திரா ஆகியோரது கணீரென்ற குரலும், அவர்களது நடிப்பும் ரசிகர்களை நாடகத்தின்பால் கட்டிப்போட்டது.

இதில் மாணவியாக நடித்த செல்வி சற்குணானந்தன் இலண்டனில் பிறந்தவர், சிறுவயதிலிருந்து லண்டன் தமிழ் நாடகப்பள்ளியில் நாடகம் பயின்று வரும் இவர் ஆரம்பத்தில் சிறுவர் நாடகங்களில் நடித்திருக்கிறார். தனது பட்டப்படிப்பை முடித்து "டிஅநசவீடியனீ மேபமெ" இல் வேலை பார்க்கின்றார். இன்று வளர்ந்தோருடன் நாடகம் நடிக்கின்றார். இவரது தமிழ் உச்சரிப்பும், நடிப்பும் இங்குள்ள இளந்தலைமுறைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

தொடர்ந்து நன்றியுரையுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுபெற்றது. நாடகக்கலைப்பயணம் இந்தத் தலைமுறையுடன் முடிந்துவிடவில்லை. அடுத்த இளந்தலைமுறைக்கும் இக் கலையை எடுத்துச்செல்ல முடியும் என்பதை பாலேந்திராவினால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் கட்டியங்கூறி நிற்கின்றன.

இதன் தொடர்ச்சியாக லண்டன், வின்சன் சேர்ச்சில் ஹோலில்; 2004-2013 பிறண் தமிழ் சங்க புதுவருட விழாவில் "தப்பிவந்த தாடி ஆடு" சிறுவர் நாடகம் 6வது முறையாக மீண்டும் மேடையேறியது.

• கவிதா ரஜீவன்



# ‘திரும்பி வருகிறான் தம்பி காத்திருக்கிறோம் நம்பி’

## லண்டனில் பாரதிராஜாவை அழ வைத்த நடனம்!

**லண்டனில் தமிழக இயக்குனர் இமயம் பாரதிராஜா தமிழ் உணர்வாளர்கள் திரண்டிருந்த நிகழ்வொன்றில் குரல் கரகரக்க உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டு அழுதார். பிரித்தானிய தமிழர் பேரவை (BTF) நடத்திய நிதி உதவிக்கான நிகழ்ச்சி ஒன்றில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தினார். ஆரம்பத்திலேயே தன் உணர்வுகளை கண்ணீர் விட்டழுதபடியே வெளிப்படுத்தினார்.**

ஹீரோ வின்சன்ற் சேர்ச்சில் மண்டபத்தில் சமீபத்தில் இக் கலை நிகழ்வு இடம்பெற்றது. “என் இனிய தமிழ் மக்களே” என்று தனக்கே உரிய பாணியில், வழமையான கைகளை உயர்த்தி வணங்கி பேச ஆரம்பித்த அவர், ‘வழக்கமாகவே வெளிநாடுகளுக்குச் சென்றால், என் இனிய சிட்னி தமிழர்களே! அமெரிக்க தமிழர்களே! லண்டன் தமிழர்களே! என்று சொல்லாமல், முதல் தடவையாக தமிழ் நாட்டில் சொல்வதுபோல, ‘என் இனிய தமிழ் மக்களே’ என்று அழைக்கிறேன்.

“தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவன் தமிழன்தான். தமிழால் ஒன்றானவன். அதில் பாகுபாடில்லை. வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் அவன் மொழியால் ஒன்றுபட்டவன்” என்று கூறியபோது கரகோஷம் வானைப்பிளந்தது.

“இன்றுநடந்தநாட்டியநிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது மெய் சிலிர்த்து விட்டேன். அந்த நடனங்களைப் பழக்கிய நடன ஆசிரியையும், நடன மணிகளையும்எப்படிப்பாராட்டுவதுஎன்றே தெரியவில்லை. ஆங்கில நாடொன்றில், அந்நிய கலாச்சாரத்தைக் கொண்ட நாடொன்றில் வாழுகின்ற பிள்ளைகள் முறைப்படி பரதநாட்டியத்தின் ஊடாக, வீரத்தை ஊட்டுகின்ற பாடல்களுக்கு அபிநயித்து ஆடிய நடனத்தைப் பற்றிச் சொல்லாமல் என்னால் பேச்சைத் தொடர முடியாது” என்று கண்ணாடியைக் கழற்றி - கண்களைத் துடைத்துக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்.

‘காற்றின் காலடி ஓசை கேட்குது... திரும்பி வருகிறான் தம்பி... கடலின் அலைகள் எழும்புது... காத்திருக்கிறோம் நம்பி... போகவில்லை காலம்... எங்கள் உயிரில் வாழ்கிறது ஈழம்... வருவான் வருவான் தலைவன் வருவான்’ என்ற யுகபாரதியின் வரிகளுக்கு நடனம் ஆடிய அந்த நான்கு நடன மணிகளின் நடன நிகழ்ச்சியோடு, ‘அழகே அழகே தமிழழகே எழிலழகே’ என்ற நடனமும் - ‘ஈழ விடுதலை காணப் போகிறோம்.



தமிழீழ விடுதலை காணப் போகிறோம்’ என்ற நடனமும், பாரதிராஜாவின் நெஞ்சை நெகிழவைத்து உணர்ச்சிகளைத் தட்டிவிட்ட நடனங்களாகும். “நான் படிக்கவில்லை. மண்ணையும் மக்களையும் நேசித்தவன். அதை வைத்துக் கொண்டு மட்டும் சினிமாவுக்கு வந்தவன். நான் எந்தத் தலைவனையும் பார்க்கவில்லை. காந்தியைப் பார்க்கவில்லை. ஜவஹர்லால் நேருவைப் பார்க்கவில்லை. காமராஜரை தூரத்தே இருந்து பார்த்திருக்கிறேன். ஆனால் நான் ஒரே ஒரு தமிழ் தலைவனை மட்டும் பார்த்துப் பேசியிருக்கிறேன். அவனை மட்டும் உலகத் தமிழரின் தலைவனாக மதிக்கிறேன். அவன்தான் தலைவன் பிரபாகரன். அவனோடு பேசிய வார்த்தைகள் இன்னமும் நெஞ்சில் நிறைந்திருக்கிறது. நான் பாக்கியம் செய்தவன். அவனை ‘வருகிறான் வருகிறான் தம்பி வருகிறான்’ என்று மாணவிகள் ஆடியபோது நான் அழுதுவிட்டேன். இப்போதும் அழவைக்கிறது’ என்று கூறியபோது, தன்னை மறந்து அழுது விட்டார்!

“ஒரு வெள்ளைக்காரப் பூமியில் இவ்விதமான நடனங்களை ஆடுகின்ற நமது குழந்தைகளின் ஆற்றலை என்ன என்று சொல்வது? இதனைப் பழக்கிய நடன ஆசிரியை மிகவும் பாராட்டுக்குரியவர்” என்று கூறினார்.

லண்டனில் ‘நாட்டியாலயா’ என்ற நடன நிறுவனத்தை இருபத்தைந்து வருட காலத்துக்கு மேலாக நடத்திவரும் நடன ஆசிரியை ராகினி ராஜகோபால், தமிழீழ விடுதலை உணர்வோடு நடனங்களை வழங்கி வருபவர். மறைந்த மாவீரர் கிட்டு லண்டனில் இருந்த காலத்தில், முதல் நடவையாக இங்கு மாவீரர் தினம் கொண்டாடப்பட்டது. அவரது அழைப்பை ஏற்று தனது தமிழீழ விடுதலை நடனங்களை ஆரம்பிக்கத் தொடங்கியவர், இன்று வரை தொடர்கிறார்.

அன்றைய பிரித்தானிய தமிழர் பேரவையின் நிகழ்வில் மூன்று நடனங்களையும் உருவாக்கியவர் இவரே! நடனமாடி பாரதிராஜாவின் மனதில் இடம்பிடித்துக் கொண்ட நடன மணிகள் அர்ச்சனா சந்திரமோகன், சுவன்ஜா சிறீகாந்தா, துஷி மோகன ராஜா, சகிதா பத்மலிங்கம். நிகழ்வின் இறுதியில் நடன ஆசிரியையும், நடன மணிகளையும் மேடைக்கு அழைத்து இயக்குனர் இமயம் பாராட்டினார். கவிஞர் பாலரவி எழுதித் தயாரித்த நாடகமும் பாரதிராஜாவால் பாராட்டப்பட்டது.

வித்தியாசமாக தமிழீழ விடுதலை உணர்வோடு நிழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பதில் வல்லவரான பரா பிரபா அன்றைய நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தொகுத்து அளித்தார். முன் தயாரிப்பு இல்லாமல் சமயோசிதமாக நிகழ்ச்சிகளை தொகுத்து அளிப்பது அவருக்கு கை வந்த கலை. பிரித்தானிய தமிழர் பேரவைக்குக் கிடைத்த மாபெரும் தொண்டன்.




ஸ்ரீமதி யோகா தில்லைநாதன் 20வது ஆண்டாக நடத்தும்

காணக்குயில் – 2013

6-7-2013 சனி மாலை 6.00 மணிக்கு
GREENFORD ASSEMBLY HALL Ruislip Road, GREENFORD UB6 9qn

பால, இளைய, ஆண் பெண் கானக் குயில்கள் உங்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்படும். சித்ராலயா இசைக்குழு பின்னணி இசை வழங்குவர் சிறப்புப் பாடல்களை கடந்த ஆண்டுகளின் கானக்குயில்கள் வழங்குவார்கள்.

டிக்கட் கிடைக்குமிடம்: தாரணி ஜுவலரி (வெம்பிளி)

ஆதரவு:
Iynkaran International,
Tharany Jewellery,
Levenes Solicitors,
Rausa And Co Solicitors
Air Lanka Ltd
London Baba,
Veekay Autos,
Vishna Super Foods,
Rathy Jewelers,
Thinesh Jewelers,
Southall, South Harrow,
Abi Foods

தொடர்புகளுக்கு: யோகா தில்லைநாதன்
020 34898309, 0790 332 7708
Jothy5@yahoo.co.uk

சிறுகதை



# தலைமுறை நிழல்கள்



இளைய அப்துல்லாஹ்

லண்டனில் பனி பொழிந்து கொண்டு இருந்தது. ராமநாதன் தனது வலது கையைக் கன்னத்தில் வைத்தபடி ஒருக்களித்துப் படுத்திருந்தார். அவர் படுப்பதற்குப் பட்ட சிரமம் அவர் முகத்தில் தெரிந்தது. 'மகன் கூப்பிட்டபோது லண்டனுக்கு வந்திருக்கக் கூடாதோ' என்று நினைத்துக்கொண்டார். லண்டனின் தட்பவெப்பம் அவரைப் பாடாய்ப்படுத்தியது. காற்று அதிகமாக அடித்தால் தொண்டைக் கரகரப் பும்; மழை பெய்தால் தும்மலும்; குளிர் வந்தால் இழுப்பும்; வெயில் வந்தால் தலைவலியும் வந்துவிடு கிறது.

மார்கழி மாதம்தான் ராமநாதன் லண்டனுக்கு வந்து இறங்கினார். வந்த கையோடு அவருக்கு வந்த முதல் பிரச்னை... இரண்டு கைகளிலும் தோல் உரிய ஆரம்பித்தது. பின்னர், உடம்பு எங்கும் பொரி பொரியாகத் தோல் உதிர்ந்தது. 'அவர் பயந்துவிட்டார். 'அது இங்கை வாற எல்லாருக்கும் வருகிற நோய்தான்' என்று மகன் அலட்சியப்படுத்தினான்.

இலங்கைத் தமிழர்களுக்கு லண்டன் இரண்டாவது தேசம்போல் ஆகிவிட்டது. ஆனால், எல்லாமே அந்நியமாகவே அவர் உணர்ந்தார். மகன் லண்டனுக்கு அவரைக் கூப்பிடப்போறன் என்றவுடனேயே, அவருடைய ஊர் புளியங்குளத்தில் அவருக்கு ஏகப்பட்ட மரியாதை.

'இனி என்ன, ராமநாதன் லண்டன் சீமைக்குப் போய் வாழப்போறாராமே' என்று அவருடைய வயதையத்தவர்கள் அவர் காதுபடவே பேசியபோது, பெருமையாகத்தான் இருந்தது. லண்டனில் ஒவ்வொருவரும் படும் பாட்டையும் ஓடி ஓடி உழைப்பதையும் பார்க்க அவருக்கு வேதனையாக இருந்தது. மகனோடும், மருமகளோடும், பேரப் பிள்ளைகளோடும் இருந்து கதைக்க அவருக்குக் கொள்ளை ஆசை. ஆனால், சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

லண்டன் சிட்டியில் நான்கு அறைகொண்ட பெரிய வீட்டுக்கு மகன் சொந்தக்காரன். ஐந்து பெட்ரோல் நிலையங்கள் அவனுக்கு இருந்தன. வீட்டின் ஓர் அறையில் மகனும் மருமகளும். அடுத்த அறையில் ஒரு பிள்ளை. மற்றைய அறையில் மற்ற பிள்ளை. பொக்ஸ் ரூம் ராமநாதனுக்கு. பொக்ஸ் ரூம் என்றால், ஒரு சிறிய கட்டில் போட்டு ஏறிப் படுக்க, இறங்க மட்டும் போதுமானதாக இருக்கும். அப்பாவுக்கு அது போதும் என்று மகன் நினைத்துவிட்டான்.

வளர்ந்த பேரப் பிள்ளைகள் அவரோடு ஒட்டுகிறார்களில்லை. 'ஹாய்' 'தாத்தா' என்பதோடு சரி. அவர்கள் வேலையைப் பார்க்கப் போய்விடுகிறார்கள். சில நேரம் 'தாத்தா' விடுபட்டுப்போய், 'ஹாய்' என்பதோடு சரி. அவர்களுக்கு தமிழ் பேசத் தெரியாது. அவருக்கு, ஆங்கிலம் தெரியாது.

மனைவி உயிரோடு இருந்திருந்தால், தான் இங்கே வந்திருக்கத் தேவை இல்லை என்று நினைத்துக்கொண்டார். அவரும் மனைவியும் சேர்ந்து தனக்கு வந்த விவசாய வருமானத்தில் பிள்ளைகள் இரண்டையும் வளர்க்கப் பெரும்பாடுபட்டது அவருக்குள் நினைவாக ஓடியது. 1983ம் ஆண்டு தமிழர் மீதான சிங்களர்களின் தாக்குதலுக்குப் பிறகு, அங்கு வாழவே பயமாக இருக்க, மகனை மட்டும் 1985 ஜனவரியில் லண்டனுக்கு அனுப்பிவைத்தார் ராமநாதன். மகள் மட்டக்களப்பில் கலியாணம் முடித்து அங்கேயே இருக்கிறாள்.

"அப்பா உதிலை சும்மா படுத்திருக்காமல்



உங்கை கொமினிட்டி செண்டரிலை வயதான வைக்கு ஸ்பீச் எல்லாம் வைக்கினமாம். பேசிட்டு வாங்கோ" மகன் சொல்லிவிட்டு, காரை எடுத்துக்கொண்டு போய்விட்டான். போற தெருவிலை அப்பாவை இறக்கிவிட்டுப்போகலாம் என்ற நினைப்புகூட மகனுக்கு வராமல் போய்விட்டது. இங்கு உள்ள மகன்மார்கள், மகள்மார்களுக்கு வயதான அப்பாவை மட்டும் அல்ல... யாரைப் பற்றியும் யோசிக்க நேரம் இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் வேலை பற்றிய யோசனைதான் அவர்களுக்கு.

கொமினிட்டி சென்டர்தான் இங்கு வயதாளிகளுக்கு ஆதரவு. இந்த சென்டர்கள் இல்லாவிட்டால், இலங்கையில் இருந்து வந்த வயதாளிகளில் அரைவாசிப் பேருக்குப் பொழுதுபோக்கு இல்லாமல் மனம் குழம்பி இருக்கும்.

வெள்ளைக்கார நாட்டில் ஓர் ஒழுங்கு வைத்துள்ளார்கள். அறுபத்தாறு வயது வரை உழைத்தவர்கள் பென்ஷன் எடுத்துவிட்டு வீட்டில் இருக்கலாம். அவர்களுக்கு உழைப்பின்போது சம்பளத்தில் வெட்டிய வரிப் பணம் எல்லாம் மாதா மாதம் பிரித்துக் கொடுப்பார்கள். ஆகவும் உடம்புக்கு முடியாவிட்டால், போய் வயோதிபர் இல்லத்தில் இருக்கலாம்.

மகன், மகள்மார் எல்லாம் ஃபாதர்ஸ் டே, மதர்ஸ் டே, பிறந்த நாள் என்று மட்டும் வந்து பார்த்துவிட்டுப் போவார்கள். வெள்ளைக்கார வயோதிபர்களுக்கு இது பழக்கமாகிவிட்டது. ஆனால், தமிழ்ப் பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதே பிற்காலத்தில் பிள்ளைகள் தங்களுக்கு உதவி செய்வார்கள் என்றுதானே? தமிழ்ப் பிள்ளை கள் தங்களது வயதான பெற்றோரை ஊரில் இருந்து கூப்பிட்டுவைத்துப் பார்க்கிறார்கள்தான். ஆனால், அதுதான் வயதாளி களுக்குப் பெரும் வேதனை.

கொமினிட்டி சென்டரில் 25 முதியவர் கள் இருந்தார்கள். 'இன்று மன அழுத்தம் தொடர்பாகப் பேசுவதற்கு, டொக்டர் சசி வருகிறார்' என்று அறிவிப்பு எழுதி இருந்தது. இன்றுதான் முதன்முதலில் ராமநாதன் இந்த சென்டருக்கு வந்திருந்தார். அறிமுகம் இல்லாத ஒருவர் அவருக்கு அருகில் வந்து இருந்தார்.

"என்ரை பேர் செல்லையா... நீங்கள்?"

"நான் ராமநாதன்"

"ஊரிலை எவடம்?"

"புளியங்குளம்"

"புளியங்குளம் என்றால்..."

"ஒட்டுசுட்டான் புளியங்குளம்"

'இங்கை ஆரோடை இருக்கிறியள்?"

"மகனோடை..."

"நீங்கள்?"

"மகனோடை" என்று சொல்லும்போதே செல்லையாவின் கண்கள் பனித்தன.

"ஏன் சுகமில்லையோ?"

"இல்லை... கவலைதான். பேரப் பிள்ளைகள் கவனிக்குதுகள் இல்லை. இஞ்சை பிறந்ததாலை அதுகள் நினைக்கினம் 'தாங்கள் வெள்ளைக்காரர் எண்டு'. எங்கடைத் தமிழ்ச் சமூகம் எங்களோடை அழிஞ்சுபோயிடுமோ எண்டு கவலையாய்க் கிடக்கு" என்றார் செல்லையா.

"ஏன் அப்பிடி நினைக்கிறியள்?" ராமநாதன் கேட்டார்.

அடுத்த இதழில் முடியும்

# லண்டனில் அஆஇ உயிர்மொழி வெளியீடு: வெடித்துச் சிதறிய ஆய்வுகள்!

- சறோ சந்திரகோபால்





Pics by Babu




சித்திரை 20ம் நாள், சனிக்கிழமை. கிழக்கு இலண்டன் நகரசபை மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமானது அ ஆ இ உயிர்மொழி பாடநூல் வெளியீட்டு விழா. நூலாசிரியர் தமிழாசிரியன் துரைச்சாமி சிவபாலன் அவர்கள்.

வழமையாக நூல் வெளியீட்டு விழாக்களில் ஒரு குறிப்பிட்ட தரப்பினரையே காணக்கூடியதாக இருக்கும். ஆனால் இவ்விழாவில் தமிழன்பர்கள், ஆதரவாளர்கள், தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் என 400க்கு

அவர்களின் வரவேற்புரை வளமாக இருந்தது. மிக இனிமையான குரலில் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என மாதுயா மோகனதாசும், "தமிழே அழகே அழகிய மொழியே" என சகானா தயாபரனும் பாடிய பாடல்கள் விழாவிற்கு அமைவாக இருந்தன. ஆசியுரை வழங்கிய இலண்டன் சிறீமுருகன் கோவில் முதன்மைக் குருக்கள், சிவசிறி.நாகநாதசிவன் குருக்கள் ஐயா அவர்கள், "நாம் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது முக்கியமல்ல. நாம் பேசும் மொழி தமிழ். மொழியால் ஒன்றான நாம் அனைவருமே தமிழர்கள்" எனச் சிறப்பாகப் பேசினார். ஆசியுரையைத்





மேற்பட்டவர்கள் மண்டபம் நிறைவாகக் கலகலப்புடன் அமர்ந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. வந்தோரை வரவேற்கும் நம் தமிழ்ப் பண்பாட்டுக்கொப்ப, விழாவிற்கு வருகை தந்தவர்களை வாசலில் வரவேற்று, இருக்கை வரை அழைத்துச் சென்றதோடு, சிற்றுண்டி, தண்ணீர் என அவர்கள் நலன் பேணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சம்பிரதாய முறைகளினின்றும் வழுவாது மங்கள விளக்கினை மகிழ்வுடன் ஏற்றி வைத்தனர். திரு. திருமதி ஜெகேந்திர போஸ் தம்பதியினர். கடவுள் வாழ்த்தினை செல்வன் சாகித்தியன் சிவபாலன் பாட தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாடிய சாகித்தியா சிவபாலன் (திருமதி மாதினி சிறீக்கந்தராசாவின் மாணவி) மலர் அஞ்சலி நடனத்தையும் (திருமதி பத்மினி குணசீலனின் மாணவி) ஆடி, தமிழ் ஆசிரியர்களின் (வருங்கால) வாரிசுகள் என்பதனை இருவருமே நிரூபித்தனர்.

திரு.விக்னேஸ்வரன் (ஒலிபரப்பாளர்)

தொடர்ந்து கவிதை பாட மேடையேறினார் புலவர் சிவநாதன் அவர்கள். அழகு தமிழில், அடுக்கு நடையில், அவருக்கே உரித்தான மிடுக்கான பாணியில் கவிதை தொடுத்த புலவர் அவர்கட்கு அறிமுகமே தேவையில்லை.

அடுத்து, அ ஆ இ நூல் விமரிசனத்தை அணுகுமுன்னர் அந்நூலுக்கான மதிப் புரைக்குள் செல்வது அவசியம். இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய விழாத் தலைவர் வழக்கறிஞர் திரு.செ.சிறீக்கந்தராசா அவர்கள் "இந்த நூலின் ஆசிரியர் இந்த நூலைப் பள்ளிப்பாட நூலாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் எழுதவில்லை. பள்ளிச்சிறார்க்கு அவசியமான மொழிச் செய்திகளை ஆழமாக அகலமாகக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் எழுதியிருக்கிறார். அதாவது ஒரு பாடப்பயிற்சி நூலாக எழுதியிருக்கிறார். கற்பிப்பது என்பது





ஒரு படி, முதற்படி; கற்றதைத் தங்க வைத்தல் என்பது மற்றப்படி. இந்தப்படி முக்கியமான படி; இதனையே கல்வியாளர் Reinforcement என்பார்கள். அதாவது நிலைக்கப்பண்ணுதல் என்பார்கள். அதாவது மறக்காமல் இருக்கப் பண்ணுதல் என்பார்கள். மறக்காமல் இருக்கச் செய்வதற்காக மனதில் படிய வைப்பதற்காக ஏராளமான பயிற்சிகளைக் கொடுத்து நூலோட்டத்தை நடத்தியிருக்கிறார் ஆசிரியர்" என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து இலங்கைக் கல்வி அமைச்சரின் முன்னால் கல்வி மேலதிகச் செயலாளர் உடுவை தில்லை நடராசா அவர்கள், தனது நூல் மதிப்புரையில், "கால ஓட்டத்துக்கும், நாட்டு நடப்புக்கும் பொருத்தமாக வாழ்விடச் சூழலைப் புரிந்து கொண்டு தமிழ் மொழியைப் படிப்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் எழுதப்பட்ட "கால ஓட்டத்துக்கும்," நாட்டு நடப்புக்கும் பொருந்தக்கூடியதாக, வாழிடச் சூழலைப் புரிந்து கொண்டு தமிழ் மொழியைப் படிப்பிக்க வேண்டும். மொழியினூடாகப் பண்பாடு, வரலாறு முதலியவற்றையும் அறியச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது." கற்றல், கற்பித்தல் நடவடிக்கை என்பன எல்லா இடத்தும் ஒரு சீராக அமைவதில்லை. வாழ்ந்த இடச் சிறப்புகளும், வாழிடத் தகவலும் சேர்ந்தமைந்த சிறப்புமிக்க

- 29ம் பக்கம் பார்க்க

ஐக்கிய இராச்சிய பல்கலைக்கழக அனுமதிகள் & கல்லூரி அனுமதிகள் கல்வி பயிலும் முனைப்புக்கான

மாணவ விசா விண்ணப்பம்

(prospective student visa application + Advice)

இலங்கை & இந்தியாவிலிருந்து ஐக்கிய இராச்சியத்தில் கல்வி பயிலும் முனைப்புடன் வரும் மாணவர்களுக்கான ஆலோசனைகள் & விண்ணப்பங்கள் (பல்லைகழக அனுமதி அல்லது கல்லூரி அனுமதி பெறத் தேவையில்லை)

இது தொடர்பான ஆலேசானைகள் தொலைபேசி மூலம் வழங்கப்படமாட்டாது. நேரில் முன் அனுமதி பெற்று வருவதுடன் இலங்கை இந்தியாவிலிருந்து வர விரும்புவோரின் கல்வித்தகமைகள் ஆங்கில அறிவுச் சான்றிதழ் & கடவுச்சீட்டு பிரதி & வங்கி வைப்பில் உள்ள நிதி பற்றிய விபரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆலோசனைக்கு கட்டணம் அறவிடப்படும்

பல்கலைகழக / கல்லூரி அனுமதிகள் - ஆலோசனைகள் விண்ணப்பங்கள்.
முன் அனுமதி பெற அணுகவேண்டிய தொலைபேசி எண்கள்.

020 5428222 / 02086824494
07769 185 592 / 7448354753

வாரத்தில் 7 நாட்களும்
காலை 11.00 மணி முதல் மாலை 5.30 வரை

kulenedran immigraion law centre
90 high street, colliers wood, london sw19 2BT
90 high street, colliers wood, london sw19 2BT

## வலி சுமக்கும் வன்னிக் கதைகள் -1



# மனிதம் கொன்று மிருகம் மட்டும்

வவுனியூர் இரா.உதயணன்

**போருக்குப் பின் அமைக்கப்பட்ட வயோதிப முகாமிலிருந்து செல்லையர் இரண்டு கிழமைகளுக்கு முன்புதான் மகள் வனிதாவுடன், அவளுக்கு உதவியாக வாழ வந்திருந்தார். செல்லையருக்கு வயது எழுபத்திநான்கு. போரின்போது மனைவி கனகமணியைப் பறிகொடுத்தவர். போர் நடந்து முடியும் கட்டத்தில் தப்பி வந்த சனங்களை ஆமிக்காரர் பிரித்து வெவ்வேறு முகாம்களுக்கு அனுப்பும்போது, செல்லையாிடம் இருந்து பிரித்து, அவர் மகள் வனிதாவை செட்டிகுள 'மினிபாம்' முகாமிற்கு அனுப்பியிருந்தார்கள். செல்லையரை வவுனியாவில் ரூசைப்பிள்ளைகுளம் பகுதியில் இருந்த ஒரு வயோதிப முகாமிற்கு அனுப்பியிருந்தார்கள். மனைவியை இழந்த செல்லையர் மகளையும் பிரிந்தார். அவர் இருந்த முகாமில் எல்லோரும் எழுபதைத் தாண்டியவர்கள்தான். ஆண்கள் பெண்கள் என இரு பாலாரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.**

அங்கே வாழ்ந்த பலருக்கு உறவுகளைப் பிரிந்த ஏக்கம். அந்த முகாமில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனுக்கும் பின்னால் ஒரு சோகக் கதை இருந்தது.

செல்லையர் கடவுளைத் திட்டிய நாட்கள் பல.

"என்னை மாத்திரம் இன்னும் ஏன் விட்டு வைத்திருக்கிறாய்? என் உயிரையும் அந்தப் போர்களத்தில் எடுத்திருந்தால் இண்டைக்கு நான் என்ர மனுசி பிள்ளையை நினைத்து நினைத்து அவதிப்படத் தேவையில்லையே" - அடிக்கடி செல்லையர் புலம்பிய வார்த்தைகள்.

எத்தனையோ இரவுகள் நித்திரை வராமல் புரண்டு புரண்டு படுத்திருப்பார். வயிறு பசி எடுக்காது. வெறும் நீரை மட்டும் 'மடக் மடக்' என்று குடித்து விட்டு, 'என்ர வனிதா எப்படி எங்கே இருக்கிறாளோ' என்று நினைத்து நினைத்து ஏங்கிய நாட்கள்தான் எத்தனை... அந்த முகாமில் கணவனை இழந்த மனைவிமார்கள், மனைவியை இழந்த கணவன்மார்கள், சொந்தப் பிள்ளைகளை கண் முன்னே துடிக்கத் துடிக்கப் பறி கொடுத்த தாய், தந்தையர், இன்னமும் பிள்ளைகள் எங்கே என்று தெரியாமல் தவிக்கும் பெற்றோர்- இப்படிப் பல வகையாகப் பரிதவிப்போர்!

இவர்களுக்கு வாழ்க்கை என்ற போராட்டத்தில் போராடி முடியும் இறுதிக் கட்டத்தில், மீண்டும் தொடங்கிய ஒரு போராட்டம்தான், இந்த இழப்புகள்!

செல்லையரின் உடம்பில் நெஞ்செலும்புகள் வெளியே தெரிந்தன. கைகள் சுருங்கி, கண்களின் குழிகள் பெரிதாகி, சோகத்தின் களைப்பு நிறையவே அவரில் தெரிந்தது.

மூன்று வருடங்களாக தந்தையைத் தேடித் திரிந்த வனிதா எப்படியோ செல்லையர் இருந்த இடத்தை கிராம சேவர்களின் உதவியுடன் கண்டுபிடித்து, தனது சிறிய குடிசைக்குக் கூட்டி வந்திருந்தாள்.

செல்லையருக்கு மகளைக் கண்டதும், மகளுடன் எஞ்சிய காலத்தைக் கழிக்கப் போகின்றேனே என்ற ஆறுதல்! தனக்கு ஒன்று நடந்தால் - தூக்கிப் போட்டு எரிக்க மகள் கூடவே இருக்கிறாள் என்ற ஆத்ம திருப்தி!

ஆனால் இருபத்தாறு வயதான வனிதாவோ மிகவும் இளைத்துப் போயிருந்தாள். செல்லையருக்கு மகளைப் பார்க்கப் பார்க்கக் கவலையாக இருந்தது.

ஒரே குடும்பமாக புதுக்குடியிருப்பில் வாழ்ந்த காலத்தில் வனிதா எப்படி இருந்தாள்? அழகு தேவதைதான்! போரின் வடுக்கள் அவளைப் பாதித்திருந்தன.

குடிசையின் திண்ணையில் அமர்ந்திருந்த செல்லையர் மூன்று நாட்களுக்கு முன் வந்த 'வீரகேசரி'ப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். வனிதா இரண்டு ரொட்டிகளைப் பாத்திரத்தில் போட்டு செல்லையரிடம் கொண்டு வந்து நீட்டினாள்.

செல்லையர் வனிதாவை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன பிள்ளை - உன்ரை புருஷன் எப்ப உன்னைப் பார்க்க வருவார்? நானும் வந்ததிலிருந்து எத்தனையோ தரம் கேட்டுப் போட்டேன்"

"அப்புச்சி! அவருக்கு அடிக்கடி லீவு கொடுக்க மாட்டார்கள். கொழும்பில் ஒரு கடையிலை வேலை செய்கிறார். மாதக் கடைசியில்தான் வருவார். இப்ப நீங்க சாப்பிடுங்கோ"

உள்ளே வனிதாவின் இரண்டு வயதுப்பிள்ளை அழும் சத்தம் கேட்டது.

"அப்புச்சி! சாப்பிடுங்கோ! இவனைப் பார்த்திட்டு வாறன்" - உள்ளே ஓடினாள் வனிதா. அங்கே அவளின் ஆண் குழந்தை. அம்மா கொடுத்த ரொட்டித் துண்டைப் பிய்த்துச் சாப்பிட முடியாமல் அழுது கொண்டிருந்தது. வனிதா ரொட்டித் துண்டை சிறிய துண்டுகளாக்கி ஒவ்வொன்றாக மகனின் கையில் கொடுத்தாள்.

செல்லையர் ரொட்டியைச் சாப்பிட்டபடி பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார். அந்தத் தலைப்பைப் படித்து ஒரு கணம் அதிர்ந்து விட்டார். 'யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவி விபச்சாரம். ஹோட்டல் ஒன்றில் வாலிபனுடன் கைது.'

அட கடவுளே... இது என்னடா... எங்கட இனத்தின்ரை கலாச்சாரத்தையும் சீரழிக்கத் தொடங்கிவிட்டியோ' - மீண்டும் கடவுளை நொந்து கொண்டார் செல்லையர்.

"வனிதா வனிதா" - செல்லையர் கூப்பிட்டார்.

"என்ன அப்புச்சி?" -வெளியே வந்தாள் வனிதா.

"இங்க பாத்தியா... என்ன எல்லாம் நடக்குது. பள்ளிக்கூடத்துக்குப் போறவ செய்த வேலையை.

கடவுளே உனக்குக் கண் இல்லையா?"

"அப்புச்சி இப்ப இப்படி விசயங்கள் நிறைய நடக்குது. காலம்மாறிப் போச்சு. கலாச்சாரமும் சீர் கெட்டுப் போச்சு. இப்ப அப்புச்சி பணத்துக்கும் பதவிக்கும்தான் மதிப்பு. எங்கட சனங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு என்ன எல்லாம் செய்யுதுகள். அந்தப் பாடசாலைப் பிள்ளைக்கு என்ன பிரச்சனையோ கடவுளுக்குத்தான் தெரியும். எங்கட இடத்தில போருக்குப் பிறகு எல்லாமே மாறிப்போச்சு. இப்படி எல்லாம் நடக்குமென்று யார்தான் எதிர்பார்த்தது?"

-வனிதா சொல்லி விட்டு உடுப்பு மாற்ற உள்ளே சென்றாள்.

"பிள்ளை ஒரு சாயத்தண்ணி போட்டுத் தாறியே"

மகனுக்கும் உடுப்புகளை மாற்றித் தானும் மாற்றிக் கொண்டு 'பிளென் ரீ' போட்டுத் தந்தையிடம் கொடுத்துவிட்டு, "வேலைக்குப் போறன். மூன்று மணிக்கு வந்திடுவன். ரெண்டு ரொட்டித் துண்டு வச்சிருக்கிறன். மத்தியானம் சாப்பிடுங்கோ. தண்ணியும் எடுத்து வைச்சிருக்கிறன்"

வனிதா செல்லத் தயாராக, "அப்ப பேரனை என்ன செய்யப் போறாய்? என்னோடை விட்டுப் போவன். எனக்கும் பொழுது போகும்"

செல்லையர் சொல்ல, "அப்புச்சி! அவன் அடிக்கடி அழுவான். பசிச்சாலும் அழுவான். இன்னும் கொஞ்ச நாள் பழகட்டும். அதுக்குப் பிறகு உங்களோடை விட்டுட்டுப் போறன்"

மகனைத் தூக்கி இடுப்பில் சுமந்தபடி, தெருவில் இறங்கி தையல் கடையை நோக்கி நடந்தாள்.

செல்லையர் தொடர்ந்து பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது தெருவில்போன மருதமுத்து 'தங்கச்சி' என்று கூப்பிட்டபடி, குடிசைப் பக்கம் வந்தான்.

செல்லையரைக் கண்டதும், "ஐயா" என்று சந்தோஷத்தால் கத்தினான்.

செல்லையர் நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு அடையாளம் தெரியவில்லை.

"தம்பி நீ..." என்று இழுத்தார்.

"ஐயா நான்தான் புதுக்குடியிருப்பு மக்கடை கந்தசாமியின்ரை மகன் மருதமுத்து"

"ஓமடா தம்பி.. இப்பதான் எனக்கு ஞாபகம் வருகுது"

"ஐயா வனிதா உங்களைத் தேடாத இடமில்லை. கடவுளே எண்டு எப்படியோ கண்டு பிடிச்சு கூட்டிக் கொண்டு வந்திட்டுது. உங்களைக் கண்டதும் எனக்கும் ஒரே சந்தோஷமாயிருக்குது"

"அப்பர் எங்கடா தம்பி?"

"என்ரை அப்பர் - அம்மா - தங்கச்சி எல்லாரையும் இந்தப் போர் பலி எடுத்திட்டது. இப்ப நான் தனி.

சரி அந்தக் கதையை விடுங்கோ ஐயா. தங்கச்சி எங்கை?"

"இப்பதான் வேலைக்கு வெளிக்கிட்டு போனது" - செல்லையர் இழுத்தார்.

"தங்கச்சிதான் பாவம். வந்தவனும் ஏமாத்திட்டுப் போட்டான்"- மருதமுத்து சொன்னான்.

செல்லையர் பதறிப் போனார். "என்ன தம்பி புதுக் கதை சொல்லுறாய்?"

"தங்கச்சி உங்களுக்குச் சொல்லேல்லையா ஐயா?"

அவரால் என்ன பேசுவதென்று தெரியவில்லை. "இல்லையடா தம்பி.. என்னெண்டு சொல்லு..."

"நீங்க மனக் கஷ்டப்படக் கூடாது என்று தங்கச்சி சொல்லியிருக்காது. நான் வாய் தவறிச் சொல்லிப் போட்டன்" மருதமுத்து செல்லையரின் முகத்தைப் பார்த்தான்.

செல்லையர் பதற்றத்துடன் மருதமுத்துவைப் பார்த்தார்.

"தம்பி.. நீயாவது உண்மையைச் சொல்லு. என்ரை பிள்ளை தன்ரை புருஷன் கொழும்பிலை என்றுதான் சொன்னவள்"

"ஐயா..." - இழுத்தான் மருதமுத்து.

"சொல்லடா தம்பி... எனக்கு ஒரே பதற்றமாய் இருக்குது"

"தங்கச்சி செட்டிகுளம் முகாமில் இருக்கேக்க அங்கே வேலை அலுவலாக அடிக்கடி வந்து போன அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தங்கச்சியோடை கதைச்ச இடத்தில, தங்கச்சியின்ரை கதையைக் கேட்டு இருக்கிறார். தங்கச்சியும் தனக்கு நடந்த கதையைச் சொல்லியிருக்கிறாள்" - மருதமுத்துவால் தொடர்ந்து சொல்ல முடியாமல் தடுமாறினான்.

குழி விழுந்த செல்லையரின் கண்கள் அவனையே பார்த்தன.

"அந்த உத்தியோகத்தரும் தங்கச்சியின்ர வடிவையும், குணத்தையும் முகாமில அவதானித்துப் போட்டு, நன்கு தெரிந்த ஒருவருடைய மகன் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறான். அவனுக்கு இப்படிப் போரில் கஷ்டப்பட்ட ஒரு குணமான பெண்ணைக் கலியாணம் முடிக்க விருப்பம் என்று சொல்லியிருக்கிறார். தங்கச்சியும் அந்த நேரம் உடனே ஒன்றும் சொல்லேல்ல. 'யோசிச்சுப் போட்டு சொல்லுறன். அப்புச்சியும் எங்கேயோ தெரியாது. முதலில் கண்டு பிடிக்க உதவி செய்யுங்கோ' என்று தங்கச்சியும் கேட்டிருக்கிறாள். அந்த உத்தியோகத்தரும் முயற்சி செய்யிறன் என்று சொல்லிப் போட்டுப் போயிட்டார்"

"சொல்லு தம்பி"

"கொஞ்ச நாட்களுக்குப் பிறகு திரும்பவும் அந்த உத்தியோகத்தர் வந்து வனிதாவிடம் கேட்க வனிதா, 'ஒரு முடிவும் எடுக்கேல்ல' என்று சொல்ல அந்த மனுஷன் விட்டால்தானே! 'பொடியன் நல்ல இடம். அவனைக் கல்யாணம் செய்தால் உன்ரை வாழ்க்கையும் நல்லாக அமையும். அந்தப் பொடியனைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டுறன்' என்று சொல்ல, வனிதாவும் உடன்பட்டு விட்டாள்.

ஒரு நாள் அந்தப் பொடியனை எப்படியோ முகாமிற்குக் கூட்டி வந்து வனிதாவைக்காட்ட, வனிதாவுக்கும் பிடித்துவிட்டது. கொஞ்ச நாளைக்குள் வனிதாவை எப்படியோ வெளியே எடுத்து விட்டார் அந்த உத்தியோகத்தர்.

"வெளிநாட்டிலிருந்து வந்த பொடியனின் பெயர் சுரேஷ். அவன் வனிதாவுடன் நெருங்கிப் பழகினான். இன்னும் மூன்றும் நிற்பதாகவும், திருமணம் முடித்து தன்னுடன் கூட்டிப் போவதாகவும் வனிதாவுக்கு சொல்லியிருக்கிறான். தனக்கு நல்ல வாழ்வு ஒன்றைக் கடவுள் காட்டிவிட்டார் என்று வனிதாவும் சுரேசுடன் நெருக்கமானாள்."

கேட்டுக் கொண்டிருந்த செல்லையரின் கண்களிலிருந்து நீர் பொழிந்தது.

மருதுமுத்து தொடர்ந்தான்.

"நெருங்கிப் பழகி வயிற்றில் பிள்ளையையும் கொடுத்து விட்டு - தங்கச்சிக்குச் சொல்லாமல், வெளிநாட்டுக்கு ஓடிவிட்டான். தங்கச்சியும் ஏமாந்து போச்சு."

"பாருங்கோ ஐயா... இப்படி வெளிநாட்டில் இருந்து வந்து போர்க்காலத்தில் கஷ்டப்பட்டு, போரின் வடுக்களைச் சுமந்து, வாழ ஆசைப்பட்ட வனிதாவுக்கு நடந்த கதியை...? கொஞ்சம்கூட ஈவு இரக்கம் இல்லாமல், இப்படியான ஏமாற்று வேலையைச் செய்து, வனிதாவைக் கெடுத்துவிட்டு ஓடிட்டானே!"

மருதமுத்துவின் கண்களும் கலங்கி விட்டன.

"இதைப் பார்க்கத்தான் இன்னும் என்னை உயிரோடை வைச்சிருக்கிறியா கடவுளே! இன்னும் இன்னும் எங்கட ஆட்களே வலியையும் வடுக்களையும் தருதே..."

பெரிதாகக் கத்தி அழுதார் செல்லையர்.

கேட்பதற்கு யாருமில்லை - மருதமுத்துவைத் தவிர!

## மூவரின் உயிர்...

12ம் பக்கத் தொடர்ச்சி

அனுப்பிவைக்காமல், வெறுமனே அனுப்ப, கவர்னரும் கருணை மனுக்களை நிராகரித்து தூக்குத்தண்டனையை உறுதி செய்துவிட்டார். கலைஞரின் மனப்போக்கைக் கண்டு மனம் உடைந்த நால்வரும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தபோது, "தமிழக அமைச்சரவையின் ஆலோசனையின்படிதான் கவர்னர் முடிவெடுக்க வேண்டும்" என்று தீர்ப்பு எழுதிய நீதிபதிகள்; மனிதாபிமான அடிப்படையில் நால்வரின் கருணை மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்யுமாறு கவர்னருக்கு ஒரு வாய்ப்பு அளித்தனர். இதனைத் தொடர்ந்து கலைஞர் அமைச்சரவையைக் கூட்டி, நால்வரின் தூக்குத்தண்டனையைக் குறைக்காமல் நளினியை மட்டும் தூக்கிலிருந்து காப்பாற்றும் அமைச்சரவை தீர்மானத்தை கவர்னருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இது மட்டுமல்ல; கலைஞர் முதல் அமைச்சராக இருந்தபோது, 2011-ல் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பணியில் இருக்கிறார். பேரறிவாளன், சாந்தன், முருகன் மூவரையும் நீதிமன்ற உத்தரவுப்படி தூக்கிலிட மத்திய அரசு முடிவு எடுத்ததும், இவர்களின் கருணைமனுக்கள் குறித்து கலைஞர் அரசிடம் கருத்து கேட்டது. ஆவணங்களையும் டில்லி அனுப்பிவைத்தது. என்ன செய்தார் கலைஞர்? அமைச்சரவையும், கூட்டப்படவில்லை. தீர்மானமும் எடுக்கவில்லை! இப்பொழுது கலைஞரின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது?

"முதல்வர் ஜெயலலிதா என்ன செய்து கொண்டிருக்கிறார்... தனது அமைச்சரவையைக் கூட்டி, பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பி வைத்து அந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டியதுதானே..." என்று தனது தவறுகளை மறைத்து கொட்டாவி விடுகின்றார்!

கலைஞர் தனது ஆட்சியில் என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தாரோ அத்தனையையும் பொசுக்குவதுதான் அம்மாவின் செயல்பாடு, இந்த விஷயத்தை கலைஞர் மறக்கமாட்டார். மூவர் தூக்குத் தண்டனை குறித்து கலைஞர் என்ன குறிப்பிடுகிறாரோ இதற்கு எதிர்மாறாகத்தான் ஜெயலலிதா செயல்படுவார் என்பது தெரிந்தும், யோசனை கூறுகின்றார் என்றால் விபரீதமான விமர்சனங்கள்தான் வெளிவரும் என்பது கலைஞருக்குப் புரியாதா? "நளினியின் தூக்குக் கயிற்றை துண்டு துண்டாக்கி, அவர் உயிரை நான்தானே காப்பாற்றினேன்" என்று கலைஞர் சந்தர்ப்பம் பார்த்து நாளை வாய் திறப்பார் என்பது தமிழக முதல்வருக்கு தெரியாததல்ல. இம்மூவரையும் காப்பாற்றும் வகையில் தமிழக முதல் அமைச்சர்ஜெயலலிதா (அமைச்சரவையை கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி, தமிழக அரசின் தூக்கு ரத்துத் தீர்மானத்தை கவர்னருக்கு அனுப்பி, தூக்கிலிருந்து மூவரையும் பாதுகாக்கும் வகையில்) செயல்பட்டால், "இதனை எப்போதோ செய்திருக்கலாம்... இருந்தாலும் நான்தான் முன்னோடியாக நளினி உயிரை காப்பாற்றிவிட்டேனே..." என்று கலைஞர் கேள்வி - பதில் கூறுவார் என்பதும் தெரியவேண்டும். இந்த உயிர்ப்பிச்சை விவகாரத்தில், இத்தனையையும் மீறி, மூவர் உயிரை மட்டுமல்ல, இந்த வழக்கில் நீதியை எதிர்பார்த்திருக்கும் நான்கு ஆயுள் தண்டனைக் குற்றவாளிகள் (றொபர்ட் பயஸ், ஜெயக்குமார்-புழல் சிறை, நளினி - வேலூர் பெண்கள் சிறை, ரவிச்சந்திரன் - மதுரை மத்திய சிறை) காப்பாற்றப்பட தமிழக முதல்வர் திடீர் நடவடிக்கை எடுப்பார் என்பதுதான் தமிழுணர்வாளர்களின் நம்பிக்கை.

விரைவாக செயல்படுமாறு ஜெயலலிதாவுக்கு கோரிக்கை

பேரறிவாளன் வழக்கறிஞர் சுரேந்தர் மூலமாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடந்தமாதம் விடுத்துள்ள கோரிக்கையில், "எங்கள் மூவரின் உயிரும் உங்கள் கைகளில்தான் இருக்கிறது" என்று கண்ணீர் விட்டுள்ளார். "22 ஆண்டுகளாக என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் தவித்து வருகின்றோம். எங்களுக்கு மரண தண்டனை அளித்த நீதிபதிகளில் ஒருவரான கே.டி.தாமஸ், எங்கள் வழக்கில் தண்டனை வழங்கிய பிரிவுகளில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், அதனால் மரண தண்டனை விதிப்பது ஏற்புடையதல்ல என்றும் இப்பொழுது கருத்து வெளியிட்டுள்ளார். எல்லாவற்றையும் இழந்து இப்போது நாங்கள் முழுவதுமாக நம்பி இருப்பது உங்களைத்தான். அரசியல் அமைப்புச் சட்டம் 71 மற்றும் 161 பிரிவுகளின்படி எங்களை தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் எங்களது தண்டனையை ரத்துச் செய்ய மாநில அரசுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளது. இந்த சட்டத்தைப் பயன்படுத்தி, தமிழக முதல்வர் விரைவாக எங்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றோம்" என்று பேரறிவாளன் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளார். தமிழக முதல்வரின் விரைவான செயல்பாட்டை தமிழக மக்கள் மட்டுமின்றி உலகத் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

### வேலூரிலிருந்து டில்லிக்கு வீடியோ வழியாக பேரறிவாளன்

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தூக்கு கைதிகள் பேரறிவாளன், சாந்தன், முருகன் மூவரும் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களது கருணை மனுவை நிராகரிக்க காலம் தாழ்த்தியதால் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக்கோரி தாக்கல் செய்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் டில்லி உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இதனால் தண்டனையை நிறைவேற்றுவதும் நிறுத்தி வைக்கப்பட்டது. கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்கவிரும்பி டில்லியில் உள்ள மத்திய தகவல் ஆணையத்துக்கு முறையீடு செய்து மே மாதம் 9-ம் திகதி மத்திய தகவல் ஆணையர் சுஷ்மாசிங், மத்திய நீதித்துறை இணைச் செயலாளர் ஆகியோர் 'வீடியோ' வழியாக பேரறிவாளனிடம் விசாரணை நடத்தினர். அரைமணி நேரம் நடைபெற்ற விசாரணையில் பேரறிவாளன் கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகம், ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற ஆலோசனைகள் குறித்து பேரறிவாளனிடம் விளக்கம் அளிக்கப்பட்டது. ஒரு கொலைக்குற்றவாளி அதுவும் தூக்குத் தண்டனை பெற்றவர் வேலூரிலிருந்து டில்லிக்கு 'வீடியோ கொன்பரன்ஸ்' மூலமாக தனது மனுவை ஜனாதிபதி நிராகரித்ததற்கான காரணத்தை அறிய தொடர்பு கொண்டதும், விளக்கம் கேட்டதும் வேலூர் சரித்திரத்தில் இதுவே முதல் தடவையாகும்.

ஈ.கே.ராஜகோபால்

# அற்புதமான மனிதர்



லண்டனில் புகழ்பெற்ற டாக்டர். புலம் பெயர்ந்த தமிழர்கள் இதயங்களை வென்றவர்.

**கடந்த 45 ஆண்டு காலத்துக்கு மேலாக அவர் செய்கின்ற வைத்தியப் பணி தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது என்பதைவிட, மனிதர்களை நேசிக்கின்ற அவரது இயல்பான பண்பினால், பயனடைந்த புலம்பெயர்ந்த தமிழர்களும் மனதார அவரை வாழ்த்திக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். லண்டனில் புகழ் பெற்ற வைத்திய நிபுணராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் டாக்டர் நவரத்தினம். ஆற்றல் மிக்க அமைப்பாளர், செயல்வீரர், கலைஞர்களின் இனிய நண்பர், இசையின் ருசியை அணுவணுவாக ரசிக்கும் தீவிரமான கர்நாடக சங்கீத 'ராட்சத' காதலன். 75வது வயதை நிறைவோடு கொண்டாடும் நிறைவான அற்புத மனிதர்.**

'சிலர் தொட்டது துலங்கும்' என்பார்கள். நீண்ட கால நெருக்கமான பழக்கத்திலிருந்து நான் அறிந்து, பார்த்ததிலிருந்து தெரிந்த அத்தகைய ஓர் அற்புதமான ஒரு மனிதர்தான் டாக்டர் நவரத்தினம்.

ஒரு பணியை எடுத்துக்கொண்டால், அர்ப்பணத்தோடு செயல்படுகின்ற சுறுசுறுப்பு, களைப்பறியாத செயல்பாடு, இத்தனையும் கொண்ட ஒருவரை நினைத்துப் பார்க்கிறேன். அதே உற்சாகம். இது அபூர்வமானது. சுப்பிரமானது.

தான் நம்பியதிலும், சார்ந்ததிலும் வழுவாதிருப்பவர். இன்னும் சொன்னால், இவற்றில் உள்ள நெருக்கம் அதிகரித்தே வந்திருக்கிறது. தான் நம்பிய கருத்தையே உறுதியாகப்பற்றி வாழ்தல் அவரது தனித்துவம்.

ஆற்றல்மிக்க அமைப்பாளர், செயல் வீரர், கலைஞர்களின் இனிய நண்பர், இசையின் ருசியை அணுவணுவாக ரசிக்கும் தீவிரமான ரசிகர் என்று சில வரிகளிலே அவரைச் சொல்லி விடலாம்.

லண்டனில் புகழ் பெற்ற வைத்திய நிபுணராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். கடந்த 45 ஆண்டு காலத்துக்கு மேலாக அவர் செய்கின்ற வைத்தியப் பணி தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது என்பதை விட, மனிதர்களை நேசிக்கின்ற அவரது இயல்பான பண்பினால் பயனடைந்த தமிழர்களும் மனமார அவரை வாழ்த்திக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன்; நிறையளவு கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஈழத்தில் தெல்லிப்பழையை அண்டிய விழிசிட்டி என்ற கிராமத்தில், வசதியான விவசாயக் குடும்பத்தில் பிறந்த அந்தச் சிறுவன், இயற்கையாகவே பக்தி ரசத்தை அள்ளித் தருகின்ற பண்ணிசையை ரசித்து மெய் மறந்தான். ஞான வைரவர் கோவிலில் நடக்கும் வெள்ளிக்கிழமை பூசைகளின் போது இசையோடு இரண்டறக் கலந்தான். அவனது மூத்த அண்ணனின் சங்கீதமும் அவனுக்கு பெருத்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது. சிறு வயது வாழ்வில் அவன் உணர்வோடும், உயிர்ப்போடும் உரம்பெற்ற இசை இன்று வரை பயணிப்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

மகாஜனாக் கல்லூரியால் புகழ் பெற்ற கிராமம் தெல்லிப்பழை என்றுகூடச் சொல்லலாம். அந்தக் கல்லூரியிலிருந்துதான் நவரத்தினம் என்ற அந்த இளைஞர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வைத்தியப் பிரிவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதிலும் பெருமைப்பட வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. ஆம்; மகாஜனாவிலிருந்து அப்போது மூன்றாவது ஆளாக மருத்துவத் துறைக்குத் தெரியப்பட்டவர் இவர். கிராமத்தைச் சுற்றி இருப்போர் படிக்கும் பாடசாலையாக மட்டும் இருந்த மகாஜனாவுக்கு, குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும், நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் படை எடுக்க ஆரம்பித்தனர்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தில் படித்துக் கொண்டிருக்கிற காலத்தில், அவரது முழுக்கவனமும் படிப்பில் இருந்தாலும், இசையும் இதயத்தோடு இணைந்திருந்தது. அக்காலத்தில் ஜி.என்.பாலசுப்பிரமணியம் என்ற இசை மேதையின் இழப்பை இன்னமும் மறக்கமுடியாமல் மனதோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது. படிப்புத் தவிர்த்த பொழுதுகள், இதமான சங்கீத ஞானிகளின் இசை நாடாக்களைக் கேட்பதில் கழித்த நினைவுகளை நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கிறார்.

1968ம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் மூன்றாண்டு பயின்று வைத்திய நிபுணரான பின்னர், ஏற்பட்ட பல மாற்றங்கள், அவர் வாழ்வில் ஏற்பட்ட புதிய அத்தியாயங்கள் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

லண்டனில் உள்ள ஒரு சில தமிழ் உணர்வாளர்களோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு அவரைப் பக்குவப்படுத்தியது. டாக்டர் ஆறுமுகம் என்ற மனிதர் மறைந்து விட்ட போதிலும், அவர் மனதில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தொழிலால் பொறியியல் நிபுணராக இருந்த ஆறுமுகம், அந்தக் காலத்தில் தமிழர்களின் சமூக நலத்தோடு மட்டும் இல்லாமல், தூர நோக்கோடு செயல்பட்ட மாபெரும் மனிதராகச் செயல்பட்ட மேதை என்றளவில் டாக்டர் நவரத்தினம் மனதில், அவரைப் பற்றிய நினைவு அழியாது பதிந்திருக்கிறது. இலங்கையிலிருந்து லண்டனுக்கு கல்வி பயில்வதற்காக வந்த சுமார் 300 பேருக்கு 'கார்டியனாக' இருந்திருக்கிறார் இந்த மாமனிதர் ஆறுமுகம் என்பதைத் தெரியப்படுத்தினார். தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னோடியாக இருந்த மறைந்த 'ஈரோஸ்' இரத்தினசபாபதி போன்ற சிலரோடு சேர்ந்து இயங்கிய டாக்டர் ஆறுமுகத்தின் தன்னலமற்ற சேவையை நன்றியோடு நினைவு கூருகிறார் டாக்டர் நவரத்தினம்.



டாக்டர் நவரத்தினத்தை தமிழகத்திலிருந்து வருகை தந்த இசை அரசிகள் சுதா ரகுநாதனும், பூஷணி கல்யாணராமனும் கௌரவிக்கிறார்கள். லண்டன் சிவன் கோயில் மண்டபத்தில் நடந்த இசை மேதை ஜி.என்.பி விழாவில் இக் கௌரவம் அளிக்கப்பட்டது.

லண்டனில் தமிழர்களுக்கான பொது அமைப்புகளில் 'ஸ்கொட்' முதன்மையானது. பல பணிகளைச் செய்திருக்கிறது. அந்த அமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இயங்கிய டாக்டர் நவரத்தினம், 30 ஆண்டு காலத்துக்கு மேலாக சைவத்துக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர். ஆரம்ப காலத் தலைவராக இருந்திருக்கிறார்.

லண்டன் சிவன் கோவிலைப் பற்றிச் சொன்னால், இந்த ஆலயத்தை உருவாக்கிய சச்சியைச் சொல்லாமல், டாக்டர் நவரத்தினத்தைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிவன் கோவில் சச்சி என்று அன்பாக இன்றும் அழைக்கப்படும் சச்சிதானந்தன், சிவன்கோவிலுக்குக் கண்டெடுத்த முத்துத்தான் டாக்டர் நவரத்தினம். சிவன் கோவிலைப் பிரித்துச் சச்சியை எப்படிப் பார்க்க முடியாதோ, அப்படித்தான் டாக்டர் நவரத்தினத்தைப் பிரித்துச் சிவன் கோவிலைப் பார்க்க முடியாது. பெயருக்கு அறங்காவலராக அவர் இருக்கவில்லை. செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். அங்குள்ள சிவன் மண்டபம் இன்று நிமிர்ந்து நிற்கிறது என்றால், அதற்கு முக்கிய பங்கு வகித்திருக்கிறார். வங்கி கடன் வழங்க மறுத்தபோது, தன் பணத்தை கொடுத்து மண்டபத்தைக் கட்டி முடிக்க உதவினார். வங்கிபோன்று இயங்கியிருக்கிறார். சச்சியின் திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து சிவன் கோவிலின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவை செய்திருக்கிறார்.

சங்கீதத்திற்கு லண்டனில் அவர் உரிய இடத்தை வழங்கி வருவதை குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆண்டுக்கு ஒரு தடவை தமிழ்நாட்டிலிருந்து இசை மேதைகளை லண்டனுக்கு அழைத்து, இசை விழாக்களை நடாத்துவது, இலகுவான காரியமல்ல. தனி மனிதனாக இருந்தாலும் ஒரு நிறுவனம் போன்று அவர் இயங்குவதைக் கண்டு எனக்குள்ளேயே வியந்திருக்கிறேன்.

நெய்வேலி சந்தானகோபாலன், பூஷணி கல்யாணராமன் போன்ற பல இசை மேதைகள் இங்கு வந்து சங்கீதக் கச்சேரியை நடாத்துவதற்கு அவரே காரணம். லண்டனிலுள்ள இசை ரசிகர்கள் இந்த நிகழ்ச்சிகளை இங்கேயே கண்டு களித்திட அரிய வாய்ப்பினை அளித்து வருகிறார். மிகச் சிறந்த ஒரு பாடகியான பூஷணி ஈழத்தில் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆயினும் தமிழ்நாட்டில் முன்னணிப்பாடகியாகத் திகழ்கிறார். வருடா வருடம் அவரது இசைக் கச்சேரியை இங்கு ஏற்பாடு செய்வதன் மூலம் ஈழத்துக்கும் கௌரவம் அளிக்கிறார். இசை என்றதும், ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த வீணை எஸ்.பாலச்சந்தருடன் டாக்டர் நவரத்தினத்துக்கு இருந்த நெருக்கம் நினைவுக்கு வருகிறது. 'பொம்மை' படத்தை எடுத்தவர். லண்டனுக்கு வருகிறபோது டாக்டர் சந்திப்பார். ஒரு தடவை லண்டனில் அவரது துணைவியாருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டபோது, சிகிச்சை அளித்து குணமாக்கிய நன்றியை மறக்காது தமிழ் நாட்டுக்கு டாக்டர் நவரத்தினம் போகிறபோது எல்லாம் சந்திப்பார். தனது காரில் ஏற்றி, மெரினாக் கடற்கரைக்குச் சென்று, இருவருமாக நடந்து, காற்று வாங்கியபடி இசையின் இனிமையைப் பற்றி பேசியதை இன்னமும் மறக்கவில்லை.

மாபெரும் பாடகிகள் ராதா - ஜெயலட்சுமி, எம்.எல்.வி, சுதா ரகுநாதன் போன்றவர்களோடும், நடன தாரகைகள் சித்ரா விஸ்வேஸ்வரன், பத்மா சுப்ரமணியம் ஆகியோர்களோடும் அவருக்குள்ள ஈடுபாட்டையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

ஒரு மனிதன் நல்ல வண்ணம் வாழவேண்டுமானால், வாழ்க்கையில் ஒரு நல்ல இலட்சியம், பொழுது போக்காக அமைய வேண்டும். வாழ்வதற்குப் போதிய வருமானம் தரக்கூடிய ஒரு தொழில் இருக்க வேண்டும். அவனுக்கு ஆதரவு செய்யக்கூடிய குடும்பம் அமைய வேண்டும். உற்றவர்கள் அவனுக்கு உதவி செய்யாவிடினும், உபத்திரவம் செய்யாமல் இருக்க வேண்டும்.

டாக்டர் நவரத்தினத்தின் அற்புதமான வாழ்க்கை இந்தப் பாடத்தைத்தான் எனக்குப் போதித்தது. அவர் மேலும் பொலிவுடன் வாழ நண்பர்கள் வாழ்த்துகின்றனர். அந்த வாழ்த்து ஒலிகளோடு எனது குரலும், எனது குடும்பத்தின் குரலும் இணைகின்றன.

# பத்தும் பலதும்

ஈழத்து ஹரி

லண்டனில் மீண்டும் மலர இருக்கும் 'புதினம்' பத்திரிகையில் ஒரு பத்தியை எழுதுமாறு ஆசிரியர் கேட்டிருந்தார்.

'பத்தும் பலதும்' என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவர இருக்கும் இந்தப் பத்தியை எழுத இருக்கும் என்னை மூத்த ஊடகவியலாளர் என்று ஒருசிலரும் கத்துக்குட்டி ஊடகவியலாளர் என்று மற்றுமொரு சாராரும் குறிப்பிடுவது வழமை.

இந்தப் பத்தியில் என்ன இருக்கும்? என்ற கேள்விக்கு எல்லாமே இருக்கும் என்பதுதான் பதில். எல்லாமே என்றால் எல்லாமேதான்.

செய்திகள் இருக்கும் தகவல்கள் இருக்கும் சர்ச்சைகள் இருக்கும் உண்மைகள் இருக்கும் காதல் இருக்கும் கடந்த கால அனுபவங்கள் இருக்கும் முன்னோர்களின் நினைவுகள் இருக்கும் பெரியவர்களின் ஆலோசனைகள் உட்பட எல்லாமே இருக்கும். நிச்சயம் பொய்யும் புரட்டும் இருக்காது.

எல்லாமே எழுதலாம், ஆனால் ஊடகத் துறையின் நெறிமுறைகள் பிறழ அனுமதிக்கப்பட மாட்டாது என்று புதினத்தின் பிரதம ஆசிரியர் கண்டிப்பான உத்தரவையும் விடுக்கத் தவறவில்லை.

அது என்ன 'பத்தும் பலதும்'? 'பலதும் பத்தும்;' என்பதுதானே சார் என்று கூறுபவர்களும் உண்டு, ஏன் இரண்டுக்கும் அர்த்தம் ஒன்றுதானே.



சிறிலங்காவில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எல்லாமே, ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு முன்னோடியாக ஊடகத் துறையின் குறிப்பாக தமிழ் ஊடகத் துறையின் குரல் வளையை நசுக்குவதையே தமது முதற் பணியாக மேற்கொண்டு வந்திருக்கிறது.

அந்த வகையில் இன்று வரை தொடரும் அரசாங்கம் மற்றும் அரசின் கையாட்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கைங்கரியத்துக்குப் பல ஊடகவியலாளர்கள் தமது உயிர்களை - உடமைகளை - அவயவங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

இவ்வாறு அரச பயங்கரவாதத்தினால் முதன் முதலில் பாதிக்கப்பட்டு சிறையில் அல்லலுற்ற ஊடகவியலாளர், யாழ்ப்பாணம் ஈழநாடு தினசரியில் சுமார் 20 ஆண்டுகளாகப் பணியாற்றிய இரத்தினம் கந்தசாமி அவர்களே ஆவார்.

இரத்தினம் கந்தசாமி அவர்கள் 1986ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி முதல் அதே ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் திகதி வரை சிங்களச் சிறைகளில் அடைக்கப்பட்டு சொல்லொணாத் துயரங்களை அனுபவித்திருக்கிறார்.

ஊடகவியலாளர் இரத்தினம் கந்தசாமி அவர்கள் கொழும்பு, நித்தம்புவ, அனுராதபுரம் காவல் நிலையங்கள் மற்றும் அனுராதபுரம், கண்டி - போகம்பரை சிறைச்சாலைகளில் நான்கு மாதங்களுக்கு



மேலாக அடைக்கப்பட்டு அவதியுற்றதற்குக் காரணம் அவர் தனது கடமையில் கண்ணாக நேர்மையுடன் பணியாற்றியதே ஆகும்.

''நான் செய்த தவறு, ஈழத் தமிழனாகப் பிறந்தது, அது மட்டுமல்லாது ஈழத் தமிழ ஊடகத் துறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியது மட்டுமே'' என்று கந்தசாமி அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

சிறிலங்காவின் இன்றைய ஆட்சியில், தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்கள் அனுபவித்தஅனுபவித்து வரும் அவலங்கள் வரலாற்றின் இருண்ட பக்கங்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

எனினும், முதன் முதலில் சிங்கள ஆட்சியாளர்களின் இரும்புக் கரங்களினால் நசுக்கப்பட்ட இரத்தினம் கந்தசாமி அவர்களை ஈழத்து ஊடகங்கள் மட்டுமல்லாது தமிழ் ஊடகத் துறையினரும் முற்றாக மறந்து விட்டனா. அண்மையில் பாரிஸ் நகருக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியிருந்தது. ஊடகங்களினாலும் ஊடகத் துறையினராலும் மறந்து ஒதுக்கப்பட்ட இரத்தினம் கந்தசாமி அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் வந்தபோது அவரிடமே இதுபற்றிக் கேட்டேன்.

'இவர்கள் எல்லோரும் அப்படித்தான்' என்ற விரக்தியுடன் கலந்த பதிலே அவரிடம் இருந்து வந்தது.

• • • • •

அண்மையில், பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது எனக்கு அருகில் இருந்த ஒருவர் ஓரளவு பழக்கமானவர், திடீரென, "இந்த ஆண்டின் அதிசிறந்த 'ஜோக்' ஒன்று சொல்லட்டுமா?" எனத் தொடங்கி கூறியதை வாசகர்களுக்காக இங்கே முன்வைக்கிறேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று என்னைக் கேட்டுக் கொண்டார். இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. தமிழ் அமைச்சர் ஒருவரின் சேவையை இழப்பதற்கு மஹிந்த ராஜபக்ச விரும்பவில்லை. அதனாலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார் என யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியாளர்களிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார்.

இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இந்த தகவலைத்தான் அவர் இந்த ஆண்டின் 'ஜோக்' என்று கூறினார்.

"இது 2013ம் ஆண்டின் அதிசிறந்த 'ஜோக்' என்று சொல்ல முடியாதா?'' என்று எனது பேருந்து நண்பர் பெரிய சிரிப்புடன் சொல்லி முடித்தார்.

• • • • •

உலக நாடுகளில் இன்றுள்ள விளையாட்டுக்களில் உதைபந்தாட்டத்துக்கே பல கோடி ரசிகர்கள் இருக்கிறார்கள் என்று கூறுமளவுக்கு அந்த விளையாட்டு சர்வதேசங்களையும் ஆக்கிரமித்திருக்கிறது. இந்தப் பிரபல்யம் மிக்க உதைபந்தாட்டம் தொடர்பான ஒரு தகவல் இதோ:

FIFA என்று அழைக்கப்படும் உலக உதைபந்தாட்டத்துக்கான சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் 1904ம் ஆண்டு



மே மாதம் 21ம் திகதி பாரிஸ் நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாரிஸ் நகரில் உள்ள rue saint-honoré என்ற வீதியில் அமைந்திருந்த கட்டடத்தில் பிரான்ஸ் உட்பட ஏழு ஐரோப்பிய நாடுகளுடன் இந்த சம்மேளனம் ஆரம்பமானது.

பின்னர் நான்கு ஆண்டுகள் கடந்து தென் ஆப்பிரிக்காவே ஐரோப்பாவுக்கு வெளியே இருந்து இந்த சம்மேளனத்தில் அங்கத்துவ நாடாக இணைந்து கொண்டது.

உலகக் கிண்ணத்துக்கான முதலாவது உதைபந்தாட்டப் போட்டியை இந்தச் சம்மேளனமே முதன் முதலாக 1930ம் ஆண்டில் நடத்தியது. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் உறுகுவே நாட்டின் அணி, ஆர்ஜன்ரினா அணியை தோற்கடித்து முதலாவது உலகக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டது. இன்று 200 நாடுகள் அங்கம் வகிக்கும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வருகிறது.



அடுத்ததாக ஒரு பயங்கரமான 'கிறைம்' கதை சொல்லப் போகிறேன். நான் அல்ல, 'கிறைம் கதை மன்னன்' என தமிழக ஊடகங்களினால் அழைக்கப்படும் ராஜேஷ் குமார்தான் அந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்.

தமிழகத்தில் வெளிவரும் குமுதம் சஞ்சிகைக்கு கடந்த ஆண்டில் வழங்கிய செவ்வியில் ஒரு கேள்வி பதிலைப் பார்ப்போம்.

**கேள்வி:** ஒரே ஒரு சொல்லில் ஒரு பயங்கரமான மர்மக் கதை சொல்லுங்கள் பார்க்கலாம்?


**பதில்:** ஓ.கே. 'ராஜபக்ச'

# DOCTOR
# ஸ்ரீதரன்

வெளிநாடுகளில் வாழும் ஆசிய இனத்தவர்களில் மிக அதிகமானோர் அவர்களின் இள வயதிலேயே மாரடைப்பால் இறப்பதற்கு அவர்களின் உணவு வகைகளே காரணம் என படித்தவர்கள் பலர் பணிபுரியும் அமெரிக்காவின் மிகப் பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கூறுகிறது. இதை மனதார நம்பும் படித்தவர்கள் பலரில் பொறியியலாளர் பாஸ்கரனும் ஒருவர்.

கடந்த இருபது வருடங்களாக இலண்டனில் வசிக்கும் இந்தியாவைப் பிறப்பிடமாக கொண்ட பாஸ்கரனுக்கு மருத்துவ விஞ்ஞானத்தில் அபார நம்பிக்கை. உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக மருத்துவ விஞ்ஞானம் கூறும் சகல விதிமுறைகளையும் தவறாது கடைப்பிடிப்பவர் பாஸ்கரன்.

அவர் புகை பிடிப்பதில்லை - புற்று நோயிலிருந்து தப்புவதற்காக. மது அருந்துவதில்லை - இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருப்பதற்காக. மாமிசம் புசிப்பதில்லை - எடையைக் கட்டுப்பாட்டுடன் பாதுகாப்பதற்காக. இனிப்பு பதார்த்தங்களை தொடுவதேயில்லை - நீரிழிவு நோயை விரட்டுவதற்காக. இப்படி எதை எதையோ தியாகம் செய்து தனக்குத்தானே அவர் அன்றாடம் விதித்துக்கொண்ட கட்டுப்பாடுகள் - நெறிமுறைகள் ஏராளம் ஏராளம்!




ஆண்டுதோறும் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைகள் கூட அவரது உடல் நிலை ஆகா - ஓகோ என்று இருப்பதாக ஊர்ஜிதம் செய்தன.

ஒரு நாள் - திருமணமாகாத பதினாறு வயதுடைய அவருடைய ஒரே மகள் அருந்ததி ஒரு ஆப்பிரிக்க இனத்தவனின் பிள்ளையை வயிற்றில் சுமப்பதாக அறிந்தபோது மாரடைப்பால் இறந்து போனார் பாஸ்கரன்! இறக்கும்பொழுது பாஸ்கரனுக்கு வயது நாற்பத்தி ஐந்து!

பாஸ்கரன் இறந்த செய்தியை கேள்வியுற்ற - அவர் மகள் அருந்ததியின் நிலை தெரியாத - பாஸ்கரனின் படித்த நண்பர்களும் உறவினர்களும் இப்பொழுது தங்கள் உணவு விஷயத்தில் முன்னைவிட அதிக உஷாராக இருக்கிறார்கள்! அவர்கள் கொழுப்புச்சத்து நிறைந்த பதார்த்தங்களை தங்கள் உணவில் சேர்த்துக்கொள்வதில்லை. அன்றாடம் உள்ளெடுக்கும் கலோரிகளை தவறாது கணக்கில்வைத்துக்கொள்கிறார்கள். தங்கள் வயது - உயரம் - எடை -இவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளை அடிக்கடி சோதனை செய்து கொள்கிறார்கள்.

பாஸ்கரன் இறந்த செய்தியை கேள்வியுற்ற - அவர் மகள் அருந்ததியின் நிலை தெரிந்த- பாஸ்கரனின் படித்த நண்பர்களும் உறவினர்களும் இப்பொழுது தங்கள் பிள்ளைகளை தாங்களே தினமும் பாடசாலைக்கு காரில் அழைத்துச் செல்கிறார்கள். அவர்கள் தனியே செல்வதை தடுப்பதற்காக. வெள்ளிக்கிழமைகளில் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள்- பக்தி வளர்வதற்காக. வார விடுமுறையில் திருக்குறள்- பரத நாட்டியம்- கர்நாடக சங்கீதம் போன்றவற்றை கற்க வைத்து அவர்களை மிகுந்த கலாச்சாரத்துடன் வளர்க்கிறார்கள்- கண்ணகியை போல!

எதை எதையோ எதிர்பார்த்து - அன்றாடம் ஏதேதோ செய்து கொண்டிருக்கும் இவர்கள் மட்டுமா இங்கு அரைகுறைகள்?



ஒரு கசாப்புக் கடைக்காரனுக்கு மாமிசமாகவும்
வராட்டி விற்பவனுக்கு சாணியாகவும்
செருப்பு தைப்பவனுக்கு தோலாகவும்
சிவ பக்தனுக்கு கோமாதாவாகவும்
கோவில் காளைக்கு யோனியாகவும் காட்சியளிக்கும்
புல் வெளியில் மேயும் அந்தப் பசு
இவர்களின் பார்வைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட
இவர்களின் பார்வைகளால் புரிந்து கொள்ள முடியாத ஒரு முழுமை.

பிறந்த இனம் - பேசும் மொழி - கற்ற கல்வி - வாழ நேர்ந்த சூழல் - புகுத்திய சமயம் - சொல்லிக் கொடுத்த கலை - நம்பிய கலாச்சாரம் - இவை உருவாக்கிய நம் மனம் கொடுக்கும் தோற்றங்களே நாம் பார்க்கும் உலகம்.

இது தான் உலகம் - இது தான் பொதுவான உண்மை - இப்படித்தான் வாழ வேண்டும் - என்று இங்கு எதுவுமே கிடையாது.

யாரோ - என்றோ - எதற்காகவோ - காட்டிய - காட்ட முயற்சித்த உலகத்தை - பொய்யான வெறும் தோற்றங்களை - உண்மை என்று நம்பி - அவற்றிற்கு நாமே அர்த்தம் கொடுத்து - தேவையற்ற எத்தனையோ சுமைகளை பொதி மாடுகள் போல தலையில் ஏற்றிக் கொண்டு - பிறந்ததிலிருந்து இறக்கும் வரை செக்கு மாட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நாம் அன்றாடம் பார்த்துப் பழகி - இது தான் நிஜமென்று நம்பும் இந்த உலகத்தின் வேறொரு பரிமாணத்தை - முற்றிலும் வேறொரு தோற்றத்தை - உங்களுக்கு காட்ட முயற்சிக்கிறது என் எழுத்துக்கள்.

அசிங்கமோ - ஆபாசமோ - தெய்வீகமோ - நான் பார்க்கும் உலகம் என் மனக் கண்ணாடியின் பிரதிபலிப்பு மட்டுமே- - நான் பார்க்கும் உலகமல்ல அடுத்தவன் பார்க்கும் உலகம்- நான் பார்ப்பதால் இது சரி என்பதும் இல்லை - அவன் பார்ப்பதால் அது பிழை என்பதும் இல்லை - எல்லாமே நம் பார்வைகள் உருவாக்கும் வெறும் தோற்றங்கள்தான் என்று நாம் சிந்திக்க ஆரம்பிக்கும் போது- இங்கு எல்லாமே வெறும் நிழல்கள்தான்- வெறும் பம்மாத்துகள் தான் - என்ற பொதுவான உண்மை வெளிப்படுகிறது. அப்பொழுது தோற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழுமையை நம் மனம் நாடும் போது - நாட முயற்சிக்கும்போது- தோற்றங்கள் மெதுவாக மறைகின்றன. சுமைகள் தானாக இறங்குகின்றன. செக்குமாட்டு வாழ்க்கை நின்று போகிறது.

அந்த வாழ்க்கை ஒரு பண்டிகை! அங்கு நாள் எல்லாம் பௌர்ணமி! நாம் எல்லாம் புத்தர்கள்! இதுவே இந்த நூலின் மூலம் எனது பங்களிப்பு.

## வெற்றுக்குடங்கள்



அன்று சனிக்கிழமை. நேரம் இரவு பன்னிரண்டு மணி. மாடியில் அமைந்திருக்கும் தனது படுக்கை அறையில் சுகமாக உறங்கும் சுகந்தனின் தூக்கம் கலைகிறது. அந்தத் தெருவே அதிரும்படி குரைத்த அவனுடைய நாய் திருவள்ளுவரினால். சுகந்தன் ஒரு நித்திரை பிரியன். அதைக் கெடுக்கும் எதையும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது.

திருவள்ளுவரை அதட்டி மேலே அழைத்து அது மேலும் குரைக்காதவாறு அதை ஒரு அறையில் பூட்டி விடுகிறான். அதன் பின் நிம்மதியான உறக்கம் சுகந்தனுக்கு.

மறுநாள் காலை மிகப் பெரிய கொட்டாவியுடன் அமர்க்களமாக கண் விழித்த சுகந்தனுக்கு மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்களெல்லாம் இரவு திருட்டுப் போய் விட்டன!

நடந்ததைக் கேட்ட சுகந்தனின் நண்பனுக்கு ஒரே சிரிப்பு. அவன் சுகந்தனுக்கு உரைத்த கீதை இது:

“உனது நாயின் குரைப்பு ஒரு காரியம். அதன் காரணம் இங்கு நடமாடிய திருடன். காரணம் இன்றி இங்கு ஒரு போதும் காரியம் இல்லை. ஆனால் காரணத்தை அறியாமல் - அறிய முயற்சிக்காமல் - காரியத்தை மட்டும் பார்த்து - அதற்குப் பரிகாரம் தேட முயற்சித்தால் - காரணம் மிக விபரீதமான வேறு பல புதிய காரியங்களை உருவாக்கி விடும்.”

சுகந்தனுக்கு இது நன்றாகவே புரிந்தது.

ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன.

சுகந்தன் இன்று ஒரு ஆங்கில டாக்டரைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருக்கிறான். கடந்த சில தினங்களாக அவனுக்கு ஒரு வகை வயிற்று வலி. எப்போது வரும் - எப்போது போகும் என்று சொல்ல முடியாது. இப்பொழுதெல்லாம் அவனால் நன்றாக உறங்கக்கூட முடிவதில்லை.

சுகந்தனின் குறையைக் கேட்ட டாக்டர் கூறினார்:

“இன்றிலிருந்து அந்த வயிற்று வலி வரும் போது நான் இப்பொழுது கொடுக்கும் மாத்திரையை அருந்துங்கள். உடனே வலி பறந்து விடும். நிம்மதியாக உறங்கலாம்.”

வெளியே வந்து மாத்திரைகளை குப்பைத் தொட்டியில் போட்ட சுகந்தன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்:

“குரைத்த நாயை மேலே அழைத்து அதை அறையில் அடைத்த நான் ஒரு குறை குடம். வயிற்று வலிக்கு மாத்திரை தந்து வலியை மட்டும் மறைக்க வைக்கும் இவன் ஒரு .வெறும் குடம்.”

எத்தனை குறைகுடங்களை பரலோகம் அனுப்பியிருக்கிறார்கள் இந்த வெற்றுக்குடங்கள்!

# எம்.ஜி.ஆரை எப்படி பிரபாகரன் சந்தித்தார்





## ஒரு பழைய வரலாறு மறக்காத நினைவு

ஐந்து பேரையும் சந்திக்க வேண்டும் என்றார் எம்.ஜி.ஆர். ஈழத் தமிழர்களுக்காக பத்துக்கும் மேற்பட்ட போராளி இயக்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. இருந்தாலும் ஐந்து இயக்கங்கள் மட்டுமே தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தன. அவர்களுக்குத்தான் ஆதரவாளர்களும் அதிகம். போராளிகளும் அதிகம்.

தமிழீழ விடுதலைப் புலிகள், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ப்ளொட், ஈரோஸ். இந்த ஐந்து இயக்கங்கள்தான் பிரதானமானவை. அவர்களைத்தான் எம்.ஜி.ஆர் சந்திக்க விரும்பினார். அழைப்பு விடுக்கப்பட்டது. ரகசியமாக அல்ல; பகிரங்க அழைப்பு.

மறுநாள் காலை தினசரிகளை எம்.ஜி.ஆரின் அழைப்பு ஆக்கிரமித்திருந்தது. போராளி இயக்கத் தலைவர்களுக்கு ஆச்சரியம். முதலமைச்சர் தாமாக விரும்பி அழைக்கிறார். பின்னணி என்னவாக இருக்கும்? பதில் தெரிவதற்குள் அடுத்த அழைப்பு வந்து சேர்ந்தது. இந்தமுறை, கருணாநிதியிடம் இருந்து. எம்.ஜி.ஆர் அழைத்த தினத்துக்கு ஒரு நாள் முன்னதாகவே.

கொஞ்சம் பின்வாங்கினர் போராளி இயக்கத் தலைவர்கள். குறிப்பாக, பிரபாகரன். இரண்டு தலைவர்களும் போட்டி போட்டுக் களம் இறங்கினால் அது நம்முடைய எதிர்காலத்தைப் பாதித்துவிடும். இரண்டு பேருமே அரசியலில் எதிரெதிர் முகாமைச் சேர்ந்தவர்கள். கலைஞரைத் சந்தித்தால் எம்.ஜி.ஆர் கோபித்துக் கொள்வார். சந்திக்காமல் விட்டால் கலைஞர் கோபித்துக் கொள்வார். வேண்டாம். ஈகோ அரசியலுக்குள் நாம் சிக்க வேண்டாம். கொஞ்சம் பொறுமை காப்போம் என்றார் பிரபாகரன். அண்டன் பாலசிங்கத்துக்கும் அதுதான் சரி என்றுபட்டது. கிட்டத்தட்ட அதே அலைவரிசையில்தான் ப்ளொட் இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரனும் சிந்தித்தார்.

மற்றவர்களுக்கு அப்படித் தோன்றவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபா, டெலோவின் சிறீசபாரத்னம், ஈரோஸின் பாலகுமார் ஆகியோர் மட்டும் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினர். விஷயம் எம்.ஜி.ஆருக்குச் சென்றது. உளவுத்துறை அதிகாரி அலெக்சாண்டரை அழைத்தார். அந்த மூன்று பேரையும் வரவேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். ஆனால் பிரபாகரனை உடனே வரச்சொல்லுங்கள். பேச வேண்டும். உடனடியாக.

சென்னை அடையாறில் இருந்தது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் செயலகம். விஷயத்தைச் சொன்னதும் பாலசிங்கத்துக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. அலெக்சாண்டரை நிமிர்ந்து பார்த்தார். "எதற்கும் பிரபாகரனிடம் கேட்டுச் சொல்கிறேனே".

"முதலமைச்சர் காத்துக் கொண்டிருப்பார். ஏமாற்றிவிடவேண்டாம். நீங்கள் முதலமைச்சரையும் தமிழக அரசையும் பகைத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் செயல்படுவது சிரமம்". புறப்படத் தயாரானார் அலெக்சாண்டர்.

"உமா மகேஸ்வரனையும் சந்திப்பாரா?"

"ஆம். ஆனால் உங்களுடன் இல்லை. பிறகு."

அண்டன் பாலசிங்கம், பேபி சுப்ரமணியம், சங்கர், நித்தியானந்தன் ஆகியோர் எம்.ஜி.ஆர் இல்லத்துக்குள் நுழைந்தனர்.

"பிரபாகரன் வரவில்லையா?" எடுத்த எடுப்பிலேயே கேட்டுவிட்டார் எம்.ஜி.ஆர்.

"பயிற்சிப் பாசறைக்குச் சென்றிருக்கிறார். சென்னைக்கு வெகு தொலைவில்."

"கலைஞரின் அழைப்பை நீங்கள் ஏன் ஏற்கவில்லை?"

"நீங்கள் அழைப்பு விடுத்த பிறகுதான் அவர் அழைத்தார். ஆனால் ஒருநாள் முன்னரே சந்திக்க வேண்டும் என்று சொன்னார். உங்களுடன் போட்டிபோட்டு அரசியல் லாபம் தேட முயற்சி செய்தார். அதனால்தான் தவிர்த்துவிட்டோம்."


எம்.ஜி.ஆரின் முகத்தில் லேசான புன்னகை. போராளிகள் பிரிந்து செயல்படுவது பற்றிக் கேட்டார். உமா மகேஸ்வரன் பற்றியும் கேட்டார். விளக்கம் சொன்னார், பாலசிங்கம். நீண்ட நாள்களாகக் கேட்க வேண்டும் என்று நினைத்த கேள்வியை இப்போது கேட்டார் எம்.ஜி.ஆர்.

"நீங்கள் எல்லாம் தீவிரவாதிகள் என்று என் அமைச்சர் ஒருவர் சொன்னார். அது உண்மையா?"

"நாங்கள் புரட்சியாளர்கள், சுதந்திரப் போராளிகள். தமிழ்ழத்தின் சுதந்தரத்துக்காகப் போராடுபவர்கள். எங்களுடைய லட்சிய உறுதிக்குப் பெயர் தீவிரவாதம் அல்ல; விடுதலை வேட்கை."

மௌனமாகத் தலையசைத்தார் எம்.ஜி.ஆர். எதுவும் பேசவில்லை. பிறகு பேபி சுப்ரமணியம் எழுந்து சில புகைப்படங்களை எம்.ஜி.ஆரிடம் காட்டினார். சிங்களர்கள் தமிழர்களுக்கு எதிராக நடத்திய கொடுமைகளின் சாட்சியங்கள். அதிர்ச்சியாக இருந்தது எம்.ஜி.ஆருக்கு. பேசப்பேச மேலும் பல விஷயங்கள் எம்.ஜி.ஆரின் கவனத்துக்கு வந்தன.

தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கு மத்திய அரசு ஆயுத உதவியும் ராணுவப் பயிற்சியும் தருகிறது. ஆனால் அந்த ஆயுதங்கள்



பயன்பாட்டுக்கு உகந்தவை அல்ல; பழைய ஆயுதங்கள். பயிற்சித் திட்டத்தில்கூட மற்ற போராளி இயக்கங்களுக்குத்தான் முன்னுரிமை. விடுதலைப்புலிகளைக் கொஞ்சம் இளக்காரமாகத்தான் நடத்துகிறார்கள். உண்மையில் தமிழீழம் மீது இந்திய அரசுக்கு அக்கறை இல்லை. தன்னுடைய பூகோளம் அரசியல் நலனைக் கருத்தில் கொண்டே போராளிகளுக்கு இந்திய அரசு உதவுகிறது. இலங்கை அரசின்மீது தன் ஆதிக்கத்தைத் திணிக்க போராளிகள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

எம்.ஜி.ஆருக்கு அதெல்லாம் புரிந்தது. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஏன் நிதியுதவி உள்பட எல்லாமே மறுக்கப்படுகிறது என்பது மட்டும் புரியவில்லை. அதற்கும் அண்டன் பாலசிங்கமே விளக்கம் கொடுத்தார். நாங்கள் இந்திய அரசுக்கு வளைந்துகொடுக்க மாட்டோம் என்பது அவர்களுக்கு நன்றாகத்தெரியும். அவர்களுடைய ரகசியத் திட்டங்களை நிறைவேற்ற நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம் என்பதும் புரிந்திருக்கிறது. அதுதான் பிரச்னை.

"என்னவேண்டும் உங்களுக்கு?"

நிமிர்ந்து பார்த்தார் பாலசிங்கம். எம்.ஜி.ஆர் முகத்தில் அதே புன்னகை. அதில் நம்பிக்கை தெரிந்தது பாலசிங்கத்துக்கு. கேட்டால் கொடுக்கக்கூடியவர் என்பதும் புரிந்தது. துணிச்சலாகக் கேட்டார்.

"எங்களிடம் இருநூறு போராளிகள் இருக்கிறார்கள். மேலும் பல போராளிகளைச் சேர்க்க வேண்டும். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். ஆயுதங்கள் வாங்கவேண்டும். பண உதவி செய்ய வேண்டும்."

"எவ்வளவு வேண்டும்?"

பாலசிங்கத்துக்குத் தொண்டை வறண்டு விட்டது. உண்மையாகவே உதவி செய்யப் போகிறாரா? திடீரென்று எவ்வளவு வேண்டும் என்று கேட்டதும் பாலசிங்கத்தால் நம்பமுடியவில்லை. தடுமாற்றம். மெல்ல சுதாரித்துக் கொண்டார்.

"பெரிய தொகை..."

"அது சரி, எவ்வளவு வேண்டும். அதைச் சொல்லுங்கள்."

பாலசிங்கத்தின் தடுமாற்றத்தைப் புரிந்துகொண்டு சங்கர் முன்னே வந்தார்.

"இரண்டு கோடி."

"அவ்வளவுதானா? நாளைக்கே கொடுத்துவிடுகிறேன்."

காற்றில் மிதப்பதுபோல இருந்தது அண்டன் பாலசிங்கத்துக்கு.

இலங்கை அரசால் கடும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி, இன்னல்களை அனுபவித்து, தமிழகம் கைகொடுக்கும் என்று நம்பிவந்தபோது இந்திய அரசால் புறக்கணிக்கப்பட்டு, அவமானத்தால் தலைகுனிந்த சமயத்தில் இரண்டு கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்து அவர்களுடைய தலையையும் முதுகையும் நிமிர்த்துவிட்டிருந்தார் எம்.ஜி.ஆர். அடுத்த வாரமே எம்.ஜி.ஆரை நேரில் வந்து சந்தித்தார் பிரபாகரன். தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அவருடைய குடும்பம், பேராட்டப் பின்னணி என எல்லாவற்றையும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டார் எம்.ஜி.ஆர். இனிய விருந்தோடு முடிந்தது முதல் சந்திப்பு. விடைகொடுத்தார் எம்.ஜி.ஆர்.

"மீண்டும் சந்திக்கலாம் தம்பி!"

- ஆர்.முத்துகுமார்



# விமலின் பக்கம்


தலைவரும் விசுவாசிகளும்

இராமாயணத்தில் இலங்காபுரியை ராவணன் என்றோர் ராட்சதன் ஆண்டு வந்தான். தனக்குப் பக்கபலமாக தனது சகோதரர்களையும் அருகில் வைத்துக்கொண்டு, அராஜகம் செய்து வந்தான் அவன்! ஆனாலும் அவன் ஒரு சிவ பக்தன். வீணை விற்பன்னன். தன் வீணை இசையால் கைலைநாதனையே மயக்கியவன். ஈற்றில் திருமாலின் அவதாரமான இராமனால் அழிக்கப்பட்டவன்!

இன்றைய இலங்காபுரியையும் ஒரு அரக்கர் குடும்பத்து சகோதரர்கள் ஆண்டு வருகிறார்கள். ஆட்சிப் பொறுப்பை நடத்துபவன் ராவணேசன். ஒரு விஷ்ணு பக்தனாகத் தன்னை நிறையவே காட்டிக் கொள்பவன். திருப்பதி வெங்கடாஜலபதி, குருவாயூரப்பன், திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி, இவர்களை விழுந்து விழுந்து வணங்குபவன். அதே வெங்கடாஜலபதியையும், விஷ்ணுவையும் நம்பித் துதித்த அப்பாவித் தமிழர்கள் தலையில் குண்டுகளை வெடித்தவன்.




ஸ்ரீலங்காவின் முன்னாள் பாரிஸ் ஜெனீவா தூதர் - ராஜதந்திரி தயான் ஜெயதிலக்க

காக்கும் தெய்வம் என்று நம்பி தாம் வழிபட்ட அந்தக் கற்களும், தம்மைக் கைவிட்டு விட்டன என்று தமிழர்கள் கதறினார்கள். 2009 மே 18 தர்மத்தின் வாழ்வைச் சூது கவ்வியது!

வலி சுமந்த அந்த நாளின், நான்காவது ஆண்டு 2013 மே 18 சனிக்கிழமை, கொழும்பு காலி முகத்திடலில் ஒரு வெற்றி விழாவாக கொண்டாடப்பட்டது. வடபுலத்துத் தமிழர்களின் நிலங்களை, உடைமைகளை, பெண்களின் கற்பை, ஆண் பெண் குழந்தைகள் உயிரைச் சூறையாடிய ராவணாதி சகோதரர்கள், தாம் தமிழ் எதிரிகளை வெற்றி கொண்டு அடக்கி, நசுக்கிவிட்டதாகத் தம்பட்டம் அடித்தார்கள். தலைவன் ராவணேசன் மேடையில் நின்று நிறையவே கொக்கரித்தான். மமதையுடன், ஆணவத்துடன் பேசினான்!

தமிழர்களுடன் சமரசம் செய்யும்படி, நல்லிணக்கம் ஏற்படுத்தும்படி வற்புறுத்தியும்கூட அதனை நிராகரித்து, தட்டிக் கழித்து, திமிருடன் நடந்து வருகிறார்கள் ராவணேசன் தலைமையிலான ராவணாதி சகோதரர்கள்.

சிங்களத் தென்னிலங்கையில் வாழும் தீவிரவாத இனவெறி பௌத்த மக்களின் விபரீத சிந்தனைகளுக்கு விருந்து படைப்பதுபோல இருந்தவை ராவணேசனின் சொற்கள் மட்டுமல்ல, அன்றைய 'வெற்றி விழா' மேடை ஒழுங்குகளும்தான்!

"பழையன மறப்போம். நாம் எல்லோரும் ஒரு தாய் மக்களாக இணைந்து செயற்படுவோம்" என்று தமிழ், முஸ்லீம், கிறித்தவ இனங்களை அரவணைக்கும் நோக்கமே ராவணேசனுக்கு இல்லை என்பதை மேடை பறைசாற்றியது. மேடையில் அன்று தமிழர்கள் யாருமே இருக்கவில்லை. இந்து சமயக்குருக்கள், கிறித்தவ, முஸ்லீம் மதகுருக்களும் காணப்படவில்லை. புத்த பிக்குகள் மட்டுமே காட்சி தந்த மேடை அது.

அதிகம் சொல்வானேன்? அந்த ராணுவ 'வெற்றியை' ராவணாதி சகோதரர்களுக்கு ஈட்டிக் கொடுத்த (முன்னாள்) ராணுவத் தளபதி சரத் பொன்சேகாகூட அந்த வெற்றி விழா மேடைக்கு அழைக்கப்படவில்லை.

தன் ராணுவத்தின் வீர தீர பிரதாபங்களைப் பற்றியும், வீர மரணமடைந்த ராணுவத்தின் குடும்பங்கள் பற்றியும் பேசிய ராவணேசன், தமிழ் மண்ணில் அவரது போரினால் கொல்லப்பட்ட தமிழ் உயிர்களைப் பற்றி பேசவில்லை. பெற்றோரை, வீடுகளை, பாடசாலைகளை, கல்வியை மட்டுமல்ல, தமது எதிர்காலத்தையே இழந்து பரிதவித்து நிற்கும் தமிழ் சிறுவர், சிறுமியர் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை. கணவரையும், குழந்தைகளையும், தமது வாழ்வையும், தமது கற்பையும் இழந்து நிற்கும் இளம் விதவைகள் பற்றி அவர் கண்டு கொள்ளவில்லை. வாலிபப் பருவத்து இளைஞர்களை, யுவதிகளைத் தொலைத்துவிட்டு அழுது புலம்பிக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் பற்றி ராவணேசன் பேசவில்லை. எப்படிப் பேசுவார் அவர்? தமிழ் எதிரிகளை வெற்றி கொண்ட வீரச் சிங்கள பௌத்த தலைவனாயிற்றே அவர்.


தமிழ்மண்ணில் பாதை காட்டும் பலகை
தனிச்சிங்களத்தில் 'தமில்' பேசும் ஜனாதிபதி இதை அறிவாரா?



பிப்ரவரி 4 பிரிட்டிஷாரிடமிருந்து நாடு விடுதலை பெற்ற தினமாம். மே 18 தமிழர்களைத் தோற்கடித்து முழு நாட்டையும் மீட்டெடுத்த வெற்றித் திருநாளாம்!

முப்பது வருட காலப் போரினால் நாட்டின் அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டு நிற்பதாகப் புலம்பும் ராவணேசன் சகோதரர்கள், போர் முடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளிலும் எந்த ஒரு தேசிய அபிவிருத்தித் திட்டத்தையும் ஆரம்பிக்கவில்லை. மாறாக ராவணேசன் மற்றும் சகோதரர்களின் குடும்ப நலன்கள், குடும்ப வங்கிக் கையிருப்புகள் அசுர வேகத்தில் அபிவிருத்தி கண்டுள்ளன என்பதைத் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் கண்டு மனம் வெதும்புகிறார்கள்.

அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!

**(நன்றி - கவுண்டமணி)**



சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களை இப்போது பீதியடைய வைத்திருப்பது இன்னோர் துவேஷமிகு நடவடிக்கை.

'புது பலசேனா' BBS எனப்படும் புத்தர்களின் பலமிகுபடை. இன வெறியைக் கக்கும் இந்த அமைப்பை ஆசிர்வாதம் வழங்கி, ஊக்குவித்து வருகிறார்கள் ராவணாதி சகோதரர்கள். குறிப்பாக எவரது அறிவுரையையும் நிராகரிக்கும் துஷ்ட தம்பி கும்பகர்ணன்!

சிறீலங்கா சிங்கள புத்த பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்றும், முஸ்லீம்களுக்கோ, கிறித்தவர்களுக்கோ இங்கு இடமில்லை என்றும் கனல்கக்கி வரும் இந்த 'புத்த படை' முஸ்லீம் மக்கள் மீது தமது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

"சிங்கள புத்த நாட்டில் முஸ்லீம்களுக்கு

*என்ன வேலை? அவர்கள் ஹலால் உணவு உண்ண வேண்டுமானால் அல்லது முக்காடு போட வேண்டுமானால் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும்!" என்று குரல் எழுப்பியதோடு மிகப் பெரும் முஸ்லீம் நிறுவனமான பாஷன்பக் (FASHION BUG) மீதும் தாக்குதல் நடாத்தியிருக்கிறது. இச்சம்பவத்தில் மூன்று பிக்குகள் உட்பட பதினேழு பேர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர்.*


*"சாமி நாம் பிழைப்பு நடத்தணும். வழக்கெல்லாம் எதற்கு? அவர்களை விட்டிடுங்க" என்று தாக்கப்பட்ட கடையின் முஸ்லீம் அதிபர் கெஞ்சினாரோ தெரியாது? அவரது தலையீட்டினால் பிக்குகளும் மற்றவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். பொலிஸார் புன்முறுவலுடன் விடுவித்தார்கள்.*

*சிங்கள நாட்டில் சிங்களப் புத்த பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளே பிறக்கின்றன. மாறாக - மற்ற இனங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் 5-10 குழந்தைகள் பிறக்கின்றன. இதனால் சிங்கள புத்த மக்களின் ஜனத் தொகை வேகமாகக் குறைந்து வருகிறது என்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.*

*புது பல சேனா போன்ற இயக்கங்களை வளரவிட்டால், தமிழர்களுடனான போர் போல முஸ்லீம்களுடனும் கிறித்தவர்களோடும் போர் விரைவில் மூளலாம் என்றும் அச்சம் வெளியிட்டுள்ள சில நேர்மையான நியாயமான சிங்கள அறிஞர்கள், பெரியோர்கள், மாணவர்கள் மெழுகுதிரி ஏற்றி விழிப்பு இரவு சமாதான அணிவகுப்பு நடத்த முற்பட்டபோது, பொலிஸாரால் அவை முறியடிக்கப்பட்டன.*

*ராவணேசர் ஆட்சியில், அரக்கர் குடும்ப ஆட்சியை கண்டித்து யார் எழுதினாலும், பேசினாலும் அது 'தேச விரோத' நடவடிக்கையாகக் கருதப்பட்டு ராவணேசர் படையால் தண்டனை வழங்கப்படுகிறது. வீட்டுக்கு வெள்ளை வான் அனுப்பப்படுகிறது. இதனால் தமிழ் சிங்கள ஆங்கில ஊடகங்கள் அனைத்தும் நடுநடுங்கிப் போயிருக்கின்றன. அதாவது 'சண்டே லீடர்' ஆசிரியை பிரட்ரிக்கா ஜான்ஸ் போல நாட்டை விட்டு ஓடி ஒழிந்து விட்டனர். நாட்டில் தங்கியிருப்போர் அரச குடும்பத்தினருக்குத் தாளம் போட்டு பீப்பி ஊதிக் கொண்டிருக்கிறார்கள்.*

*இந்த வேளையில் அண்மைக்காலம் வரை அரசாங்கத் தூதரான, பீப்பியாகப் பிரான்சிலும் ஜெனிவாவிலும் ஊதித் தாளம் போட்டுக் கொண்டிருந்த ராஜதந்திர தயான் ஜெயத்திலக ஊடகங்களுக்கு அண்மையில் தெரிவித்துள்ள கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவை.*



*"பயங்கரவாதத்தை ஒழித்தமை மாபெரும் வெற்றிதான்! அதில் மாறுபட்ட கருத்துக்கே இடமில்லை. ஆனால் இப்படிப் பெறப்பட்ட சமாதானம் தொலைந்து போகும் நிலைமை உருவாகலாம். காரணம் - அரசுத் தலைவர் தமது அதிகாரங்கள் பலவற்றைத் தமக்கு நெருக்கமான மிக அனாவசியமான சிலருக்கு வழங்கி இருக்கிறார். அரசை வழி நடாத்தத் தேவையான கொள்கைகளை யார் யார் எப்படித்திட்டமிட்டு உருவாக்குகிறார்கள் என்பது அரசுத் தலைவருக்குத் தெரியாமலிருக்கிறது".*

*"1967இல் இஸ்ரேலிய அரபுப் போரில் இஸ்ரேலிய படைகள் மகத்தான வெற்றியீட்டின. ஆனால் அப்போதைய இஸ்ரேலியத் தலைவர்கள் சமாதானத்தை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகளை செயற்படுத்தத் தவறினார்கள். விளைவு? 46 ஆண்டுகள் கடந்தும் கூட இன்னும் தீர்க்க முடியாத ஒரு பிரச்சனையாக பலஸ்தீன பிரச்சனை இழுபறிப் பட்டுக்கொண்டே இருக்கிறது".*



படைத்தளபதி சரத்பொன்சேகா பதவி பறிக்கப்பட்டு,
அவமானப்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்குமுன் தன் குடும்பத்துடன்

*"அரசுத் தலைவரின் உண்மைகள் கண்டறியும் ஆணையம் தனது அறிக்கையில் பிரேரித்த விஷயங்களை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும்" என்று முன்னாள் தூதர் தயான் ஜெயத்திலக்கா எச்சரித்திருந்தார். தூதர் பதவியில் இருக்கும்போது, அவருக்கு வராத 'சுடலை ஞானம்' பதவி போன பின் வந்திருக்கிறது.*

*எது எவ்வாறாயினும் தூதர் தயான் குறிப்பிட்டது போல, ராவணேசருக்கு நெருக்கமான சிலர் எடுக்கும் சில நடவடிக்கைகள் - ராவணேசரின் கொள்கைகளுக்கு முரணாக இருக்கின்றன.*

*ஒரு உதாரணம்: யாழ்ப்பாணம் போய் மேடையில் பேசுபோது எல்லாம், ராவணேசர் 'சன் டிவியின் தமிழில்' பேசுகிறார். யாழ்ப்பாணப் பொதுமக்கள் வடிவேலு கொமடியைப் பார்ப்பது போல சிரித்தபடி பார்த்து ரசிக்கிறார்கள்!*

*வடபுலத்து தமிழ் மக்கள் கமக்காரர்களோ, கல்வீட்டுக்காரர்களோ, மொழி புரியாத முட்டாள்களோ அல்ல. அவர்களுக்கு ஆங்கிலம் புரியும்; சிங்களமும் தெரியும். ஆனால் பேசுவது இல்லை. இதை அறியாத ராவணேசர் தன்னை மிகவும் வருத்தி 'தமில்' ஏன்பேச வேண்டும்?*

*நான் உங்களுக்கும் தலைவன், உங்கள் மனம் கவர விரும்புகிறேன் என்ற நப்பாசையாக இருக்கலாம். பாவம்! அவர் தயான் ஜெயத்திலக்கா கூறியதுபோல, தம்மைச் சுற்றியுள்ள கொள்கை வகுப்பாளர்கள், வடபுலத்து வீதிப் பெயர்களை என்ன மொழியில் எழுதுகிறார்கள் என்பது ஜனாதிபதிக்குத் தெரியாது போலும்.*

*இக் கட்டுரையுடன் வெளிவந்துள்ள இரு புகைப்படங்களைப் பாருங்கள். வட புலத்து மக்கள் பார்த்துப் பயன்படுத்தும் இரு பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழி மருந்துக்குக்கூட இல்லை. இலங்கையில் தமிழ் ஒரு அரச கரும மொழி என்பது மறந்து விட்டதா, ராவணேஸ்வரர் கூட்டாளிகளுக்கு?*

*இப்படி ஆயிரமாயிரம் கேள்விகள் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் மனதிலும், ஊடகத்துறையினரின் மனதிலும் பதில் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கின்றன! நிலைமையைச் சரி செய்ய ராவணேசர் குடும்பத்தினர் தவறினால், இன்னாளில் சதாம் குசைன் - கடாபி - முபாரக் ஆகியோருக்கு ஏற்பட்ட கதி, முன்னாளில் பிலீப்பின்ஸ் மார்க்கோஸ் - ஈரானின் ஷா மன்னர் ஆகியோருக்கு ஏற்பட்ட கதி, ஹம்பாந்தோட்டை கோடீஸ்வரர்களுக்கும் ஏற்படலாம்.*

**'தர்மத்தின் வாழ்வுதன்னை இன்று
சூது கவ்வியிருக்கலாம்; ஆனால் ஈற்றில் தர்மமே வெல்லும்!**

இந்நூல், பயன் நிறைந்த விடயங்களை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஆழப்பதிய வைக்கும் தன்மையுடையதாக உள்ளது" என எழுதியுள்ளார்.

புலவர் சிவநாதன் அவர்கள் தம் மதிப்புரையில் "தமிழ் எழுத்துக்களையும் சொற்களையும் இனங்காட்டுகின்ற ஒரு பகுதியாக 'அ' பகுதி அமைந்துள்ளதெனலாம். லகர, ழகர, ளகர, ரகர, றகர, ணகர, னகர வேறுபோடுகளையும் தமிழ் நெடுங்கணக்கின் அத்திவாரக் கல்நாட்டல்களையும் மொழிக்கான வசன அமைப்பு விதிகளையும் 'அ' பகுதியில் நிகழ்த்திய பின்னர் 'ஆ' பகுதியில் இலக்கணசாற்றைக் கலசத்திலேந்தியவாறு கற்க வருவோரைக் கண் கொள்கிறான் நூலாசிரியன். மொழியிலக்கணத்தைத் தழுவியவாறே மொழிப்பழக்கத்தை ஊக்குவிப்பதாக இப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. 'இ' பகுதியில் மொழிவளம் முனைப்புப் பெறுகிறது. மொழியைச் சரளமாகப் பேசவும் எழுதவும் கூடிய வகையில் கற்பவரின் மொழிப்பொருள் வளத்தைப் பெருக்குகின்ற நோக்கில் இப்பகுதி விரிவடைந்து நிற்கிறது. சொல்லையும் சொல்லின் பொருளையும் தொட்டு, மரபுத் தொடர்கள், இரட்டைக் கிளவிகள், அடுக்குத் தொடர்கள், உவமைத் தொடர்கள் என வட்டமிட்டு நிற்கும் இப்பகுதி தமிழர் வாழ்வியற் கூறுகளையும் வழிமொழிந்து இலக்கணத்தின் பொருள், யாப்பு, அணி நோக்கி விரல் காட்டி வீறுடன் விடைபெறுகிறது" என விபரித்துள்ளார்.

சிறப்பான விமரிசனங்களோடு நூல் வெளியீட்டு விழா அரங்கினை நோக்கிப் பயணிப்பது பொருத்தமாக இருக்கும். அரங்கினில் விழாத்தலைவர் தமிழறிஞர் வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்களின் தலைமை உரை இடம் பெற்றது. தமிழறிஞர் வழக்கறிஞராகவும் இருப்பதனாலோ என்னவோ, விழாவினை, விழா நோக்கத்தினை மையப்படுத்தி, சீராக, சிறப்பாகத் தெள்ளத் தெளிவாகத் தன் தலைமை உரையினை சபையினர் முன் மொழிந்தார். தலைவர் தம் உரையினைத் தழுவி திறனாய்வாளர் திருவாட்டி, மாதவி சிவலீலன், பேராசிரியர் மு.நித்தியானந்தன், ஊடகவியலாளர் திரு. சூ.யோ, பற்றிமாகரன், நால்வர் தமிழ்ப் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு.சதாசிவம் ஆனந்ததியாகர் ஆகியோர் நூல் ஆய்வு நிகழ்வு ஆரம்பமானது.

நூல் வெளியீட்டு விழாக்களில் பங்கு கொள்ளும் பார்வையாளர்கள் அனைவருமே உரையாளர்களது உரையினை உன்னிப்பாகக் கேட்பதில்லை. காரணம் மக்கள் "ரசனை" ஒன்றாக இருப்பதில்லை. ஆனால் இந்த உயிர்மொழி விழாவில் சபையோர் கவனம் ஆய்வாளர்களைச் சுற்றியே வட்டமிட்டதை எவரும் மறுக்கமுடியாது. இதன் பின்னணி, சபையினரை ஈர்த்த காரசாரமான ஆய்வுதான். அ ஆ இ எனும் நூலில் மொழி அறிமுகம் படிப்படியாக அமைந்திருந்தமை அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. புலம் பெயர் சிறார்களுக்கு தாய்மொழி அறிவினை ஊட்டும் போது இலகு தமிழில் பேச்சுத் தமிழில் நம் அணுகுமுறை இருத்தல் வேண்டுமென்ற முறை முன் வைக்கப்பட்டது. தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் இந்நூல்

## நூல் வெளியீட்டு விழா

21ம் பக்கத் தொடர்ச்சி

பயனளிக்கும் என்றும் கூறப்பட்டது.

இந்நூல் சார்ந்த தரமான, சிறப்பான பல கருத்துக்கள் ஆய்வாளர்களால் விளக்கப்பட்டன. அதேவேளையில் 'சபை மரபு' - அதனைத் தாண்டியும் பல கருத்துக்கள் மேடையில் வெடித்துச் சிதறியதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். 'ஆய்வு' என்றால் என்ன? நிறைவினைப் பாராட்டுவதும், குறையினை நாகரிகமாகச் சுட்டிக் காட்டுவதும் என்று எடுத்துக்கொண்டாலும் கூட உயிர்மொழி அரங்கில் இந்த முறைக்கும் சிறிது சவால் எழுந்ததைப் பேசாமல் இருக்க முடியாது. தமிழ் இலக்கணம், மரபியல், புணரியல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் இப்படி எதுவுமே வேண்டாம் என்றால்... சபை மரபும் வேண்டாமென்றால் பின் தமிழனுக்கு மொழி எதற்கு? பாடசாலைகள் எதற்கு? படிப்பு எதற்கு? பல்கலைக்கழகங்கள் எதற்கு? பட்டங்கள் எதற்கு? ஆசிரியர்கள், பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், தமிழறிஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் இவர்கள் எல்லோருமே எதற்கு என்ற கேள்வி எழுவதிலும் என்ன தவறு?

அவைத் தலைவர் தமிழறிஞர் சிறீக்கந்தராசா அவர்கள் அறுதது, உறுத்து சபைக் கட்டமைப்புக்களை அறிவித்து இருந்தபோதிலும், ஆய்வு அணை மீறிப் பாய்ந்தது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. பல கோணங்களிலும் இருந்து எகிறி வந்த எறிகணைகளை தன் கையில் ஏந்தித் தரமான பதில்களை அளித்தார் தலைவர். கேள்விக்குப் பதில் அளிப்பது இலகு. ஆனால் கேள்விக்குத் தகுந்த பதில் அளிப்பது கடினம். ஆய்வாளர் உரைகட்கு அமைவாக ஆணித்தரமாகப் பதில் உரைத்த தலைவர் திரு.சிறீக்கந்தராசா அவர்களைப் போற்றுவது சாலவும் பொருந்தும்.

தமிழுக்காய் உயிர்நீத்த, தமிழர்கள் எல்லோர்க்கும் சமர்ப்பணமான இம்மலர், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தவர்கள் வரிசையில் வரும் அமரர் ஆங்கிலப் பெருமகனார் அருட்திரு. REV. ALASTAIR ROBIN MCGLASHAN அவர்களுக்கும் சமர்ப்பணமானமை நூலின் பெருமைக்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. இலங்கைக் கல்வி அமைச்சின் முன்னாள் கல்வி மேலதிகச் செயலாளர் உடுவை தில்லை நடராசா அவர்களது வாழ்த்து மடலினை செல்வன், சாகித்தியன் சிவபாலன் வாசித்து அளித்தார். நிதித்துறை விரிவுரையாளர் திரு. க.சிவானந்தன் அவர்கள் அ ஆ இ உயிர் நூலினை வெளியிட்டுக் கௌரவித்தார்.

அ ஆ இ நூல் வடிவில் உருப்பெற உறுதுணையாக இருந்து, அல்லும் பகலும் அயரா ஒத்துழைப்பு நல்கிய திருமதி. செல்வி சிவபாலனுக்கும் இந்நூலின் வெற்றியில் நிறையவே பங்குண்டு. இலை மறை காயான செல்வி. சிவபாலனுக்கும் வாழ்த்துக்கள் கூறியாகவேண்டும். குறை, நிறை, போற்றல், தூற்றல் இவற்றை ஏற்று நன்றியுடன் உரைப்பது ஏற்புரை. ஆய்வாளர்களின் கருத்துக்களை மதித்து, வரவேற்று நன்றி கூறிய நூல் ஆசிரியர் திரு. துரைச்சாமி சிவபாலன் அவர்கள் பேச்சு விழாவினுக்குப் பூரணத்துவத்தை அளித்தது.

சிவமயம்

# ஜெகதீஸ்வரம்

## லண்டன் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

## பிரமோற்சவம் 10ம் வருடத் திருவிழா

அம்மையப்பர் அருள் பெறுக!!



**தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**கொடியேற்றம் 06-07-2013 சனிக்கிழமை**

**தேர்த்திருவிழா பஞ்சரதபவனி 21-07-2013 ஞாயிற்றுக்கிழமை**

05.07.2013 வெள்ளிக்கிழமை தொடக்கம் 24.07.2013 புதன்கிழமை வரை

**66A LONDON ROAD TOOTING LONDON SW17 9HP**

**MOB: 07466 466 178 Tel: 0208 640 4110**

**(Near to Tooting LIDL and behind Halfords**

**opposite Gorrings Park Enter Via 1A Arnold Road)**

# வாசகர் கடிதம்

### பண்பான பத்திரிகை

கடந்த சில மாதங்களாகப் 'புதினம்' இதழைத் தேடிக் களைத்துவிட்டேன். பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறீர்கள். இரண்டு மூன்று கோயில்களுக்குப் போகிற போது எல்லாம் பார்ப்பேன். ஏமாற்றம்தான். பல ஆண்டுகளாக விரும்பிப் படிக்கிற பேப்பரை காணாது, எனக்குத் தெரிந்தவர்களிடம் விசாரித்தேன். இப்போது வருவதில்லை என்று நம்பிக்கையான ஒருவரிடமிருந்து அறிந்த பின்னர்தான், இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஏன் நிறுத்தினீர்கள்? யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றியபோது, நான் அங்கு உங்களை முதலில் சந்தித்திருக்கிறேன். அடிக்கடி பின்னர் சந்தித்திருக்கிறோம். எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும், உங்களது அன்பையும், பண்பையும் மறக்க முடியாதிருந்தது. இங்கு லண்டனிலும் ஓரிரு தடவை உங்களைப் பார்த்துப் பேசியிருக்கிறேன். அதே பண்புடன் பேசினீர்கள். 'புதினம்' இதழும் உங்களைப் போலவே, பண்பான பத்திரிகையாக வெளி வந்து கொண்டிருந்தது. தயவு செய்து எந்தக் கஷ்டமிருந்தாலும் உங்கள் பத்திரிகையை வெளியீடுங்கள். முடிந்த உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறோம். மீண்டும் 'புதினம்' வெளிவரவேண்டும்.

***- எஸ். பாலசுந்தரம், WEMBLEY***

### தொடருங்கள்

போர் முடிந்து விட்டது. இனி எதை எழுதுவது என்று நினைத்துத்தானே 'புதினம்' வருவதில்லை? தலைவர் இல்லையே என்ற ஏக்கம் எத்தனை பேரை வாட்டுகிறது. தலைவர் வருவார். மீண்டும் எங்களைக் காப்பாற்றுவார். மனதை தளரவிடாது, நடுக்கடலில் தத்தளிக்கும் ஈழத் தமிழர்களை மீண்டும் தலை நிமிர்ந்து வாழச் செய்வதில் தமிழன் ஒவ்வொருவனுக்கும் சிறிய பங்காவது உண்டு. 'புதினம்' தனது பங்களிப்பைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பதே எமது அன்பான வேண்டுகோள். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களைத் தட்டி எழுப்பி, எமது உரிமைகளை வென்றெடுக்க 'புதினம்' தனது பணியைத் தொடர வேண்டும்.

***இ.ரவிச்சந்திரன், TOOTING***

### நம்பிக்கை

ஓராண்டு காலம் எப்படிப் போனது என்று தெரியவில்லை. 'புதினம்' வெளிவராமல் போய் ஓராண்டு ஆகி விட்டதா? நம்ப முடியவில்லை! ஆனாலும், காற்றோடு கலந்து வரும் செய்தி ஆறுதலாக இருக்கிறது. இந்தமாதம், அடுத்த மாதம் என்று நம்பியிருந்த எனக்கு யூன் மாதம் 'புதினம்' வரும் என்ற நம்பிக்கையான செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது.

***- செ.சுகுமாரன், NEWMALDEN***

### வெற்றி நிச்சயம்

எதைச் செய்தாலும் நேர்த்தியாக நேர்மையாக செய்தால் நீடித்து நிற்கலாம் என்பது எனது சொந்த அனுபவம். எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறையில் நாணயத்தோடு இருந்தால், எந்தக் கஷ்டம் வந்தாலும், துடைத்தெறியலாம். பத்திரிகைத் துறையும் அப்படித்தான். 'புதினம்' நேர்வழியில் சென்றது. எதிர்பாராத தடை வந்திருக்கலாம். பயப்படாமல், உங்கள் வழியிலேயே செல்லுங்கள். வெற்றி நிச்சயம்!

***- கந்தையாசிறீதரன், ILFORD***

### ஏமாற்றம்

கலைஞர்கள், ஆற்றல் மிக்கவர்கள், எல்லாரையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிற 'புதினம்' இப்போது இல்லை என்பது ஏமாற்றமாகத்தான் இருக்கிறது.

***- ஆர்.தெய்வநாதன், CATFORD***

### பெருமை

இந்த ஆங்கில மண்ணில் தரமான ஒரு பத்திரிகையை அனுபவமுள்ள ஒரு பத்திரிகையாளர் வெளியிட்டு வருவது எங்களுக்கு எல்லாம் பெருமையாக இருந்தது. தமிழீழ உணர்ச்சியை ஊட்டி வந்தீர்கள். உங்களால் ஒரு பத்திரிகையை வெளியிடுவது எப்படிச் சாத்தியமாகிறது என்றுகூட நினைத்ததுண்டு. பதினாறு வருடங்கள் இந்த லண்டனில் ஒரு பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவது என்பது ஆச்சரியமான விஷயம்தான். எப்படியாவது 'புதினம்' வரவேண்டும். அதை நாங்கள் படிக்க வேண்டும்.

***- அஜந்தா குகன், Hounslow***

## நிலம் இழந்த மக்கள்....

*5ம் பக்கத் தொடர்ச்சி*

சட்டத்தை தீர்வாகக் காட்ட முடியாது என்பதோடு, மாகாணசபை தொடர்பாக பொது இணக்கப்பாடு ஏற்படவேண்டுமாயின் முதலில் கொள்கை ரீதியான உடன்பாடு உருவாக வேண்டுமென வலியுறுத்தினார்.

எப்படியாவது வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்கிற நோக்கத்தைக் கொண்ட கூட்டமைப்பினர் , அடிப்படைக் கோட்பாடு குறித்து பேசாமல் தவிர்ப்பது போல் தெரிகிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றாரா அல்லது வென்றாரா என்பதல்ல பிரச்சினை. அவர் முன்வைக்கும் கொள்கை ரீதியிலான விவாதங்களுடன் மக்கள் உடன்படுகிறார்களா என்பதுதான் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம். 1977 இல், பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை வாக்குகள் மூலம் தமிழ் மக்கள் முன்வைத்தார்கள். பின்னர் அதற்கான ஆயுதப்போராட்டத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். விடுதலைப்புலிகளை ஏகதலைமையாக ஏற்றுக்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு, 2004 தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை மக்கள் கொடுத்தார்கள்.

அதிலிருந்து விலகிச் செல்லாமல், தமிழ் தேசத்தின் இறைமை என்பதன் அடிப்படையில் தீர்வொன்றினை முன் வைப்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு என்ன சிக்கல் என்று புரியவில்லை. கிராமசபை அதிகாரங்களைவிட வேறெதையும் சிங்களம் வழங்காது என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்க்கிராம நிலங்களை அபகரித்து, அதையும் சிங்களமயமாக்குவதால், அந்த அதிகாரங்களை பரவலாக்கும் அவசியமும் இனி இருக்காது.

### வட மாகாணசபையில் என்ன நடக்கும்?

இராணுவத்தால் பறிக்கப்படும் நிலங்கள் குறித்து விவாதங்கள் நடக்கும். நாட்டப்படும் புத்தர்சிலைகளை அகற்றக்கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். மாகாண நிதியத்திலிருந்து வடக்கிற்கு நிதி ஒதுக்கப்படவில்லையென்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும்.

ஒரு தலைவலி முடிந்துவிட்டதென இந்தியாவும் மௌனத்தில் ஆழ்ந்துவிடும்.

## ரஜினிக்கு என்ன பிடிக்கும்?

"ரஜினிக்கு தோசைதான் ரொம்ப பிடிக்கும்! ஏன் தெரியுமா?"

"ஏன்?"

"ஏன்னா, இட்லி கூட்டமா வரும்! தோசை தானே சிங்கிளா வரும்!"






## லண்டனில் நடந்த கோவிலூரின் நூல்வெளியீடு

பிரபல ஈழத்து எழுத்தாளரும் கவிஞரும் பாடகருமான கோவிலூர் செல்வராஜனின் 'இல்லாது போன இன்பங்கள்' நூல் வெளியீட்டு விழா, லண்டன் லூய்ஷியம் சிவன் கோவில் மண்டபத்தில் சமீபத்தில், இலக்கியவாதிகளுக்கு மத்தியில் நடைபெற்றது. தமிழ் அறிஞர் கே.மனோகரன் தலைமை தாங்கி நடத்தினார். வரவேற்புரையை பரமேஸ்வரன் நிகழ்த்தினார். அறிமுக உரையை கம்பீரமான குரலில் எழுத்தாளர் முல்லை அமுதன் ஆற்றினார். வாழ்த்துரையை புலவர் சிவநாதன் தனக்கே உரிய இதமான பாணியில் வழங்கி, அனைவரையும் அணைத்தக் கொண்டார். தொடர்ந்து பிரபல ஈழத்து எழுத்தரளர் எஸ். அகஸ்தியர் மகள் நவசோதி யோகரத்தினம் ஆய்வுசெய்தார். பேராசிரியர் மு. நித்தியானந்தன் ஆய்வு வழக்கம்போல பாராட்டும், அதே நேரத்தில் கிண்டலும் கலந்ததாக இருந்தது. எழுத்தாளர் கருணானந்தராசா நூலை வெளியீட்டார். கோவிலூர் நன்றிக்குப் பின்னால், இரவு உபசாரம் அதனை அடுத்து கோவிலூரின் கணீரென்ற குரல் பாடி மகிழ்வித்தது. பிரிந்த டி.எம்.எஸ் அவர்களுக்கு அஞ்சலியாக கோவிலூர் எழுதிப் பாடிய பாடல் நெஞ்சங்களை வருடிச் சென்றது. ஓவண்டிக்காரா சமாணிக்கம் சத்தியமூர்த்தி கோவிலூருடன் இணைந்து பாடிய பாட்டு அனைவரையும் ஈர்த்தது. அருள் பிரகாஷ் பாடிய பாடல் நினைவில் நிற்கிறது. நோர்வேயிலும் இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

# குறையொன்றும் இல்லை கோவிந்தா



எல்லாவிதமான நோய்களுக்கும் நிரந்தரத் தீர்வு, இலவச ஆலோசனை வழங்கப்படும்.

HOMOEO CARE

போன்: 0208 144 1553 வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com